# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



காமரசவல்லிகோயில் -துர்க்கை

மாலை 3] சார்வரி மாசி மார்ச் 1961 [மணி 6

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு

## பொருளடக்கம்


1. ஆலயத்தில் அர்ச்சகர்கள்
2. நவதிருப்பதி அநுபவம்
3. திருநாளைப்போவார் நாயனர்
4. பெரியபுராணத் திறவு
5. திருக்கோவலூர் திருவிக்கிரமப பெருமாள் கோயில்
6. திருக்கோவலூர் வீரட்டேசுவரர் கோயில்
7. கடாரங்கொண்டான் கோயில் திருப்பணி விழா
8. திருவெம்பாவை—திருப்பாவை மாநாடுகள்
9. மலைநாட்டுத் திருப்பதி யநுபவம்
10. திருவண்ணுமலைக் கல்வெட்டுச் செய்திகள்.
11. பருவத்தில் வந்து பயனுற்ற பண்பன்
12. சென்னை கந்தகோட்டம்
13. அறநிலையச் சட்டம்



# திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்

நுங்கம்பாக்கம் ஹைரோடு,

சென்னை-6


## வேண்டுகோள்

*1960 அக்டோபர் முதல் 1961 செப்டம்பர் முடியவுள்ள மூன்றுவிது ஆண்டுக்கான 'திருக்கோயில்'* **சந்தா தொகை ரூ. 10** *அனுப்பும்படி தனித் தனியே பொதுவான சுற்றறிக்கை விடப்பட்டுள்ளது. இதுவரை பணம் அனுப்பிவைக்காதவர்கள் உடனே பணம் அனுப்பும்படி கேட்டுக்கொள் ளப்படுகிறுர்கள்.*

—**ஆசிரியர்.**

திருத்தணி - வீரட்டேசுவரர் கோயிலிலுள்ள

தட்சிணாமூர்த்தி



இடதுகாலை மேலே தூக்கி வைத்திருப்பதும், கீழே மான், எலி, பாம்பு இருப்பதும் கவனிக்கத்தக்கது.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 3] சார்வரி மாசி - மார்ச் 1961 [மணி 6


## ஆலயத்தில் அர்ச்சகர்கள்

ஆலயங்களில் பணி செய்பவர்களில் முக்கிய பங்குடையவர்கள் அர்ச்சகர்கள். இறைவன் திருமுன்பு வழிபாட்டிற்கு வரும் பொதுமக்களுக்கு அர்ச்சனை, ஆராதனை முதலியவற்றைச் செய்து அவர்களைத் தெய்வபக்தியில் ஈடுபடச் செய்யக் கடமைப்பட்டவர்கள். கோயிலின் பெருமை, மூர்த்தி, தலம், தீர்த்தம் இவைகளின் சிறப்புக்கள் முதலியவற்றை ஒருவாறு வழிபடுவோருக்கு எடுத்துக்கூறவும் தெரிந்திருக்கவேண்டும். அவர்கள் தூய ஆடையுடன் சமயச் சின்னங்கள் அணிந்து மிகவும் ஆசாரத்துடன் நடந்துகொண்டு சேவார்த்திகளுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். அர்ச்சனைகளை முறையாகவும் ஒழுங்காகவும் செய்தல் வேண்டும். வடமொழிச் சுலோகங்கள், திருமுறைகள், மற்றும் அத்தலத்தைப்பற்றிய நூல்கள் இவைகளை நன்கு கற்றுணர்ந்து, எடுத்துச்சொல்லும் ஆற்றலும் உடையவர்களாக இருக்கவேண்டும். ஆலயத்திலுள்ள மூர்த்திகளின் தத்துவங்களை விளக்கிச்சொல்லும் திறம்பெற்றிருக்க வேண்டும். வழிபடுவோரிடம் அன்பு, அமைதி, பெருந்தன்மையுடன் நடந்துகொண்டால் அவர்கள் மகிழ்ச்சியடைவதுடன் மேலும் மேலும் இறைவழிபாட்டில் ஈடுபடத் தூண்டுகோலாகவும் இருக்கும்.

தற்போது பெரும்பாலான அர்ச்சகர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் போதுமானதாக இல்லை. அதற்கு முக்கியமான காரணங்கள் இரண்டு. ஒன்று, அர்ச்சகர்களுக்கு விடப்பட்ட மானிபங்களை நாளாவட்டத்தில் அவர்களே பராதீனம் செய்துவிட்டார்கள். ஆதலின் அவைகளிலிருந்து கிடைக்கக்கூடிய வருவாய்களை அவர்கள் இழந்துவிட்டனர். இரண்டாவதாக, ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்படி மானிபங்களுக்காகக் கொடுக்கப்பட்ட ஈட்டுத்தொகையை அர்ச்சகர்களிடமே கொடுக்கப்பட்டு அதைப் பலர் செலவு செய்துவிட்டனர். உதாரணமாக மதுரையைச் சொல்லலாம். இதனால் மானிபங்களிலிருந்து கிடைக்கும் நிலையான வருவாயை அவர்கள் இழந்துபோக நேரிட்டது.

அர்ச்சகர்களின் நிலையை உயர்த்த வேண்டியது அவசியம். பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தைப்போல கோயில் சீரமைப்புத்திட்டம் ஏற்படுத்தவேண்டுமென்று மாநில அறநிலைய ஆலோசனைக்குழுவுடன் ஆராய்ந்து அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. கோயில் தர்மகர்த்தர்களும், ஊர்ப் பிரமுகர்களும் சேர்ந்து குழு அமைத்துத் திட்டம் தயாரிக்கவேண்டும். அதற்கு வேண்டிய நிதியை அல்லது பொருள்களை நிலங்களைத் திரட்டவேண்டும். ஊதியக் குறைவுடைய அர்ச்சகர்களுக்கு நிதியிலிருந்து பொருள் கொடுத்துதவ ஏற்பாடுகள் செய்யவேண்டும். தனி ஓதுவார்கள் நியமிக்கப்போதிய வருவாயில்லாத சிறு கோயில்களில் அர்ச்சகர்களைத் திருமுறைகளை ஓதச்செய்து அதற்காக ஓரளவிற்கு

அவர்களுடைய ஊதியத்தை அதிகப்படுத்தலாம். ஆதிசைவ வேதியர் மரபில் அவதரித்த சுந்தரர்பெருமானை, "நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ்ப் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்" என்பது ஈண்டு நினைவு கூர்தற்பாலது. அர்ச்சகர்கள் நன்முகப் பயிற்சிபெற்று முறையாக அர்ச்சனை செய்து மக்களின் ஆதரவைப் பெறலாம். நிதிபடைத்த கோயில்கள் அர்ச்சகர்களுக்கு வேண்டிய பயிற்சி கொடுக்க ஏற்பாடுகள் செய்யலாம். அப்படிப் பயிற்சி பெற்றவர்களே கோயிலில் பூசை செய்ய வேண்டுமென்ற வழக்கத்தையும் மேற்கொள்ளலாம். பரம்பரை உரிமை கொண்டாடும் அர்ச்சகர்கள் பயிற்சி பெறாதவர்களாக இருந்தால் தாங்கள் பயிற்சிபெறும் வரையில் பயிற்சி பெற்றவர்களைக் குமாஸ்தாவாக வைத்துக்கொள்ளும்படி ஏற்பாடுகள் செய்யலாம். நிலங்கள் தானமாகக் கிடைத்தால் கோயில் நிர்வாகத்திலேயே அவைகளை மேற்பார்த்து வருவாயை அர்ச்சகர் ஊதியத்திற்காக ஒதுக்கலாம்.

இதுவரையில் வேதாகம சித்தாந்தப் பயிற்சி வகுப்புக்களும், பாஞ்சாரத்திர வைகானச ஆகமப்பயிற்சி வகுப்புக்களும் பேட்டைவாய்த்தலை, ஸ்ரீரங்கம், திருவெண்காடு, திருப்புகலூர், மதுரை, அழகர் கோயில், நாச்சியார் கோயில் முதலிய தேவஸ்தானங்களால் நடத்தப்பெற்றிருக்கின்றன. இப்போது சென்னமல்லீசுவரர் கோயிலில் ஒரு பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது. பல கோயில்களின் அர்ச்சகர்கள் இதனால் நற்பயனடைந்திருக்கிறார்கள். இவ்வகுப்புக்களில் பங்குபெற இன்னும் பலர் ஊக்கம் கொண்டு இருக்கிறார்கள். எல்லாக் கோயில் அர்ச்சகர்களும் இந்தப் பயிற்சியைப்பெற்று விட்டால் கோயில்களில் நடைபெறும் பூசை, வழிபாடுகளில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டு விடுவதுடன், பொது மக்கள் ஆதரவு பெருகி அர்ச்சகர்களின் நிலை முன்னேற்றமடையும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

இதுவரையில் கொடுக்கப்பட்ட பயிற்சி ஏற்கனவே அர்ச்சகர்களாகப் பணி செய்துவரும் நடுத்தர வயதினருக்கே பயன்படக்கூடிய நிலையில் அமைக்கப்பெற்றது. பழனி, திருச்செந்தூர் ஆலயங்களின் சார்பில் அர்ச்சகர்களின் சிறுவர்களுக்கு நீண்டகாலப் பயிற்சி கொடுக்கும்வகையில் பாடசாலைகள் அமைக்கப்பெற்றுள்ளன. இம்மாதிரி பாடசாலைகள் பல இடங்களிலும் ஏற்படுத்தப்படவேண்டும். தனிக் கோயில்களால் நடத்தப்பெற முடியாவிட்டாலும் சில கோயில்கள் சேர்ந்து தங்கள் உபரி நிதியிலிருந்து இத்தகைய பாடசாலைகளை அமைக்க ஏற்பாடு செய்யலாம். முக்கியமாக அர்ச்சகர்கள் நிலையையுயர்த்த எல்லா வகையாலும் முயற்சிகள் செய்யப்படவேண்டும். பல இடங்களில் சீரமைப் புத்திட்டக் குழுக்கள் ஏற்பாடுசெய்து நிதியும் நிலங்கள் முதலிய சொத்துக்களும் திரட்டத் திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

---

**திருக்கோஷ்டியூர் :** சௌமியநாராயணப்பெருமாள் கோயிலில் மகா சம்ப்ரோக்ஷணம் 26—3—61 ல் நடைபெறவிருக்கிறது. அதற்கு சுமார் ரூ. 25,000 வரை செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் திருப்பாற்கடல் குளத்தையும் சரிபார்ப்பதற்கு சுமார் 70,00 ரூபாய்வரை ஆகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையால் பொதுமக்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்யும்படி சிவகங்கை தேவஸ்தான மானேஜர் திரு. எஸ். ஜெயராமய்யர் அவர்கள் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

**வாழைத்தோட்டத்து அய்யன் கோயில் :** புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் மண்டபத்தை சென்னை அறநிலைய அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் 8—2—61-ந் தேதியன்று திறந்துவைத்தார்கள்.

**களக்காடு :** சத்யவாகீசுவரர் கோயிலில் தெப்ப உற்சவம் 10—2—61 ல் சிறப்பாக நடைபெற்றது.

# நவதிருப்பதி அநுபவம்

திரு. K. பட்சிராஜன், B.A., B.L.

## எட்டாம் பாட்டு

திருந்து வேதமும் வேள்வியும்
திருமா மகளிரும் தாம்மலிந்
திருந்துவாழ் பொருநல் வடகரை
வண் தொலைவில்லி மங்கலம்
கருந்தடங் கண்ணி கைதொழுத
அந்நாள்தொடங்கி இந்நாள்தொறும்
இருந்திருந்து அரவிந்த லோசன
என்றென்றே நைந்திரங்குமே.

*திருத்தமுடைய வேதமும், வேள்வியும், திருமகளும் தானுமாக சந்துஷ்டியுடனே அவன் நித்யமாய் வாழுகின்ற பொருநலுக்கு வடகரையிலுள்ள வளப்பமிக்க தொலைவில்லி மங்கலத்தை கரிய விசாலமான கண்ணை யுடைய இவள் கைதொழுத நாள் தொடங்கி இன்றுவரை இருந்தவிடம் பெயராதே, எப்போதும் அவன் திருநாமமாகிய அரவிந்த லோசனு! என்றே கூவி நைந்து அந்த ஈடு பாட்டிலே தன்னை யிழந்தவளானாள்.*

திருந்து வேதமும்

*தொலைவில்லி மங்கலத்துள்ளார் பயில்கையாலே முன்னைவிடத் திருந்தி விளங்கும் வேதம் பயிலப் பயிலத் திருந்து வதாயிற்று அது. பயில்வார் உண்மைப் பொருள் தெரிந்து பொருள் விளங்க சுஸ்வரத்தோடு ஓத ஓத முன்புத்தையிலும் திருந்தித் திருந்தி விளங்கும் வேதமும்.*

வேள்வியும்

*உண்மையான யக்ஞமும். ஐஹிகப் பலன்களை விரும்பிச் செய்யப்படும் சாதாரண அசுவமேதாதயாதிகளன்றிக்கே பகவத்ப்ரீதிக்கனுகுணமானதும் பாகவதர்க்கனுகூலமானதுமான ஆராதனங்கள்.*

திருமாமகளிரும்

*இப்படித் திருந்தின வேதமும், உண்மை வேள்வியாகிய பகவத் பாகவத ஆராதனமும் மிகவே திருமகள் மகிழ்ந்து வர்த்திக்கத் துடங்குகிறாள். அத்தகைய வேதகோஷமும் ஆராதனமும் நித்தியமாய்க் குறைவின்றி நிறைவேறும்படி கொழிக்கும் செல்வமும்.*

தாம்

*இம் மூன்றும் செழிக்கும் செழிப்பைக் காணும் தான். எம்பெருமான்.*

மலிந்திருந்துவாழ்

*அவற்றைக் கண்டு களித்து அவன் ஒரே யிருப்பாக நித்யவாஸம் செய்கிறான். தன் உள்ளத்துக்கு போக்யமாகக் கொண்டு அவன் வாசம் செய்யும். 'கோனேரி வாழும் குருகினமே' என்றாற்போல. அங்குத்தை அவ்வாழ்வுதானே போக்ய ரூபமாயிருக்கை. "பரமபதத்தில் உள்வெதுப்போலே யாகாதே இருப்பது" என்பது ஈடு. அங்கிலும் இங்கு உள்மகிழ்வோடே காணும் வாழ்வது.*

பொருநல் வடகரை வண்தொலை வில்லி
மங்கலம்

*விரஜைக்கு அக்கரைப்பட்டதென்று பரமபதத்தைச் சொல்லுமாபோலே பொருநலுக்கு அக்கரை என்கிறாள். பராங்குச நாயகி வர்த்திக்கும் பிரதேசமான குருகை பொருநலுக்குத் தென்கரையாதலாலே. மேலே கண்ட வளம்மிக்க தலமான தொலைவில்லி மங்கலம்.*

கருந்தடங்கண்ணி

*கரியவாய் விசாலமான கண்களையுடைய இவள். 'மையகண்ணாளிலும்' மேலான இம் 'மைத்தடங்கண்ணி'. அவன் அழகை அநுபவித்தே மலர மலர விழித்து அதனாலே விசாலமான கண்களையுடையவள். 'மாதிரம் அனைத்தையும் அளக்கும்' கண்ணிறே "கஞ்சத்தினளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்" என்று ராம ஸௌந்தர்யத்தை அநுபவித்தே விரிந்த கண்களை யுடைய சீதையை மகாகவி கம்பன் கூறினது போல.*

கைதொழுத...... தொறும்

என்று நீர் கொண்டுபோய்க் காட்ட அவள் கைகூப்பி வணங்கினளோ அந்தக் காலம் முதல் இதுகாலம் வரை. தான் ஸத்தை பெற்ற காலம்முதல். தான் அஞ்ஞானத்திலே அழுந்திக்கிடந்த இருப்பிலிருந்து எழுந்த காலம்முதல். தொழுதமை தானே எழுச்சிக்குக் காரணமாயிற்று. "தொழுதெழென் மனனே" என்றதும் இவர் தானே.

இருந்திருந்து

ஒரேயிருப்பாய் இருந்து. வேறு வியாபாரமின்றிக்கே இருந்து.

அரவிந்தலோசன!

ஹே அரவிந்தலோசன! தாமரைக் கண்ணு என்று.

என்றென்றே

அப்படி ஒருகால் இருகாலல்ல. எப்போதும் இதுவே கூக்குரலாயிற்று.

நைந்திரங்குமே

இப்படி வாய் ஓயாமல் கூவி உடலும் உளமும் நைந்துபோயிற்று, அப்படி இரங்கி அவ்வீடுபாட்டிலே தன்னை யிழந்து மூழ்கியிருக்கிறுள்.

ஒன்பதாம் பாட்டு

"இரங்கி நாள்தொறும் வாய்வெறீஇ
இவள் கண்ணநீர்கள் அலமர
மரங்களும் இரங்கும் வகை
மணிவண்ணவோ! என்று கூவுமால்
துரங்கம் வாய்பிளந்தான் உறை
தொலைவில்லி மங்கலம் என்றுதன்
கரங்கள் கூப்பித்தொழும் அவ்வூர்த்
திருநாமம் கற்றதற்பின்னையே."

இப்படி ஈடுபட்டு உள்நெகிழ்ந்து தினந்தோறும் வாய்விட்டு தன் கண்ணீர்கள் பெருக கேட்கும் அசேதனங்களும் இரக்கப்படும்படி மணிவண்ணு என்று அலறுகிறுள். அவ்வூர்ப்பெயர் தெரிந்தபின் கேசியை வாய்பிளந்தவன் வாசம் செய்யும் தொலைவில்லி மங்கலம் என்று கைகூப்பித் தொழுகிறுள்.

இரங்கி

இப்படி அவன் விஷயத்திலே நெஞ்சழிந்து.

வாய்வெறீஇ

அவன் பெயரை முணுமுணுக்கிறுளில்லை. நன்ருக யாவரும் கேட்க வாய் விட்டு.

கண்ணீர்கள் அலமர

வாய் அப்பெயரைக் கூறும்போதே கண்கள் தாரை தாரையாக நீரைப் பெருக்காநின்றன.

"மரங்களும் இரங்கும்வகை"

அக்கூப்பீடுதான் கேட்டது நாம் மட்டுமோ. இப்படி அலறுகிறுளே என்று அவள் பக்கல் இரங்குவது நாமேயோ. மரங்கள் முதலான சேதனப்பொருள்களுமல்லவா இவள்பாடு கண்டு இரங்குகின்றன. இவளது அன்புநிலைகண்டு அவ் அன்புக்குப் போக்கு வீடின்றி இவள் தவிப்பதுகண்டு மலர்களாகிய தம்கண்களை அகல விழித்து மது தாரையாகிய கண்ணீரைப் பொழிகின்றன மரங்கள். மற்ற அசேதனப் பொருள்களும் அவ்வாறே. அவள் கூப்பீட்டின் தன்மை அவற்றையும் கரைக்கின்றது.

"அன்புநிலை யாரறிவர் என்பனபோல்
மரங்கள் அலர்மலர்க்கண் ணீரருவி
அகமுடைந்து தூவ"

என்ருர் ஒருகவி.

ராமவிச்லேஷத்தில் பரதன் பட்டபடி கண்டு "தாவர சங்கமம் என்னும் தன்மைய யாவையும் இரங்கிட" என்று கம்பர் கூறினுர். பெருமாள் திருக்குழலோசை கேட்டு "மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும், மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழும்" என்ருர் பெரியாழ்வார். இவ்விடத்திலே ஈட்டில் ஒரு ஐதிஹ்யம் காண்கிறது. "சேதனு சேதன விபாகமற அழியும்படி காணும் இவள் வாய்விட்டுக் கூப்பிடுவது. எம்பாரை ஒருவர் "மரங்களும் இரங்கக்கூடுமோ?" என்று கேட்க "இது அருளிச்செய்த அன்று தொடங்கி எத்தனை பாவ சுத்தியில்லாதார் வாயிலே புக்கதென்று தெரியாது. இங்ஙனேயிருக்கச்செய்தே, யமநியமாதி க்ரமத்தாலே பதஞ்செய்யப் பார்த்தாலும் சுக்கான் பருக்கைபோலே நெகிழாதேயிருக்கிற நெஞ்சு இன்று அழிகிறபடி கண்டால் ஸம காலத்தில் மரங்கள் இரங்கச்சொல்ல வேணுமோ" என்றருளிச் செய்தார்.

மணிவண்ணவோ என்று கூவுமால்

ஓ மணிவண்ணு என்று திசையனைத்தும் கேட்கும்படியாயிற்று கூப்பிட்டது. ''கடுத்த கராம் கால்கதுவக்கையெடுத்து மெய்கலங்கி உடுத்திசையனைத்தினும் சென்று ஒலி கொள்ள'' அலறிற்றே ஒரு வாரணம். அது கூவிய பெயராலே கூவுகிருள் "நாராயணு ஓ மணிவண்ணு!" என்றல்லவா அலறிற்று. நாராயணு என்று கூப்பிட்டு வாராமையோ என்னவோ ஓ மணிவண்ணு என்று அது அலறிற்று.

''துரங்கம்வாய்......மங்கலம்

அன்று கேசியைக் கொன்று உலகுக்கு உபகரித்தவன் இன்று எனக்கு உபகாரம் செய்வான் என்று அவன் பெயரை நினைத்து அவன் வந்து நித்யவாசம் செய்யும் ''தொலை வில்லி மங்கலம்'' என்று.

கரங்கள் கூப்பித்தொழும்

அவ்வூர்ப் பெயரைவாய் சொல்லும் போதே கைகள் தானே தலைமீது குவிகின்றன.

''அவ்வூர்த்திருநாமம் கற்றதற்பின்னையே''

இதற்குக் காரணம் நீங்கள்தான். அவனை அங்கே கொண்டுபோனீர்கள். ஊருக்குள் கொண்டுபோனீர்கள். அவனிருந்தமை காட்டினீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக அவ்வூர்ப் பெயரையும் சொன்னீர்கள். அதன் விளைவு இவள் அப்பெயர் தெரிந்த காலமுதல் "தொலைவில்லி மங்கலம்" தொலைவில்லி மங்கலம் என்கிருள். கை கூப்பித் தொழுகிருள். அப்பெயரைத்தான் சொன்னல் அவள் சொல்லும்போதுள்ள இனிமையில்லையாகையாலே "அவ்வூர்' என்கிருள் தோழி.

## பத்தாம் பாட்டு

''பின்னைகொல்? நிலமாமகள் கொல்?
திருமகள் கொல் பிறந்திட்டாள்
என்ன மாயங்கொலோ? இவள்
'நெடுமால்' என்றே நின்று கூவுமால்
முன்னி வந்தவன் சென்று
நின்றுறையும் தொலைவில்லி மங்கலம்
சென்னியால் வணங்கும் அவ்வூர்த்திருநாமம்
கேட்பது சிந்தையே.''

"ஒருகே நப்பின்னைதான் இவளாக இப்போது அவதரித்திருக்கிருளோ? அன்றி பூமிதேவியோ? இல்லை திருமகளே வந்தாளோ. என்றல்லவா எனக்கு ஐயம் எழுகின்றது பின் என்ன மாயம் அம்மா இது? இவள் எப்போதும் 'நெடுமால்' என்று கூவுகிருள். அவன் முற்பாடனுய் வந்து நித்ய வாசம் செய்யும் தொலைவில்லி மங்கலம் நோக்கித் தலைதாழ்த்து வணங்குகிருள். அவள் உள்ளமும் அப்பெயரே கேட்க விழைகின்றது. வேறு என்ன காரணம்?

பின்னைகொல்

ஒருக்கால் நப்பின்னைதான் முன்னைய யுகத்தில் கிடைத்த அநுபவம் போதாது இப்போது இந்நாயகியாக அவதரித்திருக்கிருளா.

நிலமாமகள் கொல்

அன்றிக்கே பூமிப்பிராட்டிதான் முன் ஏனமாய் நிலங்கீண்டவன்று கிட்டிய அநுபவம் மீண்டும் பெற வந்தாளோ.

திருமகள் கொல்

அல்லாது பெரிய பிராட்டியே முன்னைய அவதாரங்களிற் போல இவ்வர்ச்சையிலே அவனை அநுபவிக்க இப்படி வந்து பிறந்தாளோ என்று சிலசமயம் தோன்றுகிறது. ஆனல் சில சமயங்களில் இவளுடைய ஆசை மிகுதியை நோக்கும்போது அவர்கள் மூவ்ரும்தான் இவளுக்கு ஸமமாவரோ என்று கூட நினைக்கச் செய்கிறது.

ஈட்டிலே திரு, பூமி, பின்னை மூவரையும் குறித்து ஒரு ரஸமான குறிப்புக் காண்கிறது. "ஸர்வேச்வரனுடைய ஸம்பத்தாயிருக்குமவள் பிறந்திட்டாளோ (இதுதிரு) அஸ்ஸம்பத்து விளையும் பூமியாயிருக்குமவள் பிறந்தாளே! (இது நிலமங்கை) அவ்விளை பூமியினுடைய பல (பயன்) ரூபமாயிருக்குமவள் பிறந்தாளோ (இது நப்பின்னை)

பிறந்திட்டாள்

இப்போது அவதரித்திருக்குமவள். பின்னைகொல்? நிலமகள்கொல்? திருமகள் கொல்? அல்லவே அல்ல. அவர்களும் இவளுக்கு ஒப்பாவரா. இவள் தன்மையில் ஒவ்வொருசமயம் ஒருவகைக்கு வேண்டுமானல் அவர்கள் ஒப்பாகலாம். இவளை வேண்டுமா

யின் பிறர்க்கு ஒப்பாக்கலாம். ஒருவரும் இவளுக்கு நேராகார்.

**என்ன மாயமோ**

என்ன ஆச்சர்யம்? ஒரு வேளை இது ஏதேனும் மாயமா யிருக்கலாமோ. அவன் படைப்பிலே நிகழக் கூடாதது என்று ஒன் றுண்டோ. ஒரு வேளை அவன் மாயமேயோ?

**நெடுமால் என்றே நின்று கூவுமால்**

மிகவும் மாலையுடையன். எனக்கு அவன் பாலுள்ள மையலில் காட்டில் என் பக்கல் அதிக மையலை யுடையவனே என்று கூவு கிறாள்.

**முன்னிவந்து**

அதனாலேயே எனக்கும் முந்தத்தான் இங்கு வந்து. நான் பிறந்தவூருக்கு எதிர் முகப்பிலே வந்து.

**நின்றுறையும்**

ஒரொருகால்மட்டும் தோன்றி மறை யாதே என்றும் என் கண்ணுக்கிலக்காம்படி நித்யவாசம் பண்ணு நின்ற.

**சென்னியால் வணங்கும்**

முன்கரங்கள் கூப்பித்தொழுதுகொண் டிருந்தாள். இப்போது உடல் நைந்து கையைச் கூப்பவும் சக்தியற்றவளானாள். ஆகவே தலையைமட்டும் வணங்கி அவ்வூரை நோக்கித் தொழுகிறாள்.

**அவ்வூர்—சிந்தையே**

அவள் உள்ளமோ எப்போதும் அவ் வூர்ப் பெயரைக் கேட்பதையே விரும்பா நின்றது. தான்மட்டும் சொன்னால் போதா தாம். பிறர்வாயிலாகவும் அத்திருப்பெயரைக் கேட்டு மகிழ வேண்டும் என்று அவாவி நிற் கிறது அவள் உள்ளம்.

## பதினோராம் பாட்டு

சிந்தையாலும் சொல்லாலும்
செய்கையினாலும் தேவபிரானையே
தந்தைதாய் என்றடைந்த
வண்குருகூரவர் சடகோபன்
முந்தை ஆயிரத்துள் இவைதொவில்லி
மங்கலத்தைச் சொன்ன
செந்தமிழ் பத்தும் வல்லார்
அடிமை செய்வார் திருமாலுக்கே

மேலே சொன்னவிதமாக தன் மனத்தா லும், வாக்காலும், செயல்களினாலும் அவ் வூரிலே மற்றொரு கோயிலில் எழுந்தருளி யுள்ள தேவபிரானையே தாயும் தந்தையு மாகக்கொண்டு அவனை அடைந்த வளம் மிக்கத்திருக்குருகூரிலவதரித்தவரான ஸ்ரீசட கோபன் அருளிச் செய்த பழைய மறைப் பொருளான ஆயிரம் பாடல்களிலே தொலை வில்லிமங்கலம் என்ற இத்திருப்பதி விஷய மாகக் கூறப்பட்ட செந்தமிழ்ப் பாசுரங்கள் பத்தையும் கற்றுவல்லார் திருமால் திருவடி கைங்கர்யம் செய்யும் பேறு பெறுவர்கள் என்று இப்பதிகப் ப்யன் கூறப்படுகிறது.

**சிந்தையாலும்......செய்கையினாலும்**

"ஒண்தாமரையாள் கேள்வன் ஒருவ னையே நோக்கும் உணர்வு" என்றபடி உள் ளமும் 'வாய் அவனையல்லது வாழ்த்ததாது' என்றபடி வாக்கும், "கையுலகம் தாயவனை யல்லது தான்தொழா" என்றபடி அவள் மனோவாக்குக் காயங்கள் அவனிடத்திலே ஊன்றி நிற்பனவாய்

**தேவபிரானை......அடைந்த**

அவ்வூரிலெழுந்தருளி யிருக்கும் தேவ பிரானையே 'பெற்ற தாய் நீயே பிறப்பித்த தந்தைநீ' என்று கொண்டு அடைந்தது. இனி நீர் தாய்மார் என்ற பற்றுடன் அவ ளிடம் பேசிப் பயனில்லை, உமக்கு இனி "ஆசையில்லை விடுமினோ" உங்களைத் தாயாக மதித்தாலல்லவா அவள் உங்கள் சொல் கேட்கப் போகிறாள். அவனே 'அன்னையாய் அத்தனாய்' அவளை ஆண்டு கொண்டான்,

**முந்தை ஆயிரம்**

முந்தைப் பொருளைக்கூறும் ஆயிரம் பாக்கள். பழைமையான வேதங்களின் தெளிந்த உண்மையைக் கூறும் ஆயிரம். தான்றோன்றியாக வந்ததல்ல.

**'தொலைவில்லி மங்கலத்தைச் சொன்ன'**

இந்தத் தொலைவில்லி மங்கலப்பதியி லெழுந்தருளி யிருக்கும் அரவிந்தலோசனன் தேவபிரான் என்ற இரண்டு திருநாமங்கள் விஷயமாக ஆழ்வார் தன் அநுபவத்தைச் சொன்னதாகிய

**'செந்தமிழ் பத்தும் வல்லார்'**

தமிழ்ப் பாசுரங்கள் பத்தும். இனிய பாஷையிலே சொன்ன பத்தும். முருடு ங்கி

கிய பாஷையிலே சொன்ன பத்தும் அதிலும் செம்மையான தமிழிலே சொன்ன பத்தும். தமிழிலே சொன்னதாலே சொன்ன பொருளே தமிழ் (இனியது) ஆயிற்று. அப்படி இனிப்புப் பெற்ற பத்தும் கற்று வல்லவர்

அடிமை செய்வார் திருமாலுக்கே

ஒரு ஜீவாத்மா பெற வேண்டிய பேறு பெறுவர். அதுதான் திருமால் திருவடியில் நித்ய கைங்கர்யம். 'உற்றேன் உகந்து பணி செய்து உனபாதம் பெற்றேன்' என்றபடி பெறுவர் 'உன் திருவடிக்கீழ்க் குற்றேவல் முன்செய்ய முயலாதேன்' என்ற குறைதீர அவன் அடியிலே கைங்கர்யம்செய்கையாகிய ஸ்ரீயைப் பெறுவர்கள்.

இப்பதிகம் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உள்ள நவவித சம்பந்தங்களுள் பிதா புத்ரஸம்பந்தத்தையும் ஞாத்ரு ஞேயசம்பந்தத்தையும் விளக்கும் என்பது சில பெரியோர்களுடைய அபிப்பிராயம். 'சிந்தையாலும்' என்ற பாசுரமும் "திருந்து வேதமும்" என்ற பாசுரமும் அவற்றைக் குறிப்பன என்பர். சிந்தையாலும், சொல்லாலும், செய்கையினாலும் தேவபிரானையே தந்தைதாய் என்றடைந்த வண்குருகூரவர் சடகோபன் என்று வருகையால் இறைவனே தந்தை தாய் முதலிய சகல பந்துவும் என்பது குறிக்கப்படுகின்றதைக் காட்டி இது பிதாபுத்ர சம்பந்தத்தை விளக்குமென்பர். பிதா என்பது மற்ற பந்துக்களுக்கும் உபலக்ஷணே. மேலும் இப்பாடல் குலசேகரரது "தருதுயரம் தடாயேல்" என்ற பாசுரத்தோடு ஒத்தது என்றும் கூறுவர். 'அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தே அழும் குழவியது போன்றிருந்தேனே" என்ற பாசுரத்தாலும் இதே சம்பந்தம் கூறப்படுகிறதைக் காட்டுவர். இங்கு 'தாய்' என்பது பிதாவுக்கு உபலக்ஷணம்.

அதுபோல 'திருந்து வேதமும்' என்ற பாடலில் "கருந்தடங்கண்ணி கைதொழுத அந்நாள் தொடங்கி இந்நாடொறும் இருந் திருந்தரவிந்தலோசனன் என்றென்றே நைந்திரங்குமே" என்ற அடிகள் அறிகின்ற ஆன்மா அறியப்படு பொருளான இறைவனைக் கண்டதும் அந்த ஞானம் பெற்று, அவ்வாறு பெற்ற பின்னே வேறொன்றும் அறியாதாய் அவனையே சதா நினைந்து பிதற்றியமையைக் காட்டும் என்பர். இப்பாடல் குலசேகரரது "செந்தழலேவந்து அழலைச் செய்திடினும் செங்கமலம் அந்தரம் சேர் வெங்கதிரோர்க் கல்லால் அலராவால்" என்ற பாசுரத்தோடொக்கும் என்றும் கூறுவர். திருந்து வேதமும் பாடலில்வரும் கருந்தடங்கண்ணி என்ற பதம் ஆன்மாவின் ஞானத்தைக் குறிக்கும் என்பர். நாயகி நாயக பாவத்தில் வரும் மொழிகளிலே ஸ்வாபதேசத்திலே கண் என்பது ஞானத்தைக் குறிக்கும் என்பர் பெரியோர். எனவே 'கண்ணி' என்பது அந்த ஞானம் பெற்றவளைக் காட்டுமென்று கூறுவர். கண்ணும் தாமரையும் ஒப்புப் பொருளாகையாலே குலசேகரருடைய செங்கமலம் ஞானத்தைக் குறிப்பதாகும் தாமரை வேறெதனாலும் மலர்ச்சி பெறுமல் சூர்யனொருவன் சன்னிதியிலே விகாசம் பெறுமா போலே ஆன்மா மலர்ச்சி பெறுவது இறைவன் சன்னிதியிலேயன்றி மற்றிடத்தில்லை. இவ்விரண்டு பாடலையும் ஒற்றுமை காட்டி செங்கமலம் அந்தரம் சேர் வெங்கதிரோன் சன்னிதியிலே மட்டும் மலர்ச்சி பெறுமா போலே இக்கருந்தடங்கண்ணி (ஆன்மா) உள்ள விகாசம் பெற்றது அரவிந்தலோசனன் சன்னிதியிலே என்று காட்டுவர்.

(தொடரும்)

---

**திருச்செந்தூர்:** சுப்பிரமணியசுவாமி கோயிலில் மாசித் திருவிழா 20—2—61 முதல் 3—3—61 வரை நடைபெறும். சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெறும்.

**திருப்புன்கூர்:** சிவலோகநாதசுவாமி கோயிலில் 10—2—61 ல் வெள்ளிக்கிழமையன்று சௌந்திரநாயகி அம்பாளுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் நடைபெற்றது. மாலையில் தருமபுரம் ஆதினத் தேவாரப் பாடசாலை ஆசிரியர் திரு. ஆர். வேலாயுத ஓதுவார் அவர்கள் குழுவினரால் "பார்வதி திருமணம்" கதா காலட்சேபம் நடைபெற்றது. இரவு இன்னிசையரங்கும் நடைபெற்றது.

# ✳ செய்திகள் ✳

சங்கரநயினர்கோயில் : சங்கரநாராயணசுவாமி கோயில் முன் முகப்பில் ரூ. 25,000 செலவில் கட்டியிருக்கும் மண்டபத்தை சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ எஸ்., அவர்கள் விளக்கேற்றிவைத்துத் திறந்து வைத்தார்கள். மேலும் இலஞ்சி திரு. ஐ.ஏ. சிதம்பரம் பிள்ளை, எம்.ஏ., அவர்கள் அன்பளிப்பாகக் கொடுத்துதவிய "ஓம்" "சிவ சிவ" மின்விளக்குகளையும், சங்கரன்கோயில் கீதாஞ்சலி மில்ஸ் லிமிடெட் மானேஜிங் டைரக்டரால் புதுமுகப்பு மண்டபத்தில் பொருத்திய மின்சார விளக்குகளையும் இயக்குவித்தார்கள்.

திருப்பந்தணைநல்லூர் : பசுபதீசுவரசுவாமி கோயிலில் மாசிமக மகோற்சவம் 20—2—61 முதல் 2—3—61 வரை நடைபெற்றது.

இராமேசுவரம் : இராமநாதசுவாமி கோயிலில் இரண்டாம் பிரகாரம் திருப்பணி உண்டியல் ஸ்தாபிதமும், தேவாரப்பயிற்சி வகுப்பு ஆண்டுவிழாவும் சென்னை அறநிலையத்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களால் நடத்திவைக்கப்பெற்றது. மதுரை அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. ஏ. சக்கரை சேர்வை, பி.ஏ., பி.எல்., அவர்களும் விழாவில் கலந்துகொண்டார்கள்.

தேவதானப்பட்டி : மூங்கிலணை காமாட்சி அம்மன் கோயிலில் மகாசிவராத்திரி விழா 13—2—61 ல் ஆரம்பமாகி 17—2—61 ல் முடிவுற்றது.

அரத்துறை : அரத்துறைநாதசுவாமி என்னும் தீர்த்தபுரீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 20—2—61 முதல் 2—3—61 வரை நடைபெற்றது.

திருவொற்றியூர் : தியாகராசசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 20—2—61 முதல் 2—3—61 வரை நடைபெற்றது.

கங்கைகொண்ட சோழபுரம் : பெரியநாயகி அம்பாளுக்கு 10—2—61 ல் இவ்வூர் மிராசுதார் திரு. என். சோமநாதய்யர் அவர்களால் தன் சொந்தச் செலவில் சந்தனக்காப்பு அலங்காரவிழா நடைபெற்றது.

கும்பகோணம் : ஆதிகும்பேசுவரசுவாமி கோயிலில் மாசிமக மகோற்சவம் 20-2-61 முதல் 4—3—61 வரை சிறப்பாக நடைபெறும்.

சிதம்பரம் : இளமையாக்கினார் கோயிலில் திருநீலகண்ட நாயனார் திருவிழா 7-2-61, 8—2—61 ஆகிய இரு தினங்களிலும் சிறப்பாக நடைபெற்றது.

கொசவலசு : பகவான் திருமலைசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 13—3—61 முதல் 19—3—61 வரை சிறப்புற நடைபெறும்.

கரூர் : தான்தோன்றி கல்யாண வெங்கட்ரமணசுவாமி கோயிலில் இரதோற்சவம் 19—2—61 முதல் 26—2—61 வரை நடைபெற்றது.

தருமபுரி கோட்டை : பரவாசுதேவசுவாமி, மல்லிகார்ச்சுனசுவாமி கோயிலில் 13—2—61ல் சிவராத்திரியை முன்னிட்டு 4-வது ஆண்டு இலட்சதீப மகாபிஷேக ஆராதன உற்சவம் நடைபெற்றது.

திருக்கடம்பந்துறை : கதம்பலனேசுவரசுவாமி கோயிலில் மாசிமக பிரம்மோற்சவம் 19—2—61 முதல் 3—3—61 வரை நடைபெறும்.

தூத்துக்குடி : சங்கரராமேசுவரசுவாமி கோயிலில் மகா கும்பாபிஷேகம் 23-1-61ந்தேதி 33 ஹோமகுண்டங்கள் வைத்து ஆரம்பிக்கப்பெற்றது. கும்பாபிஷேகத்தன்று மாலையில் திருமுறை விழா நடைபெற்றது. இதற்கென்று பிரயாகையிலிருந்து கங்காதீர்த்தம் ஒரு குடம் கொண்டுவரப்பெற்றது. இவ்விழாவில் அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

கூடலையாற்றூர் : நர்த்தனவல்லபேசுவரசுவாமி கோயிலில் மாசிமக மகோற்சவம் 19—2—61ல் தொடங்கி 4—3—61 வரை நடைபெறும்.

திருவாஞ்சியம் : வாஞ்சிநாதர் கோயிலில் மாசிமகப் பெருவிழா 19—2—61 ல் தொடங்கி 1—3—61 வரை நடைபெற்றது.

# திருநாளைப்போவார் நாயனர்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

(முன் தொடர்ச்சி)

ஆயினும் அவருக்கு முதன்மைப் பெருங் கோயிலாகிய தில்லையிற்சென்று, ஆனந்தக் கூத்தரது அற்புதத் தனிக் கூத்தினைக் காணு திருந்தமை தவிர்க்கலாகாப் பெருங் குறையாகவே இருந்தது. அதனால், அங்குச் செல்ல வேண்டும் என்னும் எண்ணம் ஒருநாள் மிகவும் எழுந்தது. முன்பெல்லாம் தமது பிறப்புக் காரணமாக அதனை அவர் நினையாமலே இருந்தாராயினும், அன்று அவ்வெண்ணம் தடுக்க ஒண்ணு வகையில் மிக்கெழுந்தது. அதனைச் சேக்கிழார்,

"........ திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச"
உய்த்தபெருங் காதல்உணர்வு ஒழியாது
வந்துதிப்ப"

எனக் குறிக்கின்றார்.

## 'நாளைப்போவேன் எனல்'

அன்றிரவு நாயனருக்கு உறக்கம் வரவில்லை. பொழுது விடிந்த உடன் தில்லைக்குச் செல்வதென்று முடிவு செய்தார். பொழுது விடிந்தபின் தில்லைக்குள் தாம் செல்ல இயலாதே என நினைத்தார். அக்காலத்தில் யாதோர் ஊரிலும் அந்தணர் வாழும் வீதியில் வேத வேள்விகள் வீடுதோறும் வளர்க்கப்படும் என்பதுபற்றித் தாழ்த்தப்பட்டோர் செல்லலாகாது என்னும் முறைமை இருந்து வந்தது. தில்லை நகரம் முழுதுமே அத்தகைய அந்தணர்கள் வாழும் இடம். அதனால், இவர் தில்லை நகருக்குள்தானும் கால் வைத்தல் இயலாது. இதனை நினைந்து, இதுவும் நமது பெருமான் ஆணை—இவ்விழி குலத்தில் நம்மைப் பிறக்கச் செய்ததும் அவன் திருவருளே—என ஒருவாறு மனந்தேறித் தில்லைக்குப் போவதை நிறுத்தினர். ஆயினும் அங்குச் செல்லவேண்டும் என்னும் அவா அவர்க்கு அடங்கிற்றில்லை. அதனால், 'இன்று போகேன்; நாளைப் போவேன்' என உறுதி செய்தார். மறுநாளும் இந்த நிகழ்ச்சியே நிகழ்ந்தது.

## நாளைப்போவேன் என்றதற்குக் காரணம்

இவ்வாறு இவர் தடையுற்றிருந்தது, தமது குலப்பிறப்பை எண்ணியதனாலேயன்றி வேறொன்றினாலன்று. ஆயினும், இதனை, முன்னர்க் கூறிய நாடக நூலார். 'இவர் தம் ஊரிலுள்ள ஐயர் ஒருவர்தம் அடிமை ஆள்' என்றும், 'அவ்வையர் தில்லைக்குச் செல்லுதற்கு விடைகொடுக்க மறுத்ததனாலேயே இவர் தடையுற்றார்' என்றும் வைத்து அதனைப் பலபடச் சித்திரித்துக் காட்டியுள்ளார்.

அக்காலத்துச் சேரிவாழ் மக்களில் பெரும்பாலோர் அடிமையாட்களாகவே இருந்தனர். எனினும் ஒரு சிலர் அவ்வாறின்றிச் சிறிது சுதந்திரம் உடையவராயும் இருந்தனர், அவர்கள் ஊர்ப்பொதுத் தொழிலாளர்களாகிய 'தோட்டி, தலையாரி, வெட்டியான், கம்பு கட்டி' முதலிய பெயர்களையுடையவர்கள். இவர்கள் குறிப்பிட்ட ஒருவருக்கு அடிமையல்லர். அதனால், இத்தொழில்களைத் தங்கள் குடும்பங்களுள் முறை வகுத்துக்கொண்டு ஆண்டுக்கு ஒருவர் அத்தொழில்களைச் செய்யப் பிறர் வேறு தொழில் செய்தலும், தொழில் செய்வோரும் மாற்று முறையில் சில நாட்களுக்கு வேறொருவரை வைத்துத் தாம் ஓய்வு பெற்றிருத்தலும் உண்டு. வேலையிலிருந்து விலகிக்கொள்ளவும் அவர்கட்கு உரிமை உண்டு இவ்விருவகையினரில் நந்தனார், ஊர்ப்பொதுத் தொழிலாளரேயன்றித் தனிப்பட்ட ஒருவர்க்கு அடிமையாள் அல்லர். இதனைச் சேக்கிழார்,

"ஊரில்வரும் பறைத்துடைவை
உணவுரிமை யாக்கொண்டு
சார்பில்வரும் தொழில்
செய்வார்"

என விளக்கமாகவே தெரிவித்துள்ளார். இதனுள், 'பறைத்துடைவை என்பது, 'தோட்டி மானியம்' என இக்காலத்து வழங்கும் சிறு இறையிலி நிலத்தையும் பிற சிறு வருவாய் களையும் போல்வனவற்றைக் குறித்தபடியாம். நந்தனார் இத்தகைய தொழிலுடையவராய் இருந்தமையாலேயே பல தலங்களுக்குச் சென்று பணிபுரிதல் கூடுவதாயிற்று. ஆதலின், மேற்குறித்த நாடக நூலாரது விசித்திரங்களை நாம் நாடக மாத்திரையாற் கண்டும் கேட்டும் சுவைத்துப் போதலோடே அமைய வேண்டியுள்ளது.

## தில்லை எல்லையை அடைதல்

நாயனார் நாள்தோறும் 'தில்லைக்கு நாளைப் போவேன்; நாளைப்போவேன்' என்று சொல்லிச் சொல்லி நாள்கள் பல கழிந்தமையைக் கண்டு ஆற்றொணாதவராய், ஒருநாள், 'தில்லைத் தரிசனத்துக்கு உதவாத இவ்வுடம்பு வேறு எதற்கு இருக்கின்றது! அதனால், இஃது அத்தலத்தின் புறத்தே யாயினும் நின்றொழியட்டும்' என்று நினைந்து, ஆதனூரைவிட்டுப் புறப்பட்டுச் சென்று தில்லைத்தலத்தின் எல்லையை அடைந்தார். அடைந்து அத்தலத்தின் பெருமை கருதி அதன் எல்லையை வணங்கினார். பின்பு எழுந்து நின்று நோக்குங்கால் தில்லை நகரினுள் எங்கும் வேள்வித் தீயினின்றும் எழுந்து செல்லும் புகைகளையும், தில்லை மூவாயிரவரது திருமடங்களின் தோற்றத்தையும் கண்டு, தமது குலப்பிறப்பை நினைந்து அச்சங்கொண்டு அவ்வெல்லைப் புறத்திலேயே சிறிது தடையுற்று நின்றார். அப்பால் நிற்கமாட்டாதவராய், எல்லையைக் கடந்து, நகரின் மதிற்புறத்தை அடைந்தார். அங்கு நின்று நாயனார், 'இந்நகரினுள் மூவாயிரம் அந்தணர் இல்லங்கள் உள்ளன' எனவும், 'ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேள்விச் சாலையாய் விளங்கும்' எனவும் கூறுவரன்றோ! ஆதலின், இம்மதிலைக் கடந்து உள் நுழைதல் நமக்கு எவ்வாற்றானும் இயையாது; ஆதலின், இத்தலத்தின் எல்லையை வலம்வருதலே இனி நாம் செய்யத் தக்கது' என முடிவுசெய்து, அவ்வாறே அந்நகரின் எல்லையை இராப்பகல் இடையறாது வலம்வந்து கொண்டிருந்தார்.

## இறைவன் கனவில் தோன்றி அருளுதல்

இவ்வாறு வலம் வந்துகொண்டிருந்தும், நாயனார், தில்லை நகரினுட் புகுதற்குத் தமக்கு உள்ள தடை இப்பிறப்பில் நீக்கிக் கொள்ளும் தடையாய் இல்லாததை நினைந்து அளவிலாத் துன்பத்தை யடைந்து, 'இனி நாம் கூத்தப் பெருமானது ஆனந்தத் திருநடனத்தினைக் கண்டு வணங்குவது எங்ஙனம்!' என எண்ணி ஏங்கினாரேயன்றி அமைதியுற்றார் இல்லை. அதனால், உடலும் தளர்ச்சியுற்ற இவர் அத்தளர்ச்சி காரணமாக ஓரிடத்திற் கிடந்து சிறிது உறக்கங்கொண்டார்.

அளவிலாப் பெருங்கருணையையே தனக்கு வடிவமாக உடைய இறைவன், தன் மெய்யடியார்கள் அடையும் துன்பத்தினைக் கண்டும் வாளா இருப்பனோ! அம்பலக் கூத்தனாகிய அப்பெருமான் நாயனாரது கனவில் தோன்றி, அவருக்கு அருளிச் செய்வானாயினன். அவ்வருளிப்பாட்டினைச் சேக்கிழார், 'முறுவலொடும் அருள்செய்வார்' எனக் கூறுகின்றார். அம்முறுவலின் குறிப்பு, 'உண்மையில் இல்லாது, சொல்லளவில் உள்ளதாகின்ற இச்சாதி வேற்றுமை உன்னை எவ்வளவு துன்பத்திற்கு ஆளாக்கியது! அவ்வாறிருந்தும், அவற்றாலெல்லாம் மடங்காது வளர்ந்தெழுந்த உன் அன்புதான் என்னே!' எனக் கூறுவது போலும்!

இங்ஙனம் முறுவலுடன் இறைவன் அருளியதாவது, 'இவ்வுடம்பு நீங்குதற் பொருட்டு உனக்குத் தில்லைவாழ் அந்தணர்களைத் தீ அமைத்துத் தரச் சொல்கின்றோம். அதன்கண் நீ மூழ்கி எழுந்து அவர்களுடனே நம் திருமுன்பை அடைவாயாக' என்பதே.

## தில்லைவாழ் அந்தணரைக் காணல்

நாயனாருக்கு இதனை அருளிச்செய்த அம்பலவாணர், தில்லைவாழ் அந்தணர்கள் கனவிலும் நாயனாருக்குத் தீ யமைத்துத் தரும்படி அருள்செய்து மறைந்தார். அதனால், அவ்வந்தணர்கள் யாவரும் காலையில் அப்பெருமானது திருமுன்பிற் கூடியிருந்து, தங்கள் கனவைச் சொல்லி, நடராசப் பெருமானது ஆணையைக் கடத்தற்கு அஞ்சினவராய், நாயனார் இருக்குமிடத்தை அடைந்து அவரைக் கண்டு, பெருமான் தங்களுக்கு இட்ட கட்டளையைத் தெரிவிக்க, நாயனார்

'அடியேன் உய்ந்தேன்' எனச்சொல்லி அவர் களை வணங்கினார்.

## தீக் குளித்தல்

பின்பு அந்தணர்கள் தெற்குக் கோபுர வாயிலின் புறத்தில் தீயை அமைத்து வந்து தெரிவித்தனர். நந்தனார், திருவருட்செயலை நினைந்து தீக்குழியை அடைந்து, இறைவரது திருவடியை நினைந்தவாறே அதனைச் சுற்றி வந்து நடராசப் பெருமானைத் திசைநோக்கிக் கும்பிட்டு அப்பெருமானது நடமாடுந் திருவடியை உள்ளத்தில் உன்னித் தீக் குழியுட் குதித்தார். என்னே நாயனார்தம் பேரன்பு! தில்லையம்பலத்துட் செல்ல லாகாமை ஒன்றே கருதித் தம் அரிய உடலைத் தீக்கிரையாக்கத் துணிந்த அவர்தம், திரு வடிப் பேரன்பின்முன் நம்மனோரது திருவடி யன்பு எம் மாத்திரம்?

## மாற்றுடம்பு பெறுதல்

என்னே அதிசயம்! சிறிது நேரத்திற் கெல்லாம் நாயனார் தமது முன்னை உடம்பு நீங்க, சிறந்த பிராமணோத்தமரான முனிவர் வடிவமுடையவராய் எழுந்தார். அவரது சிரசில் சடைமுடியும், மார்பில் முப்புரி நூலும் விளங்கின. சிவந்த சுடர்விடும் தீயின் நடுவில் அவர் அவ்வாறு எழுந்தது, மலர்கின்ற செந்தாமரை மலரில் பிரமதேவன் பிறந்ததுபோல இருந்தது. அப்பொழுது ஆகாயத்தில் தேவ வாத்தியங்கள் முழங்கின. தேவர்கள் கற்பகப் பூமாரிகளைப் பொழிந் தனர். தில்லைவாழ் அந்தணர்கள் அவரைக் கைகூப்பிக் கும்பிட்டனர். சிவனடியார்கள் விழுந்து வணங்கிப் பேரானந்தத்தில் மூழ் கினர்.

## திருவடிப் பேறு

நந்தனார் இப்பொழுது முன்னை நந்தனா ரல்லர்; 'திருநாளைப் போவார்' என்னும் பிராமண முனிசிரேஷ்டர். இது நம்ம னோர்க்கு; அவர் உணர்வோ, 'சிற்றம்பலத் தில் நடனமாடுகின்ற நடராசப் பெருமானது எடுத்த பொற்பாதத்தை எப்பொழுது காண் பது!' என்கின்ற அந்த ஓர் உணர்வே. அத னால், இந்த அதிசயங்களிலெல்லாம் அவர் உள்ளம் செல்லவில்லை.

திருக்கோயிலை நோக்கி விரைந்தார்; தில்லைவாழந்தணர்கள் அவரை விடாது உடன்சென்றனர். நாயனார் திருக்கோயிலை அணுகி, முதற்கண் கோபுரத்தைக் கும்பிட்டு வணங்கியெழுந்து, விரைவில் திருக்கோயிலின் உள்ளே சென்று, நடராசப்பெருமான் எழுந் தருளியுள்ள சிற்சபையை அடைந்தார்; அப் பால் அவரை யாருங்காணவில்லை.

தில்லைவாழ் அந்தணர்கள் அதிசயமுற்ற னர்; முனிவர்கள் துதித்தார்கள். நாயனா ருக்கு ஆனந்த நடராசப்பெருமான், எப் பொழுதும் தன் திருவடிநிழலிலேயே கும்பிட் டிருக்கின்ற பெரும்பேற்றினை அருளினான். இஃது அதிசயத்தினும் அதிசயம்!

## முடிபு

இந்நாயனார், திருக்கோயில்களின் புறத்துநின்றே தமது திருத்தொண்டினைச் செய்துவந்ததும், அவ்வாறே தில்லைநகரினுள் அடிவையாது புறத்தே நின்றதும், வருணாச்சிரமங்களின் வரம்பு கடவாது நிற் றலே அக்காலத்து அறமாய் இருந்தமையின், அவ்வறநெறிக்கண் இவர் நின்றமையாலே யாம். இதனையே சேக்கிழார், தொடக்கத்தில், "வருபிறப்பின் வழிவந்த—அறம்புரி கோள்கைய ராயே அடித்தொண் டின் நெறிநின்றார்" எனக் குறித்தருளினார். இவ்வாறு இவர் நால்வகை வருணத்தார்க்குப் புறத்து நிற்றலைக் கட வாதுநின்றே தம் தொண்டினைச் செய்துவந் தமை பற்றியே, நம்பியாண்டார் நம்பிகள் தமது திருவந்தாதியிலும், சேக்கிழார் உருத் திரபசுபதி நாயனார் புராணத்து இறுதிச் செய்யுளிலும் இவரைப் "புறத்திருத்தொண் டர்" எனக் கூறுவாராயினர்.

இஃது உலகியலாயினும் அதனை அழித்து நடவார் நாயன்மார். அதனால், இவ ரது கருத்திற்கேற்பவே இவரை வேறுடம்பு பெற்றுத் திருக்கோயிலினுள் வரச்செய்து இவரது கருத்தை முற்றுவித்தருளினான் இறைவன்.

இந்நாயனாரது செம்மைபுரி சிந்தை நமக்கும் உண்டாகுமாறு வன்றொண்டப் பெருமான் அருளிச்செய்த "செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்" என் னும் அருட்டிருமொழியினால் நாம் இவரை வாழ்த்தி வணங்குவோமாக.

# பெரியபுராணத் திறவு

[ தவத்திரு. மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள், மேலையூர் ]

புராண வடிவில் எழுந்த ஒரு ஞான நூல் பெரிய புராணமாகும். சைவ சமயத் திருத்தொண்டர் அறுபத்துமூவர் வரலாற்றினை விரித்துக் கூறுவது அந்நூல். செயற்கரிய செயல்கள் பலவற்றையும் செய்து திருவருள் உண்டு என்பதை உலகுக்கு உணர்த்தியவர்கள் அத்தொண்டர்கள். அவ்வாறு செயற்கரிய செய்த பெரியோர்களைப் பற்றிக் கூறுவதால் அந்நூல் பெரிய புராணம் எனவே வழங்கப் பெறுவதாயிற்று. பெரிய புராணத்துக்குச் சில தனிச் சிறப்புக்கள் உண்டு. ஒன்று:- அந்நூலுட் காணப்படும் தொண்டர்கள் எவ்வளவு உயர்ந்த ஞானச் செல்வர்களோ அவ்வளவு உயர்ந்த ஞானச் செல்வர் அந்நூலின் ஆசிரியர் சேக்கிழார் பெருமானும் என்பது. இரண்டு:-அந்நூலுட் கூறப்படும் சரிதங்கள் அனைத்தும் கல்வெட்டுக்கள் முதலிய புறச் சான்றுகளாலும் தேவாரம் முதலிய அகச் சான்றுகளாலும் (Internal and external evidences) நிருபிக்கப்பட்ட உண்மை நிகழ்ச்சிகள் என்பது. அதாவது அச்சரிதங்கள் கற்பனை செய்யப் பெற்றவை யென்றோ சந்தேகத்திற்கிடமானவை யென்றோ நேர்மையுள்ள அறிஞர் எவரும் கூறத்துணியார். மூன்று:—இப்போது நம் நாட்டில் வழங்கும் எல்லா மரபினரும் அத் தொண்டர் திருக்கூட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் தெய்வ சந்நிதியிலும் மெய்யன்பர்கள் திருவுள்ளத்திலும் ஒரு குலத்தவர்போலச் சமமாகவே போற்றப்பெறுகிறார்கள். அந்தணர்—அரசர்—வணிகர்—வேளாளர் — குயவர்—பாணர்—வேடர்—பறையர்—செம்படவர் — வண்ணார் — மருத்துவர் — மறவர்—பௌத்தர் முதலிய அனைவருடைய தொண்டு முறைகளும் பெரியபுராணத்தில் விளக்கமாகக் கூறப்படுகின்றன. சாக்கியர் என்பவர் பௌத்த சமய வேடத்தில் இருந்தும் மன உணர்வால் சைவராக விளங்கினார் "மறு சமயச் சாக்கியர் தம் வடிவினால் வருந் தொண்டர்" என அவரைப் பெரிய புராணம் குறிக்கின்றது. மற்றும்,

செய்வினையும் செய்வானும்
அதன் பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவ
னென்றருளாலே உணர்ந்தறிந்தார்.
எந்நிலையில் நின்றாலும்
எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள்
மறவாமை பொருள்என்றே
துன்னியவே டந்தன்னைத்
துறவாதே தூயசிவம்
தன்னைமிகும் அன்பினால்
மறவாமை தலைநிற்பார்

எனவும் சாக்கியரைப் பற்றி அப்புராணம் கூறுகின்றது. எனவே பௌத்த சமய வேடத்திலிருந்தும் உறுதியான சிவபக்தி பூண்டமையால் அப்பெரியவரும் சைவ சமயத் திருத்தொண்டராயினார். அது மட்டுமா? மங்கையர் குலத்தின் மாண்பினை விளக்க வந்த ஞானவிளக்குப் போன்ற காரைக்காலம்மையார் — மங்கையர்க்கரசியார்—திலகவதியார் முதலிய மாதர்த் திலகங்களும் திருவருள் விளக்கத்திற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள். ஆகவே எல்லோரும் பக்தி செய்யலாம் எல்லோரும் உயர் நிலையை அடையலாம் என்பதற்கு இவற்றை விட வேறென்ன சான்று வேண்டும். ஜைன சமயத் தலைமைப் பீடத்தில் தருமசேனர் என்ற பெயரோடு வீற்றிருந்த மருள்நீக்கியார் சைவ நெறிக்கு மீண்டு திருநாவுக்கரசர் என்னும் அழகிய பெயரோடு சைவ சமய முதல்வராக இன்றும் விளங்குகிறார். இவ்வளவு விரிவான அடிப்படையில் அமைந்த

ஒரு சமய நூல் இதுவரை உலகப் பகுதியில் வேறெம் மொழியிலும் தோன்றவில்லை என லாம்.

## உலகப் பொது நூல்

பெரிய புராணத்தை ஒரு உலகப் பொதுநூலாக இங்கு சிந்திப்போம். பெரிய புராணத் தொண்டர்கள் ஒருகாலத்தவரல்ல. ஓரிடத்தவரல்ல. ஒரே நாகரிகத்தைச் சேர்ந் தவர்களுமல்ல. பல்வேறிடங்களில் பல் வேறு நாகரிகத்தில் வாழ்ந்தவர்கள். அத் தகையோர்களின் பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கைத் தொகுப்பே பெரிய புராணமாக அமைந்துள்ளது. அந்நூலுட் காணப் பெறுத வாழ்க்கை நிலேயே உலகப் பகுதியில் இல்லை எனலாம். அதாவது மிகப்பெரியவர் களாயினும் சரி, சாமானியர்களாயினும் சரி ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் ஏற்ற ஓவ் வோர் உதாரணம் அந்நூலுட் காணலாம் என்பதே. ஏசுநாதர்—மகம்மது நபி—கௌ தம புத்தர்—மகாவீரர் போன்ற உயர்ந்த இலட்சியங்களைக்கொண்ட பல தொண்டர் களையும் அங்கே காணலாம். தீமை செய்தவ னுக்கும் கருணை காட்டி மன்னிக்கவேண்டும் என்பதைச் சிறந்த செயலாக அறிவுறித்தினர் ஏசுநாதர். மெய்ப்பொருள் நாயனர் என்ற சிற்றரசரும், ஏனதி நாதர் என்ற வாள் வீர ரும் அந்நெறியிலே நின்று தங்கள் சிவ பக்தியை உறுதி செய்தார்கள். வாளேந்தி யும் தீமையைத் தடுக்கலாம் என்று மகம்மது நபி கருதினர். இங்கே எறிபத்தர் என்ற தொண்டர் அத்தகைய கொள்கையை மேற் கொண்டிருந்தார். மகாவீரரும் புத்தரும் அகிம்சை ஜீவகாருண்யம் இவற்றைச் சிறப் பாகப் போதித்தனர். இங்கே கழறிற்றறி வார் என்ற சேரமன்னர் அவ்வாறு விளங் கினர். அவர் அரசாட்சியை ஏற்றுக் கொள்ள நேர்ந்தபோது, "அன்பு நிலைக்கு மாறுபடாமல் எல்லா உயிர்களையும் பாது காக்க முடியுமானல் அரசாள்வேன். இல்லை யானல் அரசாட்சி வேண்டாம் என ஆண்ட வனைப் பிரார்த்தித்து நின்றார். அப்போது ஆண்டவன் எல்லா உயிர்களின் பாஷையை யும் புரிந்துகொள்ளும் அறிவுத் திறனைக் கொடுத்து அரசாளவும் அனுமதித்தான். அதன் பின்னரே கழறிற்று அறிவார்" என்ற பெயரோடு சேரமன்னர் அரசுபுரிந் தார் எனப் பெரிய புராணம் கூறுகின்றது.

அதுமட்டுமல்லாமல் "மூவேந்தர் மொழிவழங் கும் நாட்டுக்கப்பால் முதல்வனுர் அடிச் சார்ந்த முறைமை யோடும்" என உலகமெங் கும் தோன்றிய தெய்வத் திருத்தொண்டர் களையும் அந்நூல் போற்றுகின்றது என்றல் நமது முன்னோர்களின் பரந்து விரிந்த மனப் போக்கை எவ்வாறு போற்றுவது. இந்த அடிப்படையில் நின்று சிந்தித்தால் பெரிய புராணம் ஓர் உலகப் பொது நூல் என்பது புலனாகும். அத்தகைய பொது நூலை, பெரு நூலை ஆக்குவதென்றல் எளிதான காரியமா! ஆழ்ந்த உலக அனுபவம்-நாட்டு வரலாற்று உண்மை யறிவு-அமைந்த தெளிவான புல மைத்திறம்-உண்மை ஞான அனுபவ நிலை இவையனைத்தும் ஒருங்கு சேர்ந்தாலல்லது பெரிய புராணம் போன்ற சிறந்த நூலை ஆக்குதல் இயலாது. அதன் பெருமையைச் சேக்கிழார் புராணச் செய்யுள் ஒன்று தெளி வாக்குகிறது.

கருங்கடலைக் கைநீந்திக் கொளஎளிது
முந்நீர்க் கடற்கரையின்
நொய்ம்மணலை எண்ணி யளவிடலாம்—
பெருங்கடல்மேல் வருந்திரையை
ஒன்றிரண்டென் றெண்ணிப் பிரித்தெழுதிக்
கடையிலக்கம் பிரித்து விடலாகும்
தருங்கடலின் மீனையள விடலாகும்
வானத் தாரகை யளவிடலாம்
சங்கரன் தாள்தமது,
சிரங்கொள் திருத்தொண்டர் புராணத்தை
யளவிடநம் சேக்கிழார்க்
கெளிதலது தேவர்க்கும் அரிதே

என்பது அச்செய்யுள்.

## பெரியபுராணத் தோற்றம்

பெரிய புராண ஆசிரியர் சேக்கிழார் பெருமான் என்பதை முன்னரே கூறியுள் ளோம். பன்னிரண்டாம் நூற்றுண்டின் முதற்பகுதியில் வாழ்ந்தவர் அம்முனிவர். இரண்டாம் குலோத்துங்கன் என்ற அநபாய சோழனிடம் மந்திரியாக விளங்கியவர். அம் மன்னவனைச் சிவநெறியில் தீவிரமாக அழுந் தும்படி செய்யவே பெரிய புராணத்தை யரு ளிச்செய்தார். தேவார திருவாசகங்களோடு சமமாக வைத்துப் போற்றப்பெறுவதே அப் புராணத்தின் பெருமையை நன்கு எடுத்துக் காட்டும். ஆண்டவன் அருள் துணையின்றி மெய்யன்பர்கள் வரலாற்றினை நாம் எழுத

முடியாதே என்று எண்ணிய சேக்கிழார் தில்லையம்பதிக்குச் சென்று பொன்னம்பல வாணர் சந்நிதியில் ஒன்றிய மனத்தோடு நின்று தியானித்தார். அப்போது ஆண்டவனே பெரிய புராணத்தைப் பாடுவதற்கு உலகெலாம் என முதலெடுத்துக்கொடுத்தார். அந்த அருள் வாக்கையே முதலாகக்கொண்டு "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்" என ஆரம்பித்துப் புராணத்தை நிறைவேற்றினார். ஆசிரியர் அன்றியும் உலகெலாம் என்ற அந்த ஞானமொழியை "ஓதியேறினார் உய்ய உலகெலாம்" எனப் புராணத்தின் நடுவிலும், "நின்றதெங்கும் நிலவி யுலகெலாம்" எனப் புராணத்தின் முடிவிலும் வைத்துப் போற்றிப்புகழ்ந்தார்.

## தொண்டர்கள் சிறப்பு

இனி அத்தொண்டர்களின் சிறப்புக்கள் சிலவற்றை ஈண்டு சிந்திப்போம். அவர்கள் அனைவரும் பல பிறவிகளிற் செய்த தவப்பயனாய்த் தோன்றி உலகத்தார்க்கு மெய்த் தொண்டினை அறிவுறுத்தியவர்கள். "உள்ளம் நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றில் தெள்ளி வடித்தறிந்த பொருள் சிவன்கழலிற் செறிவென்றே" கொண்டவர்கள். தேடிய மாடும் நீடு செல்வமும் தில்லை மன்றுள் ஆடிய பெருமான் அன்பர்க்காவன ஆகும் என்று தங்கள் செல்வத்தையெல்லாம் ஆண்டவனுக்கும் அடியார்கட்குமே அர்ப்பணித்தவர்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நிலைக்கேற்ப ஏதாவதொரு சிவதருமத்தை வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள். ஒருவர் சிவாலயத்தில் குங்கிலியத்தை தூபம் இடுவதைத் தம்பணியாகக் கொண்டிருந்தார். அடியவர்கட்குத் திருவோடு கொடுத்து மகிழ்ந்தார் ஒருவர். ஒருவர் அடியவர்க்கெல்லாம் கோவணம் கொடுத்துதவினார். அடியவர்கள் எதைக் கேட்டாலும் இல்லையென்று சொல்வதில்லையென்று உறுதியோடு மனைவியையும் கொடுத்து மகிழ்ந்தார் ஒரு முனிவர். அடியவர்க்குத் தீங்கு செய்வோரைத் தண்டிப்பதே தம் சிவபக்திக்கு அடையாளமாகக் கொண்டிருந்தார் ஒரு வீரர். ஏகாலியர் ஒருவர் அடியவர்க்கெல்லாம் ஆடை ஒலித்துக் கொடுப்பதே தொண்டாகச் செய்து வந்தார். இவ்வாறு அடியவர்க்கமுதளித்தல், பூவெடுத்துத் தொடுத்து ஆண்டவனுக்குச் சாத்தி மகிழ்தல், ஆலயங்களில் திருவிளக்கிடுதல் முதலாகப் பல்வேறு தொண்டு நெறிகள் பெரிய புராணத்தால் விளக்கம் பெறுகின்றன. இந்த செயல்களைப் பார்த்தால் சாமானியமாக யாரும் செய்யக்கூடிய செயல்தானே என்று தோன்றும். ஆனால் இவற்றைச் செய்ய முடியாமல் முட்டுப்பாடு நேர்கின்ற போதும், இடுக்கண் விளைகின்றபோதும் தங்கள் உடல் பொருள் ஆவி மனைவி மக்கள் முதலிய அனைத்தையும் அர்ப்பணித்துக் கொள்கையை நிறைவேற்றிக் கண்ட வீரச் செல்வர்கள் அவர்கள். நம்மனோர் சிறு துன்பம் நேரிட்டாலும் கடவுளை மறக்கவோ அல்லது கடவுளைச் சபிக்கவோ துணிகின்றோம். இனி அத்தொண்டர்களின் உறுதி நிலையைக் காட்டும் சில வரலாறுகளைச் சிந்திப்போம்.

கலய நாயனார் என்ற பெரியவர் நாள்தோறும் சிவாலயத்தில் குங்கிலியத் தூபம் எடுத்து மகிழ்ந்து வந்தார். நாளடைவில் அவர் குடும்பம் வறுமையால் பீடிக்கப்பட்டது. மனைவி மக்கள் சுற்றமெல்லாம் பசியால் வாடிவந்தார்கள். அந்நிலையைக்கண்டு சகிக்க முடியாத அவர் மனைவியார் தன் கழுத்திலணிந்திருந்த பொன் தாலியைக் கொடுத்து நெல்வாங்கி வரும்படி சொன்னார். கலியரும் தாலியை எடுத்துக்கொண்டு சென்றார். எதிரே குங்கிலியப் பொதியோடு ஒரு வண்டி வருவதைப் பார்த்தார். ஆண்டவனுக்கேற்ற குங்கிலியம் பெரும் பொதியாக இருப்பதைக் கண்டு அளவில்லாத ஆனந்தம் கொண்டார். உடனே தாலியைக்கொடுத்து அக்குங்கிலியப் பொதி முழுவதையும் வாங்கிக்கொண்டு போய்ச் சிவபெருமான் திருக்கோயிலில் சேர்ப்பித்துவிட்டு ஆண்டவனை வணங்கி நின்றார். பாருங்கள் அன்பர்களே! மனைவியும் மக்களும் சுற்றமும் தானும் பசியால் வருந்தித் துடித்தும் குங்கிலியத்தைக் கண்டபோது அனைத்தையும் மறந்துவிட்டாரே கலயர்! இதுவல்லவா உண்மையான பக்திநிலைக்கு அடையாளம். இவ்வாறு நம்மில் துறவிகள்கூட செய்யத் துணிவதில்லையே. இவ்வளவு பேரன்புடைய தொண்டரை ஆண்டவன் கைவிடுவானோ? அவருடைய இல்லத்தில் செம்பொன்னும் நவமணியும் செந்நெல்லும் முதலியவற்றை மழை போலப் பொழிந்து நிறைவித்து மகிழ்ந்தான் ஆண்டவனும்.

அமர்நீதியார் என்பவர் வணிகர். புதிதாக நெய்துவைத்திருந்த கோவணத்தை அடியவர்க்கெல்லாம் கொடுத்து மகிழ்ந்தார் அவர். ஒருநாள் ஒரு புதிய தொண்டர் வந்து தன் கைவசம் இருந்த கோவணம் ஒன்றைக் கொடுத்துப் பாதுகாத்து வைக்கும்படி சொல்லிவிட்டு நீராடக் காவிரிக்குச்சென்றார். நீராடித் திரும்பியபோது பெருமழை பொழியவே உடம்பெல்லாம் நனைந்து வந்தார். அத்தொண்டர் வந்தவர் அமர்நீதியாரைப் பார்த்துத் தான் கொடுத்த கோவணத்தை எடுத்து வரச் சொன்னார். உள்ளே சென்று பார்த்தால் கோவணம் எங்கோ மாயமாய் மறைந்துவிட்டது. திகைப்போடு வந்து வணங்கி உள்ளதைச் சொன்னார் அமர்நீதியார். வந்தவர் மிகவும் கோபித்துக்கொண்டு தன் கைத்தண்டில் கட்டியிருந்த மூன்றாவது கோவணத்தைக் கொடுத்து அதன் எடைக்குச் சமமாகக் கோவணம் கொடுக்கும்படி கட்டளையிட்டார். அமர்நீதியாரும் மகிழ்வோடு இசைந்து ஒரு பெரிய துலாக்கோல் கொண்டு வந்து நிறுத்தி வந்தவர் கொடுத்த கோவணத்தை ஒரு தட்டிலிட்டு தன் வசமிருந்த கோவணங்களையெல்லாம் மற்றொரு தட்டிலிட்டும் எடை சரியாக வில்லை. பின்னர் தன்னிடமிருந்த பட்டுந் துகிலும் எல்லாம் கொண்டுவந்து குவித்தார். அப்போது எடை சரியாகவில்லை. மறுபடியும் பொன்னும் மணியும் முதலிய ஆபரணங்களையெல்லாம் இட்டும் ஒரே கோவணம் உள்ள அந்த தட்டு தாழ்வதும் மற்ற இவ்வளவும் குவித்திருக்கும் தட்டு உயர்வதுமாக இருந்தது. இது என்ன மாயக் கோவணமாக இருக்கிறதே என்று மனங்கலங்கிய அமர்நீதியார் முடிவில் தானுந் தன் மனைவியும் மகவும் மூவரும் அத்தட்டில் ஏறத் துணிந்தார். துணிந்து,

இழைத்த அன்பினில்
இறைதிருநீற்று மெய்யடிமை
பிழைத்தி லோமெனில்
பெருந்துலை நேர்நிற்க என்றே
மழைத்த டம்பொழில்
திருநல்லூ ரிறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத் தோதினார்
ஏறினர் தட்டில்.

அப்படி ஒரு கோவணத்திற்காக அனைத்தையும் ஈடு கொடுத்துத் தாங்களும் ஈடாகத் தராசு தட்டில் ஏறி நிற்கவே அடியவர் தொண்டும் ஆண்டவன் அருளும் சமமாகித் துலாக்கோல் நேர்நின்றது. வந்த தொண்டர் திடீரென்று மறைந்தார். அம்பிகையோடு இடப வாகனராய் இறைவனாகக் காட்சியும் கொடுத்தார். உடனே அந்தத் தராசுத் தட்டு விமானமாக மாறியது அமர்நீதியார் குடும்பத்துடன் கைலைமா மலை சென்றார். அங்கே குபேரனும் ஏவல் கேட்கும்படி பெருஞ்செல்வராய்ப் பேரின்பக் கடலில் மூழ்கி வாழ்ந்தார். ஒரு கோவணத்தைக் கெட்டுப் போக்கியதற்காக இப்படிப்பட்ட தியாகம் செய்ய நாமெல்லாம் துணிவோமா. பாரம் ஈசன் பணியலதொன்றிலார்—வீரம் என்னால் விளம்புந் தகையதோ எனச் சேக்கிழார் பெருமானே கூறுவாரானால் அவர்கள் பெருமையை என்னென்பது.

## மூவர் முதலிகள்

பெரிய புராணத் தொண்டர்களில் திருஞான சம்பந்தப் பெருமானும் திருநாவுக்கரசு நாயனாரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் மூவர் முதலிகள் எனச் சைவ சமயத்தார் சிறப்பாகப்போற்றி வணங்குகின்றனர். அவர்களைப் போன்ற அருட்சக்தி வாய்ந்த சமயத் தலைவர்கள் இதுவரை வேறெங்கும் தோன்றவில்லை என்பது துணிபு. தெய்வத்தைப் பற்றிப் பேசாமலே உலக நீதிகளை மட்டும் போதித்த சமயத் தலைவர்களும் தெய்வத்தைக் காணாமல் நம்பிக்கை மாத்திரமாய்ப் போதித்தவர்களும் என இரண்டு வகையான சமயத் தலைவர்கள் உலகத்தாரால் போற்றப் பெறுகின்றனர். மகாவீரர், கௌதமபுத்தர் எல்லாம் கடவுள் கொள்கை யில்லாமலே சமயம் சாதித்தார்கள். முகமதுநபி, ஏசுநாதர் முதலியோர் நம்பிக்கை மாத்திரமாய்க் கடவுளைப்பற்றிப் பேசினார்கள். ஆனால் மேலே சொல்லிய மூவர் முதலிகளும் கடவுளை நேரில் கண்டார்கள். பிறருக்கும் காட்டினார்கள். வழிவழியே நம்மனோர் காணவும் வழிவகுத்தார்கள். திருவருளை உணராது உலகத்தையே நோக்கி எவ்வளவு கடுமையான சீர்திருத்தம் செய்தாலும் அவை நீடித்து நில்லாது என்பதே நமது பெரியோர்கள் கொள்கை. கடவுளுக்கும் உலக நிகழ்ச்சிகட்கும், கடவுளுக்கும், ஆன்மாக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் முத்தியிலும்கூட இல்லை என்பது ஜைனர்கள் கருத்து. கடவுள்

உண்டா இல்லையா என்று வினவியபோது கௌதமபுத்தர் ஒன்றும் சொல்லாமல் மௌனம் சாதித்து மறைந்தார். ஆனால் அவரது சீடர்கள் கடவுள் இல்லையெனச் சாதித்துப் புத்தமதக் கொள்கையாக்கினர். கடவுளைக் காணவில்லையாதலால் கடவுளுக்கு உருவமில்லை என்றும் உருவத்தை வணங்குபவன் அஞ்ஞானி என்றும் கருதினார்கள். இதிலிருந்து அவர்கள் கடவுளை ஒப்புக்கொண்டார்கள் அல்லது நம்பினார்களே தவிர கடவுளைக் காணவில்லை என்பது தெளிவாகின்றது. இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது நாட்டுப் பெரியோர்கள் மிகப் பழங்காலத்திலேயே கடவுளைக் காணமுடியும் என்பதை உணர்ந்திருந்தனர் என்பது தெரியவரும்.

இந்து மதமாகிய பெரிய மரத்தின் கிளைகளே வெவ்வேறு மதமாக உலகமெங்கும் பரவின என்பது பேரறிஞர்கள் கருத்தாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி நாயனார் என்ற மூவர் முதலிகளும் திருவருள் வல்லமையால் யாரும் நினைக்கவும் முடியாத பல அற்புதங்களைச் செய்து கடவுள் உண்மையை உலகத்தார்க்குத் தெளிவுபடுத்தினார்கள். இத்தகைய சைவசமயப் பேருண்மைகள் உலகமெங்கும் பரவி வேர்கொள்ளுமாயின் விஞ்ஞானத்தில் உள்ள மோகம் தணிந்து உலகம் மெய்ஞ்ஞானத்தை நாடும் என்பது உறுதி.

## பெரியபுராணத் திறவு-உடைமையும் அடிமையும்

சைவ சித்தாந்த முடிபுகளே பெரிய புராணத்து நிகழ்ச்சிகட்குத் திறவாக இருப்பன. அவற்றைத் தெளிவாக உணர்ந்தாலல்லது திருத்தொண்டர்கள் செய்த அருஞ்செயல்களின் நியாயத்தையும், பெருமையையும் நாம் உள்ளவாறு உணரமுடியாது. ஆதலால் அவற்றுள் சிலவற்றையாவது இங்குச் சிந்திப்போமாக. உலகமெல்லாம் இறைவனுக்கு உடைமை. உயிர்களெல்லாம் இறைவனுக்கு அடிமை என்ற முடிபு ஒன்று. மற்றொன்று அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் சிவனடியாரிடத்தும் திருக்கோயிலுள்ளிருக்கும் சிவலிங்கத் திருமேனியிடத்தும் விளங்கித் தோன்றி நமக்கருள்புரிவான் என்பது. ஆன்மாக்கள் தன்னை நினைத்து மகிழ்வதற்காகச் சிவபெருமான் தனது சிறப்புச் சின்னங்களாகிய திருநீறு கண்டிகையைத் தனது அன்பர்களும் அணிந்துகொள்ளுமாறு அமைத்தார். ஆதலால் அடியார்களைக் காணும்போது சாமானிய அன்பர்கட்குச் சிவபெருமான் நினைவு வருகின்றது. ஆனால் மெய்யன்பர்கட்கோவெனின் அடியார்களைக் காணும்போது ஆண்டவனே என்ற உணர்வு நிலைக்குச் சென்றுவிடுகிறார்கள். இம் முடிபுகளை நம்மனோர் ஒப்புக் கொள்கின்றோம் அல்லது நம்புகின்றோமே தவிர அனுபவத்தில் உணரவில்லை. ஆனால் திருத்தொண்டர்கள் அனைவரும் மெய்யுணர்வு பெற்றவர்களாதலால் இவற்றை அனுபவத்தில் உணர்ந்திருந்தார்கள். காளத்தி மலைமீதமர்ந்த குடுமித்தேவர் திருவுருவத்தில் கடவுளைக் கண்டார் கண்ணப்பர். அமர்நீதியார், இயற்பகையார், சிறுத்தொண்டர் முதலியோர் அடியார்களை ஆண்டவனாகவே எண்ணிப் பெருந்தியாகம் செய்தார்கள். இவையெல்லாம் உண்மையனுபவ நிலையில் நிகழ்த்தப்பெற்றது. இறைவனே இல்லை என்பவர்கள் இவற்றைக்குறை கூறுவது நியாயமாகும். ஆனால் இறைவனை நம்புகின்றவர்கள் இறைவன் திருவடியை அடைவதே ஆன்மலட்சியம் என ஒப்புக் கொள்கின்றவர்கள் திருத்தொண்டர் செயல்களைப் போற்றி மகிழ்வர் என்பது உறுதி

## மெல்வினை வல்வினை

இனி மெல்வினை, வல்வினை என்ற சைவ சித்தாந்த முடிபினைச் சிறிது சிந்திப்போம். திருவருளைப் பெறுவதற்காகச் செய்யும் முயற்சிகள் எல்லோரும் பின்பற்றக்கூடிய எளிமையுடையனவும், பல்லாயிரவரில் ஒருவர்கூடப் பின்பற்ற முடியாத அருமையுடையனவும் என இருவகைப்படும். இவற்றையே மெல்வினை, வல்வினை எனப்பிரித்துத் திருக்களிற்றுப்படியார் என்ற அருள் நூல் தெளிவுபடுத்துகின்றது.

மெல்வினையே யென்ன வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே என்ன வருமிரண்டும்—சொல்லிற்
சிவதன்மம் ஆமற்றிற் சென்றதிலே செல்வாய்
பவகன்மம் நீங்கும் படி.

ஆதியை அர்ச்சித்தற் சங்கமும் அங்கங்கே
தீதில் திறப்பலவும் செய்வனவும்—வேதியனே
நல்வினையா மென்றே நமக்குமெளி தானவற்றை
மெல்வினையே யென்றதும் வேறு.



திருக்கோயிலூர் திரிவிக்கிரமப்பெருமாள்

வரங்கள் தரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினு லன்றுகறி யாக்க—இரங்காதே
கொள்வினையே செய்யுங் கொடுவினையே யான
[வற்றை
வல்வினையே என்றது நாம் மற்று.

இவ்வெண்பாக்களும் இன்னும் பலவும் மெல்வினை வல்வினைபற்றித் தெளிவுபடுத்துகின்றன. மகவை யறுத்துக் கறி சமைத்தலும், மனைவியைக் கொடுத்து மகிழ்தலும், கண்ணிரண்டையும் பறித்து அப்புதலும் போன்ற செயல்கள் வல்வினை யெனப்படும். நம்போன்ற சாமானியர்கள் இவ்வளவு கடுமையான செயல்களைச் செய்ய முடியாது. ஆதலால் நம் நிலைக்கேற்ப எளிய முறையில் செய்யக்கூடியவை சரியை கிரியை யோகம் என்ற படிமுறையான காரியங்களே மெல்வினை யெனப்பெறும். இவ்விருவகையும் பெரிய புராணத்தில் விளக்கமாக அறிவிக்கப்பெறுகின்றன.

## வினைபற்றிய தீர்ப்பு

உழவுத் தொழிலை ஏற்றுக்கொண்டு அதன் பயனை நமக்குத்தரும் விளை நிலம் போல நாம் செய்யும் வினையை ஏற்றுக்கொண்டு அவற்றை புண்ணியமா பாவமா எனப் பரிசீலித்து அவற்றின் பயனை நமக்குச்சேர்ப்பது ஆண்டவன் அருட் சத்தி என்பதும் சித்தாந்த முடிபுகளுள் ஒன்று. அதற்குக் காரணமும் நியாயமும் சிவஞானபோதம் முதலிய நூல்களுள் விரிவாக விளக்கம் பெறுகின்றன.

பரனடிக் கன்பிலார்செய் புண்ணியம் பாவமாகும்
அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரரினிற் பாலன் செய்த தீமையும் நன்மையாய்த்தே

என்பது சிவஞான சித்தியார்.

---

**பந்தணைநல்லூர்:** பசுபதீசுவரர் கோயிலில் மாதாந்தர் பிரதோஷ கூட்டு வழிபாட்டு இரண்டாவது ஆண்டுவிழா 30-12-60 ல் நடைபெற்றது.

**மதுரை:** கூடலழகர் கோயிலில் 'பகல் பத்து' உற்சவம் 18-12-60 முதல் தொடங்கி 27-12-60 முடியவும் 28-12-60 முதல் 'இரா பத்து' உற்சவமும் நடைபெற்றன.

**தில்லை:** 'பல்லாண்டு விளக்கு நிதி' சார்பில் 1-1-61 ல் 'திருவாதிரைத்' தேர்த் திருவிழாவும் திருப்பல்லாண்டு ஓதலும் நடைபெற்றது.

**திருவள்ளூர்:** வீரராகவசுவாமி கோயிலில் தை பிரம்மோற்சவம் 12-1-61 முதல் 21-1-61 முடிய நடைபெற்றது.

14-1-61 முதல் 31-1-61 வரை தைப்பூச மகோற்சவமும் நடைபெற்றது.

**திருவட்டத்துறை:** தீர்த்தபுரீசுவரர் கோயில், இறையூர்-தாகந்தீர்த்தீசுவரர் கோயில் ஆகியவைகளின் சார்பாக இறையூரில் 12-1-61-ல் திருப்பாவை - திருவெம்பாவை மாநாடு, அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் B.A., B. L, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்னை-தருமையாதீன சமயப் பிரசார நிலையத் தலைவர் வித்துவான் திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் மாநாட்டைத் துவக்கி "திருவாசகத்தேன்" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். பேராசிரியர் புலவர் திரு. முருகவேள் M. A, M. O. L. 'சூடிக்கொடுத்த நாச்சியார்', என்பது பற்றியும், வித்துவான் திரு. K. குஞ்சிதபாதம் அவர்கள் "திருவெம்பாவை" என்பது பற்றியும், உதவி ஆணையர் திரு. R. A. வரதராஜன் B. A, அவர்கள் திருப்பாவை-திருவெம்பாவை மாநாட்டின் அவசியம் பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

**சோளிங்கபுரம்:** இலட்சுமி நரசிம்ம சுவாமி கோயில் திருமலை திருப்படி விழா திரு. T. M. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# திருக்கோவலூர் திரிவிக்கிரமப் - பெருமாள் கோயில்

மஞ்சாடு வரையேழும் கடல்களேழும்
வானகமும் மண்ணகமும் மற்றுமெல்லாம்
எஞ்சாமல் வயிற்றடக்கி யாலின்மேலோ
ரிளந்தளிரில் கண்வளர்ந்த வீசன்றன்னை
துஞ்சாநீர் வளஞ்சுரக்கும் பெண்ணைத்தென்பால்
தூயநான் மறையாளர் சோமுச் செய்ய
செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே

—திருமங்கையாழ்வார்.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோவலூர் நடுநாட்டிலுள்ள ஆழ்வார்களால் மங்களசாசனம் பெற்ற திவ்விய தேசம். இப்பதி திருக்கோயிலூர் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து இரண்டு கல் தொலைவிலுள்ளது. பூங்கோவலூர், கோபாலபுரம் என்ற பெயர்களும் இவ்வூருக்குண்டு. திருக்கோவலூரில் மேலூர் என்ற பகுதியில் எம்பெருமான் திருக்கோயில் அமைந்திருக்கிறது. மிகப் பழைய பெரிய கோயில் கோபுரங்களுடன் காட்சி யளிக்கிறது.

இக்கோயிலில் எழுந்தருளிய எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் சேவை சாதித்தருள்கிறார். திரிவிக்கிரமன், தேகளீசன், கோவலன், ஆயன் முதலியன இறைவனின் திருநாமங்கள். பெருமாள் எழுந்தருளியிருப்பது ஸ்ரீகரவிமானம். 20 அடிக்கு 8 அடி பரப்புள்ளகர்ப்பக்கிரகத்தில் 21 அடிஉயரமுள்ள திரிவிக்கிரமப் பெருமாளின் காட்சி எங்கும் காணக் கிடைக்காததொன்றும். அந்த சிறு இடத்திற்குள்ளேயே முனிவர்கள், பக்தர்கள் முதலியவர்களின் 15 திருவுருவங்கள் இருக்கின்றன. திருமால் வாமனவதாரமெடுத்து மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடிமண் கேட்டு, திரிவிக்கிரம ரூபத்துடன் பூலோகத்தை ஓரடியும், மேலுலகங்களை ஓரடியுமாக அளந்து, மூன்றுவதடி மகாபலியின் தலையில் வைத்து பாதாளத்தில் பக்திசெய்து கொண்டிருக்கும்படி அனுக்கிரகித்தார் என்ற கதைப் பிரசித்தமானதே. எம்பெருமான் மிருகண்டு முனிவர்க்கும், சாம்புவந்தருக்கும் பிரத்தியட்சம். இத்தலத்தின் தீர்த்தம் கிருஷ்ணதீர்த்தம். பிராட்டியாரின் திருப்பெயர் பூங்கோவல் நாச்சியார் என்பது. இந்தக் கோயிலில் ஆண்டாள், இராமர், வரதராஜப் பெருமாள், கண்ணன், இலட்சுமிநாராயணர், சேனை முதலியார், உடையவர், மணவாள மாமுனிகள் முதலியவர்களின் சந்நிதிகளும் உள்ளன.

முதலாழ்வார் மூவர்களும் தங்களுடைய திருவந்தாதிப் பாசுரங்களை இப்பதியிலேயே பாடத் தொடங்கினர் என்பது வரலாறு. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் இம்மூவருமே முதலாழ்வார்கள். கல் லுயர்ந்த நெடுமதிள் சூழ்கச்சியிலே திருவெஃகாவில் அவதரித்தார் பொய்கையார். கச்சிக் கிடந்தவனூர் கடல்மல்லைத்தலசயன (மகாபலிபுர)த்திலே பூதத்தார் தோன்றினார். தேனமர் சோலைமாடமா மயிலையிலே (மயிலாப்பூரிலே) திருவவதாரம் செய்தார் பேயாழ்வார். இம்மூவரும் ஒரு நாளிருந்த இடத்தே ஒரு நாளிராமல் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தனர். மூவரையும் ஒன்று சேர்க்க வேண்டுமென்பது எம்பெருமான் திருவுள்ளம். ஒருநாள் மூவரும் தனித் தனி வந்து திருக்கோவலூர் எம்பெருமானைச் சேவித்தனர். பொழுதுசாய்ந்தது. இருள் மூடியது. மின்னலும், இடியும், மழையும் வந்தன. பொய்கையாழ்வார் ஒரு வீட்டின் இடைகழியில் போய்ப்படுத்தனர். பூதத்தாரும் அங்கே சென்று "இடம் கிடைக்குமோ" என்று கேட்க, "ஒருவர்படுக்க, இருவர் இருக்க இடமுண்டு" என்று பதில் வந்தது. கொஞ்சநேரத்திற்குப் பின் பேயாழ்வாரும் அங்கே வந்து அதே கேள்வியைக் கேட்டார். "ஒருவர் படுக்க, இருவர் இருக்க, மூவர் நிற்க இடமுண்டு" என்று பதில் வரவே அந்த சிறிய இடத்தில் மூவரும் நிற்க வேண்டி வந்தது. நாலாவது ஒருவர் வந்து நெருக்குவது போன்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்

டது. அகக்கண்கொண்டு நோக்கினுர்கள். அவ்வளவில் பொய்கையாழ்வார்,

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழியா னடிக்கே சூட்டினேன் சொன்மாலே
இடராழி நீங்குகவே யென்று

எனத் திருவாய் மலர்ந்தனர். பின்னர், பூதத்தாழ்வார்,

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா-நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்

என்னும் பாசுரத்தைப் பாடி யருளினர். உடனே பேயாழ்வாரும்,

திருக்கண்டேன் பொன்மேனி
கண்டேன் திகழும்
அருக்கனணி நிறமும்
கண்டேன்—செருக்கிளரும்
பொன்னுழி கண்டேன்
புரிசங்கம் கைக்கண்டேன்
என்னுழி வண்ணன்
பாலின்று

என்னும் திருப்பாடலேப் பணித்தார். எம்பெருமான் அம்மூவருக்கும் சேவை சாதித்தருளினன். அம்மூன்று பாடல்களையுமே முதலாகக்கொண்டு முதல், இரண்டு, மூன்றும் திருவந்தாதிகளாக முதலாழ்வார் மூவரும் ஓதியருளினர்.

திருமங்கையாழ்வார் இத்தலத்திறைவன் பேரில் பத்துப் பாசுரங்களையுடைய ஒரு பதிகம் பாடியிருக்கின்றனர், வேறு ஏழு பாடல்களிலும் இப்பதியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறுர். "செல்வச் செறியார்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும் திருக்கோவலூர்," "கருங்கமுகு பசும்பாளே வெண்முத்தீன்று, காயெல்லாம் மரகதமாய்ப் பவளங்காட்ட, செருந்தி மிக மொட்டலர்த்தும் தேன்கொள்சோலேத் திருக்கோவலூர்" என்றெல்லாம் புகழ்ந்து பேசுகிறுர். "மதிள் கோவலிடை கழி ஆயனே", "கோவலிடை கழிமைந்தனே", "கோவலூர் மன்னுமிடை கழியெம் மாயவனே" என்று இறைவனைப் போற்றுகின்றுர். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் இருவரும் தங்கள் பாசுரங்களில் இப்பதியைப்பற்றிக் குறிக்கின்றனர்.

இந்த கோயிலில் தமிழ், வடமொழிக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை விக்கிரமபாண்டியன், இராஜராஜன் II, குலோத்துங்கன் III, சோழகேரளன், இராஜேந்திரன் I, சாளுவநரசிம்மன், நரசநாய்க்கன், சதாசிவராயன், விக்கிரமசோழன், இராஜாதிராஜன், சோமண்ண உடையார் முதலிய மன்னர்கள் காலத்தவை. குறுக்கைக் கூற்றத்து மலாட்டிலுள்ள கோவல் என்று குறிப்பிடுகின்றன. திருவிடைகழி, சித்திரமேழி விண்ணகர் என்றும் அவை கூறுகின்றன. எம்பெருமான் திருநாமத்தை திருவிடைகழி ஆழ்வார், திருவிடைகழி நாயனுர், திருவிடைகழி எம்பெருமான் என்றும், தெரிவிக்கின்றன. இராமன் நரசிங்கன் என்ற தலைவன் ஒருவன் ஸ்தூபியுடன் விமானம் கட்டியது, செம்பங்குடையான் நாராயணன் ஆதித்தன் அல்லது சோழசுந்தரமூவேந்த வேளான் என்ற சிற்பி அதைக் கட்டியது, கோயிலுக்கு நிலம் விற்றது, திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகம் பாட ஏற்பாடு செய்தது, நிலப் பரிவர்த்தனை செய்தது, கோபுரம், மதில்கள் இவை அழிந்து போனதைக் கட்டியது, பூசை வழிபாட்டுக்கு, விளக்கேற்ற நிலம், நெல், ஆடுகள் இவைகள் வழங்கியது முதலிய பல செய்திகள் அக்கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. திரிவிக்கிரம அவதாரத்தைப்பற்றிய வடமொழிப் பாடல் ஒன்றும் இருக்கிறது. உழவர் பெருமையைக் கூறும் பாடலாகத் தொடங்கும் ஒரு கல்வெட்டின் பகுதி பின் வருமாறு:—

பூமிதேவிக்கு மக்களாகி நிகழ்
செந்தமிழ் வடகலே தெரிந்துணர்ந்து
நீதிகேட்டு நிபுணராகி
நறுமலர் வாடாத் திருமகள் புதல்வர்
எத்திசைக்கும் விளக்காகி இன்சொல்லா
[லினிதளித்து
வன்சொல்லால் மறங்கடிந்து சதுசாகர
[பரிமண்டலத்து
சந்திராதித்தவரை யினிதோங்கி
வாதராசன் காற்றசைப்ப வருணராசன்
[நீர்தெளிப்ப

தேவராசன் திசைவிளக்க
எத்திசை மகவிருமினிது வீற்றிருப்பத்
தெங்கும் பலாவும் தேமாஞ் சோலையும்
வாழையும் கமுகும் வளர்கொடி முல்லையும்
பூவையும் கிள்ளையும் பொலிவொடும்கெழுமி
வாட்டமின்றிக் கூட்டம் பெருகி
அறம்வளரக் கலிமெலியப்
புகழ்பெருகப் பகைபணியத்
திசையனைத்தும் செவிடுபடாமல்
[செங்கோல் முன்னுகவும்
சித்திரமேழியே தெய்வமாகவும்
செம்பொற் பசும்பையே வலிமையாகவும்
க்ஷமையினெடுங் கருணையெய்திச்
[சமயதர்மமினிது நடாத்தி
நிகழா நின்ற
உத்தமநீதி யுயர்பெருங் கீர்த்தி
முத்தமிழ்மாலை முழுவது முணர்ந்த
சித்திரமேழிப் பெரிய நாட்டோர்.

(தென் இந்திய கோயிற் சாசனங்கள் I பாகம்)

இவ்வளவு பழம் பெருமை நிறைந்த கோயிலின் கோபுரங்கள், மதில்கள், மண்டபங்கள் முதலியன சிதைவுற்றன. மூன்று கோபுரங்களில் ஒன்று 185 அடி உயரமானது. விஸ்தாரமண்டபம் மிகவும் அகன்று உயர்ந்து அழகாகக் காணப்படுவது. சிதைவுற்ற பாகங்களைச் செப்பம் செய்ய ஒரு திருப்பணிக்குழு அமைக்கப் பெற்றிருக்கிறது. அதன் செயலாளர் திரு. T. R. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள். அன்னுருடைய சலியாத உழைப்பினுலும், விடா முயற்சியாலும், தளராத ஊக்கத்தினுலும் மூன்று திருமதில்கள், மண்டபத்தின் மேல் தளங்கள், தாயார், பெருமாள், ஆண்டாள், சக்கரத்தாழ்வார், பூவராகன் சந்நிதிகளின் மேலுள்ள விமானங்கள் இவை இதுவரை திருப்பணி செய்யப்பெற்று முடிவடைந்தன. அரசாங்கம் கொடுத்த மானியத் தொகையுடன் ரூ 33,000 செலவாகி யிருக்கிறது. மின்விளக்குகளும் போடப்பட்டிருக்கின்றன. இன்னும் சொர்க்கவாசல், இராமர், வரதராஜர், உடையவர், இலட்சுமிநாராயணர், மணவாள மாமுனிகள், கண்ணன் சந்நிதிகளிலுள்ள விமானங்கள், புஷ்கரணி, பிரகாரத் தளவரிசை இவைகள் திருப்பணி செய்ய ரூ. 84,000க்குத் திட்டம்போடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தில் கோபுரங்கள் புதுப்பிக்கும் திருப்பணி சேரவில்லை. அதற்கு இரண்டு இலட்சம் ரூபாய் பிடிக்கும். புகழ் பெற்ற இக்கோயிலை முழுவதும் புதுப்பிக்க அன்பர்கள் முன்வந்து உதவிசெய்து, திருக்கோவலூர் மேவிய திரிவிக்கிரமப் பெருமாளின் திருவருளுக்குப் பாத்திரர்களாவார்களாக.

தாமரையான் ஆதியாய்த்
தாவரங்கள் ஈறுஆன
சேமஉயிரும் செகம்
அனைத்தும்—பூமடந்தைக்கு
ஆம்கோ அலாயுதன்
பின்னு அவதரித்த
பூங்கோவல் ஆயன்
பொருள்

—பிள்ளைப்பெருமாளையங்கார்.

---

தாமரங்கோட்டை : கண்டீசுவரசுவாமிகோயிலில் 11—12—60ல் அறநிலைய அமைச்சர் கனம் திரு. எம். பக்தவத்சலம் அவர்களால் கோயிலில் நிறுவ இருக்கும் "கோயில் வழிபாட்டு வளைவுக்கு" அடித்தளக்கல் நாட்டப்பெற்றது.

சென்னிமலை : சுப்பிரமணியசுவாமிகோயிலின் திருப்பணி வேலைகள் அறநிலைய அமைச்சர் அவர்களால் 20—11—1959 தேதி துவக்கப்பெற்று திருப்பணி வேலைகள் நடந்து வருகிறது. இத்திருப்பணி வேலைகள் முடிவுறுவதற்கு சுமார் மூன்று இலட்சம் ரூபாய்கள் வரை செலவாகுமென்று தெரிவதால் பக்தகோடிகள் தாராளமாக பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். பணம் அனுப்புபவர்கள் தலைவர், திருப்பணிக் கமிட்டி ஆபீஸ், சுப்பிரமணியசுவாமிகோயில், சென்னிமலை என்ற முகவரிக்கு அனுப்புமாறு வேண்டப்படுகிருர்கள். தைப்பூச விழா 23—1—61 முதல் 4—2—61 வரை நடைபெற்றது.

திருத்தண்டலைநீணெறி : ஞானம்பிகா சமேத நீணெறிநாத சுவாமிகோயிலில் அரிவாட்டாய நாயனுர் மகோற்சவம் 28—1—61 முதல் 30—1—61 வரை நடைபெற்றது.

# திருக்கோவலூர் வீரட்டேசுவரர் கோயில்

ஆறுபட்ட புன்சடை
அழகன்ஆயி ழைக்கொரு
கூறுபட்ட மேனியான்
குழகன்கோவ லூர்தனுள்
நீறுபட்ட கோலத்தான்
நீலகண்டன் இருவர்க்கும்
வேறுபட்ட சிந்தையான்
விரட்டானஞ் சேர்துமே
—திருஞானசம்பந்தர்.

படைகள்போல் வினைகள் வந்து
பற்றியென் பக்கல் நின்றும்
விடகிலா ஆதலாலே விகிர்தனை
விரும்பி யேத்தும்
இடையிலே னென்செய் கேனு
னிரப்பவர் தங்கட் கொன்றுங்
கொடையிலேன் கொள்வ தேநான்
கோவல்வீ ரட்டனீரே
—திருநாவுக்கரசர்.

"சேதிநன்னாட் டுநீடு திருக்கோவலூர்" என்பார் சேக்கிழார் பெருமான். இத்தலம் நடு நாட்டிலுள்ள தேவாரப்பாடல் பெற்றது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இருக்கிறது. திருக்கோயிலூர் என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து சுமார் ஒரு கல் தொலைவி லிருக்கிறது. திருக்கோவலூர் என்ற நகர், கீழூர், மேலூர் என்ற இருபகுதிகளாக இருக் கின்றது. கீழூரில் வீரட்டேசுவரர் கோயி லும், மேலூரில் திரிவிக்கிரமப் பெருமாள் கோயிலும் இருக்கின்றன.

மிகப்பழங் காலந்தொட்டே இது மன் னர்களின் தலைநகராக இருந்துவந்தது. மலைய மான் திருமுடிக்காரி அரசாண்டதும், அவன் வழித்தோன்றலாகக் கருதப்படும் மெய்ப் பொருள் நாயனார் இருந்து செங்கோலேச்சிய தும் இப் பெருமைபெற்ற பதியிலேதான். மலையமான்நாடு, மலாடு என்று இந்நாடு குறிக்கப்பெறுகிறது. மெய்ப்பொருள் நாய னாரை மலாடர் கோமான் என்று கூறுவர் பெரியபுராண ஆசிரியரான குன்றைமுனிவர்.

வீரட்டேசுவரர் கோயில் தென் பெண்ணையாற்றின் தென்கரையில் இருக் கிறது. அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்று. அந்தகாசுரனைச் சிவபெருமான் கொன்ற இடம். கோயில் மேற்குநோக்கி யிருக்கிறது. இறைவன், அம்பிகை சந்நிதிகளும் அப்படி யேதான். சிவபெருமான் கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. உட் பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் ஔவை யார் பூசித்த விநாயகர் சந்நிதி இருக்கிறது. வடக்கு உட்பிரகாரத்தில் ஆறுமுகசுவாமி, அந்தகாசுரமூர்த்தி இவர்களின் திருவுரு வங்கள் உள்ளன. ஆறுமுகசுவாமிக்கு ஒரு முகமும் ஆறுதிருக்கரங்களும் இருக்கின்றன. அந்தகாசுரமூர்த்தியின் உருவம் வெகு அழ கானது. வீரட்டேசுவரர் சுயம்புலிங்கமூர்த்தி. அந்தகாந்தகன், வீரட்டகாயன், திரிசூலன், பெண்ணைவலத்தன், திருக்கோவலத்தான், பச்சிமாலிமுகத்தவன் என்பவற்றை இறை வன் திருநாமங்களாகப் புராணம் கூறுகிறது.

சுவாமி சந்நிதிக்குத் தெற்கே அம்பிகை சந்நிதி தனிக் கோயிலாக அமைந்திருக்கிறது. அதற்கொரு பிரகாரம் உண்டு. தேவியின் திருப்பெயர்கள் சிவானந்தவல்லி, பிரகந்நாயகி என்பன.

தென்பெண்ணை அல்லது பினாகினி இந்த தலத்தின் தீர்த்தம். ஆற்றின் நடுவில் கபிலர் குன்று என்ற சிறுகுன்றில் கபிலர் பூசித்த சிவலிங்கம் இருக்கிறது. தலவிருட்சம் கொன்றை.

மலாடர்கோமான் இந்நகரிலிருந்து அர சாண்டார். மெய்யடியார் வேடமே சிந்தை செய்பவர். பகைமன்னன் ஒருவன் இவருடன் பலமுறைப் போரிட்டுத் தோற்றான். இவ ருடைய சீலத்தை யறிந்து வஞ்சனையால் வெல்ல நினைத்தான். சிவனடியார்போல் வேடம் போட்டுவந்து அரசர் தனித்திருக்கும்

போது வெட்டி வீழ்த்தினன் முத்தநாதன் என்ற கொடியவன். அதையறிந்த அரசருடைய மெய்காப்பாளனுன தத்தன் அவ்வஞ்சகனை வாளால்வெட்ட முற்பட, மெய்ப்பொருள்வேந்தர் தடுத்து அவனுக்கு யாதொரு திங்கும் நேராதவண்ணம் நகரின் எல்லைக்கப்புறம் விட்டுவரப் பணித்தார். அவனும் அப்படியே செய்துவந்து தெரிவிக்க, நாயனுர் இறைவன் திருவடி நீழல் எய்தினுர். "வெல்லு மாமிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்" என்று சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் கூறியிருக்கிருர்.

சுந்தரரும் சேரமான் பெருமாள்நாயனுரும் திருக்கயிலாயம் சென்றனர். இதையறிந்த தமிழ்மூதாட்டியான ஔவைப்பிராட்டியும் தாமும் செல்ல எண்ணினுர். ஆதலால் தான் வழிபடு கடவுளான விநாயகப் பெருமானுக்கு அவசரமாகப் பூசைசெய்தனர். அதைக் கண்ட ஐங்கரன் "மெதுவாகப் பூசை செய். அவ்விருவருக்கு முன்னர் உன்னைக் கயிலாயம் சேர்ப்பிக்கிருேம்' என்றருளினர், ஔவையார் மனமகிழ்ந்து "சீதக்களப" என்று தொடங்கும் அகவலைப் பாடி வழிபாட்டை முடித்தனர். விநாயகப் பெருமான் அவரைத் தனது துதிக்கையால் தூக்கிக் கயிலாயத்தில் விட்டுவிட்டார். தங்களுக்குமுன் அங்கிருந்த அம்மையாரை, சுந்தரரும் சேரமானும் எப்படி வந்தீர்கள் என்று கேட்டார்கள். செந்தமிழ்ச் செல்வியார்,

மதுர மொழிநல் லுமையாள்
புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல் லார்க்கரி
தோமுகில் போன்முழங்கி
அதிர நடந்திடும் யானையுந்
தேரு மநன்பின்வரும்
குதிரையுங் காதம் கிழவியும்
காதம் குலமன்னரே

என்று விடை பகர்ந்தார். "கணபதி பூசை கைமேல் பலன்" என்ற பழமொழி இதனுல் ஏற்பட்டதேயாகும். ஔவையார் வழிபட்ட விநாயகர் இக்கோயிலில் இருக்கிருர். "பெரியானைக்கணபதி" என்ற திருநாமம் அதனுல் வழங்குகிறது.

இத்தலத்தில் மாசிமகத் திருவிழா மிகச் சிறந்தது. பிரதோஷ நாட்களில் வழிபடல் மிகவும் புனிதமாகக் கருதப்படுகின்றது. நாலுகால பூசை நிகழ்கிறது. இத்தலத் திறைவனை வழிபட்டுப் பேறுபெற்ருேர், விநாயகர், முருகன், காளி, எமன், காமதேனு, சூரியன், வியாழன், உரோமசமுனிவர், மிருகண்டு, ஔவையார் முதலியவர்கள் என்று தலபுராணம் கூறுகிறது. ஆறுமுகசுவாமிகள் என்பவர்க்கு வீரட்டநாதரே திருநீறு முதலியன அளித்து உபதேசித்ததாகச் சொல்லப்படுகிறது. அவருடைய மடாலயம் கோயிலுக்கு கிழக்கே யிருக்கிறது. ஞானியார் சுவாமிகள் மடம் என்று புகழ்பெற்று விளங்குவதை யாவரும் அறிவர்.

இத் தலத்திறைவனைத் திருஞானசம்பந்தர் ஒரு பதிகத்திலும், திருநாவுக்கரசர் ஒரு பதிகத்திலும் பாடியருளியுள்ளனர். அருணகிரிநாதரும் ஒரு திருப்புகழ்ப்பாடலை ஓதியருளியுள்ளார். அப்பாடலில்,

கோவதாமறை யோர்மறை யோது
மோதம்வி ழாவொலி
கோடி யாகம மாவொலி மிகவீறும்
கோவை மாநகர் மேவிய
வீர வேலயிலாயுத
கோதை யானையி னுடமர் பெருமாளே

எனச் சிறப்பித்துக் கூறுகிருர்.

இந்தக் கோயிலில் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை பல்லவ நிருபதுங்க விக்கிரமன், விஜயநந்திவிக்கிரமன், இராஜராஜ சோழன் I, இராஜேந்திர சோழன் I இராஜாதிராஜன் II, குலோத்துங்கன் III, விக்கிரமசோழன், சுந்தரபாண்டியன், விஜயநகர வீரப்பிரதாப விஜயராயன், இராஷ்டிரகூட கன்னரதேவன் முதலிய அரசர்களின் காலத்தவை. தொண்டைமண்டலம் அல்லது ஜயங்கொண்ட சோழமண்டலத்து மலாடு அல்லது ஜனநாத வளநாட்டுக் குறுக்கைக் கூற்றத்துத் திருக்கோவலூர் என்று கூறுகின்றன. அவை இறைவனை, திருவீரட்டானமுடைய மகாதேவர், திருவீரட்டானத்துப் பெருமாள், திருவீரட்டானமுடைய நாயனுர், என்ற பெயர்களால் குறிக்கின்றன. கோயில் பூசனைக்கும் திருவிழாக்களுக்கும், விளக்கெரிப்பதற்கும் நிலம், ஆடுகள், பசுக்கள், நெல், பொன், தென்னந்தோப்பு, நந்தவனம் இவைகள் அளித்ததைத் தெரிவிக்கின்றன.

நில விற்பனை செய்தது, கோயிலில் நான்கு விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்தது, கருவூலத்திலுள்ள தங்கநகைகளின் பட்டியல், தங்கத்தட்டும் கவரியும் கொடுத்தது முதலியவைகளைப்பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. ஒரு கல்வெட்டில், திருக்கோவலூர் திருவிடைகழி எம்பெருமானுர் (விஷ்ணு) கோயிலுக்கும், திருவீரட்டானமுடையநாயனுர் கோயிலுக்கும் சொந்தமான நிலங்களை சேனுபதி ஆழ்வார், சண்டேசுரநாயனுர் இவர்கள் பிரதிநிதிகளாகப் பரிவர்த்தனைசெய்து கொண்டிருப்பதைக் குறிக்கப்பட்டிருக்கிறது.

கேடுமூப்புச் சாக்காடு
கெழுமிவந்து நாடொறும்
ஆடுபோல நரைகளாய்
யாக்கைபோக்க தன்றியும்
கூடிநின்று பைம்பொழிற்
குழகன்கோவ லூர்தனுள்
வீடுகாட்டு நெறியினுன்
வீரட்டானஞ் சேர்துமே

—திருஞானசம்பந்தர்.

---

**யோகீசுவரம் :** யோகநாதசுவாமி கோயிலில் திருமுறைக்கோயில் பிரதிஷ்டை விழா 11—1—61ல் சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**கந்தகோட்டம் :** கந்தசுவாமிகோயிலில் 14—1—61ல் சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள் முன்னிலையில், திருப்பாவை சாற்றுமுறை, திரு. கே. வரதாச்சாரி சுவாமிகள் அவர்களால் நடைபெற்றது. கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார், வித்துவான் திரு. ரா. நடேச நாயகர் சொற்பொழிவாற்றினுர்கள்.

**சென்னை :** அருணுலேசுவரர், வரதராஜப்பெருமாள் கோயிலில் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் விரிவுரையாற்றிவந்த திருவெம்பாவை—திருப்பள்ளியெழுச்சி விரிவுரைப்பூர்த்தி விழா 13—1—61ல் திரு. ஏ. வி. ஆவுடைநாயகம் பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. வி. நடேசனுர் பாராட்டுரை வழங்கினுர்கள்.

**புரசைவாக்கம் :** சீனிவாசப்பெருமாள் கோயிலில் 15—12—60 முதல் 13—1—61 வரை வித்துவான் ஆசுகவிஸார்வபௌம வில்லூர் ஸ்ரீநிதி சுவாமி அவர்களால் திருப்பாவை உபந்யாசம் நிகழ்த்தப்பெற்றது.

**தெற்கு விருதாங்கன் :** சுவர்ணபுரீசுவரர் கோயிலில் தை மாதம் 5ந்தேதி திருவெம்பாவை ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவும், இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும் நடைபெற்றன.

**திருராமேசுவரம் :** இராமநாதசுவாமிகோயிலில் 10—1—61ல் திருவெம்பாவை—திருப்பாவை மாநாடு திரு. எம். சண்முகசுப்பிரமணியம், பி.ஏ. பி.எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சொற்பொழிவும் கதாகாலட்சேபமும் நடைபெற்றன.

**கோடாலிகருப்பூர் :** இராமநாராயணப்பெருமாள் கோயிலில் 10—1—61 முதல் 14—1—61 வரை வெங்கடேசுவர சுப்ரபாத சுலோகங்களுக்கு வியாகர்ண சிரோன்மணி திரு. என். இராஜகோபால் அய்யங்கார் அவர்களால் விளக்க உரை நிகழ்த்தப்பட்டது.

**திருக்கடம்பந்துறை :** பேட்டைவாய்த்தலை, இராஜேந்திரம், கடம்பர்கோயில், சிவாயம், கருப்பத்தூர், திருஈங்கோய்மலை, முசிரி, வெள்ளூர் முதலிய கோயில்களில் தைப்பூச மகோற்சவம் 31—1—61ல் நடைபெற்றது, இன்னிசையரங்கும் நடைபெற்றது.

# கடாரங்கொண்டான் கோயில் திருப்பணி விழா

திருவாரூர் நாகப்பட்டினம் போகும் ரோடு மார்க்கத்தில் திருவாரூரிலிருந்து ஒரு கல் அளவில் இக்கோயில் இருக்கிறது. சுவாமி கைலாசநாதர். அம்பாள் பார்வதி அம்மையார். இந்தக் கோயில் மதில் திருப்பணி உலகப் பிரசித்தி பெற்ற ஐந்து பழம்பெருந் திருப்பணி களுள் ஒன்று. அதாவது திருவீழிமழலை வௌவால்நெத்தி மண்டபம். 2. ஆவுடையார் கோயில் கொடுங்கை. 3. திருவலஞ்சுழி பலகணி கருங்கல் ஜன்னல். 4. தஞ்சாவூர் நிழல் விழாத கோபுரம் 5. கடாரங்கொண்டான் திருமதில். கடாரங்கொண்டான் மதில் திருப்பணி இந்தக் கோயிலைச் சேர்ந்தது. இந்த மதில் கல் வைத்துக் கட்டியிருப்பது ஒட்டியிருப்பது போன்ற மிகப் பழமையான வேலை. அக்காலங்களில் திருக்கோயில்கள் திருப்பணி வேலை ஒப்புக்கொள்பவர்கள் மேல்கண்ட ஐந்து வகைத் திருப்பணி வேலைகளைத் தவிர மற்றவகைத் திருப்பணிகள்தான் தங்களால் செய்ய இயலும் என்று முறி எழுதிக் கொள்ளுதல் வழக்கம். இராஜேந்திரசோழன் கடாரம்வரை பர்மா சென்று வெற்றி கண்டு மீண்டு வந்த அறிகுறி யாகக் கடாரங்கொண்டான் என்று பெயர் வைத்து இவ்வூரையும், அதில் இவ்வாலயத்தை யும் அமைத்தான். இப்பெயரில் இன்றும் வழங்கி வருகிறது. இந்தக் கோயில் தருமை ஆதீனம் இராஜன் கட்டளையைச் சேர்ந்தது. இக்கோயில் மிகவும் சிலமாக இருந்ததைத் திருப்பணி செய்யத் தருமையாதீனம் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். 19—1—61 தேதி அன்று சென்னை அறநிலைய ஆணையர் உயர்திரு. உத்தண்டராம பிள்ளை அவர்கள் B.A., B.L., I.A.S. இத்திருப்பணியைத் துவக்கி வைத்தார்கள். இராஜன்கட்டளை சார்பில் அக்கட்டளை விசாரணை வித்துவான் சுவாமிநாதத் தம்பிரானும் தருமபுரம் ஆதீனம் பல்கலைக் கல்லூரி பேராசிரியர் வித்துவான் சிங்காரவேலன் B.A. அவர்களும் வரவேற்றுப் பேசினார்கள். கடாரம் கொண்டான் கிராமப் பஞ்சாயத்து போர்டு சார்பிலும், இராஜன் கட்டளை கிராமத்தில் உள்ள ஸ்ரீ தியாகேசன் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி சார்பிலும் வரவேற்றார்கள். சென்னை ஆணையர் அவர்கள் இக்கோயில் திருப்பணி செய்திருப்பதைப் பற்றியும், உலகப்பிரசித்தி பெற்ற ஐம்பெருந் திருப்பணிகளில் ஒன்றானது இது என்பது பற்றியும், அவசியம் திருப்பணி செய்ய வேண்டும் என்றும், தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கயிலாய யாத்திரை சமீபத்தில் சென்று வந்து இக்கயிலாயநாதர் கோயில் திருப்பணியைத் துவக்கி வைப்பதும் மிகவும் சிறப்பானது என்றும், தான் இவ்வழி யாகப் போக நேர்ந்தபொழுதெல்லாம் இக்கோயில் செம்மைப்பட வேண்டும் என்று பல காலும் நினைத்து வருந்தியதாகவும், திருப்பணி நல்ல முறையில் சீக்கிரம் பூர்த்தியாகத் திருவருள் புரிய வேண்டும் என்றும் பேசினார்கள். திருப்பணி துவக்கத்துக்குள்ள வெள் ளிக்கரணையை கீழத்தஞ்சை திரு. ஐயராமய்யாவர்கள் ரூ. 311-க்கு வாங்கிக்கொண்டு அத் தொகையை சுவாமிக்கு வெள்ளி கவசத்துக்காகப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டிருக் கிறார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமி களிடமிருந்து விழா வெற்றிகரமாக நடக்க விபரம் கண்டு ஆசிச் செய்தி வந்தது.

ஆணையர் அவர்கள் ஊக்கமும், பெரும் முயற்சியும்தான் விரைவில் இந்தக் கோயில் திருப்பணி ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்தது.

## திருவெம்பாவை - திருப்பாவை மாநாடுகள்

| | |
|---|---|
| 18—12—60 | ஆமருவிப்பெருமாள் கோயில், தேரழுந்தூர். |
| 25—12—60 | கைச்சின்னேசுவரசுவாமி கோயில், கச்சனம். |
| 29—12—60 | நாச்சியார் கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 30—12—60 | கள்ளழகர் கோயில், அழகர்கோயில். |
| ,, | நவநீதேசுவரசுவாமி கோயில், சிக்கில். |
| 30—12—60 } 31—12—60 } | இராமநாதசுவாமி கோயில், இராமேசுவரம், |
| 31—12—60 | அகத்தீசுவரசுவாமி கோயில், பழையங்குடி. |
| ,, | சுவர்ணத்தாபனேசுவரசுவாமி கோயில், சித்தாய்மூர். |
| 1—1—61 | அக்கினீசுவரசுவாமி கோயில், திருக்காட்டுப்பள்ளி. |
| ,, | பஞ்சநதீசுவரசுவாமி கோயில், திருவையாறு. |
| ,, | அனந்தீசுவரசுவாமி கோயில், சிதம்பரம். |
| ,, | கற்பகவிநாயகர் கோயில், பிள்ளையார்பட்டி. |
| ,, | திருக்கண்டீசுவரர் கோயில், கத்தப்பட்டு. |
| 2—1—61 | நாகநாதசுவாமிகோயில், திருக்களாச்சேரி. |
| ,, | மீனாட்சிசுந்தரேசுவரர்கோயில், மதுரை. |
| 5—1—61 | வைத்தியநாதசுவாமி கோயில், வேளூர். |
| ,, | கொப்புடைநாயகி அம்மன் கோயில், காரைக்குடி. |
| 7—1—61 | வடபழனிஆண்டவர் கோயில், சென்னை. |
| ,, | வில்வாரண்யேசுவரசுவாமிகோயில், திருக்கொள்ளம்பூதூர். |
| 7—1—61 } 8—1—61 } | காசிபநாதசுவாமி-கிருஷ்ணசாமி கோயில், அம்பாசமுத்திரம். |
| 8—1—61 | மாரியம்மன்கோயில், புன்னைநல்லூர் (தஞ்சை) |
| ,, | காளகத்தீசுவரசுவாமி கோயில், திண்டுக்கல். |
| ,, | அவிநாசிலிங்கேசுவரர் கோயில், அவிநாசி. |
| ,, | வாஞ்சிநாதசுவாமிகோயில், திருவாஞ்சியம். |
| ,, | மார்க்கசகாயசுவாமி கோயில், மூவலூர். |
| ,, | சங்கரநாராயணசுவாமி கோயில், சங்கரநயினூர் கோயில். |
| ,, | அக்கினீசுவரசுவாமி கோயில், திருப்புகலூர். |
| ,, | அபிராமிஅம்மன் கோயில், திண்டுக்கல். |
| 9—1—61 | தேவபுரீசுவரசுவாமி கோயில், தேவூர். |
| ,, | பசுபதிசுவரசுவாமி வகையறாக் கோயில்கள், பந்தணைநல்லூர் |
| 10—1—61 } 11—1—61 } | விசாலாட்சி விசுவேசுவரர் கோயில், வத்தலக்குண்டு. கல்யாணசுந்தரேசுவரர் கோயில், மேலூர், |
| ,, | வாகீசுவரசுவாமி கோயில், பெருஞ்சேரி. |
| ,, | மயூரநாதசுவாமி கோயில், பெத்தவநல்லூர். |
| ,, | தியாகராஜசுவாமி கோயில், திருவாய்மூர். |
| ,, | சுப்பிரமணியசுவாமி கோயில், எட்டிகுடி. |
| ,, | மாணிக்கவண்ணசுவாமி கோயில், திருவாழ்கொளிபுத்தூர். |
| ,, | வைத்தியநாதசுவாமி கோயில், மடவார்விளாகம். |
| 12—1—61 | ரஜதகிரீசுவரசுவாமி கோயில், திருத்தங்கூர். |
| ,, | பாடலீசுவரர்கோயில், திருப்பாதிரிப்புலியூர். |
| ,, | கிருபாசமுத்திரப்பெருமாள் கோயில், சிறுபுலியூர். |
| ,, | விருத்தகிரீசுவரர்கோயில், விருத்தாசலம். |
| ,, | பூமிநாதசுவாமி கோயில், வீரவநல்லூர். |

# மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.]

அவர்தாம் ஆருந்திருநாளிலே வருந்தி வந்து சேர்ந்து ஸேவித்து நிற்கையில், 'நம்பீ! நாம் உமக்குச் செய்யவேண்டுவது என்! சொல்லிக்காணாய்' என்று ஸேமனமாக, அதற்கு அவர் "ஸ்வாமிந்! தேவரீர் தந்தருளின சரீரத்தைக்கொண்டு போரவும் காரியங் கொண்டேன்; இனிப் போக்குவரத்துக்கு போக்யமாகாதபடி உடல் சரிந்தது" என்று கூற, 'வாராய்! மெய்யே இளைத்தாயாகில் இங்ஙனே இரு' என்று விடைதந்து பெருமாள் நடுவில் திருவாசலுக்கு அவ்வருகே எழுந்தருளுகையில் திருநாட்டுக்கு நடந்தார் நம்பி, என்று.

## 5. மலரடிப்போதுகளென்னெஞ்சத்து.

திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளும் பெருமான் அடியார்கள் அனுபவிக்கைக்காகக் காட்சி தருமிடமான திருவாறன் விளைப்பதியினுடைய பெரும்புகழைப் பாட நம் பாபமொன்றும் நில்லாதே தொலைந்தொழியுமென்கிறது இப்பாட்டில். இதில் "பலரடியார் முன்பருளிய அப்பன்" என்பது உயிரான வாக்கியம். என்னைக் காட்டிலும் மேம்பட்ட மற்றும் பலபல அடியார்கள் இருக்கவும் அவர்களைவிட்டு என்னைக்கொண்டு திருவாய்மொழி பாடுவிக்கும்படி என் பக்கலிலே இவ்வளவு அருள் செய்வதே என்று உகந்து வியந்து பேசின பாசுரமிது.

பலரடியார் முன்பு அருளிய இவ்விடத்து நம்பிள்ளை ஸ்ரீஸூக்திகள் இன்சுவை மிக்கவை; "ஸ்ரீவேதவ்யாஸபகவான், ஸ்ரீவால்மீகி பகவான், ஸ்ரீபராசரபகவான், இன்கவிபாடும் பரமகவிகளென்று சொல்லப்படுகிற முதலாழ்வார்கள் (பொய்கையர் பூதத்தார் பேயார்) இவர்களெல்லாருமுண்டாயிருக்க, என் பக்கலிலே விசேஷகடாக்ஷம் பண்ணுவதே!

[ப்ஹூமாநேக மஹதா ஹநூமந்த மவைக்ஷத] வானரமுதலிகள் பலருமிருக்கச் செய்தே திருவடி பக்கலிலே [அனுமானிடத்தில்] விசேஷகடாக்ஷம் பண்ணினாப் போலே பாயிற்று பலருமுண்டாயிருக்க இவர் தம்மை விஷயீகரித்தபடி."

இங்கே கூரத்தாழ்வானுடைய அற்புதமான இதிகாசமொன்று ஈட்டில் காட்டப்பட்டுள்ளது கேண்மின். அக்காலத்திலே அரசாண்டுவந்த சோழராஜன் விஷ்ணுத்ரோஹியாய் ஆங்காங்குள்ள விஷ்ணு பிம்பங்களையெடுத்து எறிந்துவிட வேணுமென்று முயன்றபோது அவனுக்கு அன்பரானவர்கள் மந்த்ரங்களைக் கொண்டு கும்பாபிஷேகஞ் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்ட விஷ்ணு பிம்பங்களை யழியச் செய்தால் ஊருக்குப் பெருத்த தீங்கு விளையுமென்று சொல்ல, அது கேட்ட சோழன் அந்த பிரதிமைகளில் தெய்வசக்தியை உத்வாஸனம்செய்து அழித்துவிடுவோமென்று நிச்சயித்து ஓர் அந்தணனுக்கு அளவற்ற திரவியங்கொடுத்து 'நீ அத்ருச்யாஞ்ஜனமிட்டுக்கொண்டு (அதாவது ஒருவர் கண்ணிலும் தென்படாதபடி

---

| | |
|---|---|
| 12—1—61 | அட்சயலிங்கசுவாமிகோயில், கீழ்வேளூர். |
| ,, | மந்திரபுரீசுவரசுவாமி கோயில், கோவிலூர். |
| ,, | மேகநாதசுவாமி கோயில், திருமீயச்சூர். |
| 13—1—61 | திருமறைநாதசுவாமி கோயில், திருவாதவூர். |
| ,, | சீனிவாசப்பெருமாள் கோயில், மலையடிவாரம், திண்டுக்கல், |
| ,, | கூடலழகர் கோயில், மதுரை. |
| ,, | உத்தமர்கோயில், பிட்சாண்டார்கோயில். |
| ,, | தேவராஜசுவாமிகோயில், காஞ்சிபுரம். |
| ,, | தில்லையம்மன்கோயில், சிதம்பரம். |

செய்யும் மையையணிந்து கொண்டென்றபடி) தெய்வ சக்தியை உத்வாஸனம்பண்ணு என்று கட்டளையிட, அவ்வந்தணனும் திவ்ய தேசங்களிலே சென்று அப்படியே அத்ருச்யாஞ்ஜனமிட்டுக்கொண்டு உத்வாஸனம் பண்ணி பகவத் பிம்பங்களைக் கடலிலேயெடுத்தெறிவ்தான செய்தியை ஸ்ரீராமாநுஜர் திருச்செவி சாத்தி 'நாம் நெடுநாளாக இத்திருவரங்கம் பெரிய கோயிலை விடாதே நோக்கிக் கொண்டு போருகிறோம்; இவ்விடத்திற்கும் அழிவுவரும்படி ஆஸுரவர்க்கம் மேலீடாநின்றது; இனி நாம் செய்வதென்?' என்று வியாகுலப்பட்டுத் தமது ஆசிரியரான பெரிய நம்பியோடே சிந்தித்திருக்க, அதற்கு அவர் 'நான் திருவரங்கத்தினுடைய எல்லையிலே பிரதக்ஷிணம் செய்ய விரும்புகிறேன்; 'சுற்றி நாம் வலஞ்செய்ய நம் துயர்கெடுங் கடிதே' என்று ஆழ்வார் சொல்லியிருக்கையாலே வலஞ்செய்வதனால் நம் துயர்கெடுமென்று நினைக்கிறேன்; அப்படி நான் பிரதக்ஷிணம் செய்ய உம்முடைய சிஷ்யர்களில் ஒருவரை என் பின்னே அனுப்பவேணும்; அவர் எப்படியிருக்க வேணுமென்றால் 'ஒருவர் பின்னே நாம் போகிறோம்' என்று தன்னெஞ்சில் படாதே நிழல்போலே என்னைப் பின்செல்பவராக இருக்கவேணும்; அப்படிப்பட்டவொரு சிஷ்யரைப் பார்த்தனுப்புவீராக' என்று பெரியநம்பி திருவாய் மலர்ந்தருள, இத்தகைய ஆத்மகுண பரிபூர்ணரான சீடர் கூரத்தாழ்வானொருவனேயென்பது ஸ்ரீராமாநுஜர்க்கு நன்கு தெரிந்திருந்தும் இதனைப் பெரிய நம்பி திருவாக்கினால் வெளியிடுவிக்க வேணுமென்றெண்ணி நம்பியை நோக்கி 'இத்தன்மை வாய்ந்த சிஷ்யர் இவ்விடத்திலேயிருப்பதாகத் தெரியவில்லையே!' என்று சொல்லி நிற்க, அதற்குப் பெரிய நம்பி 'நம் கூரத்தாழ்வானையனுப்பலாகாதோ?' என்று கூற, அருகேயிருந்த கூரத்தாழ்வான் இதைக் கேட்டு நம்பிகள் நம் ஸ்வரூபத்தினுண்மையை இங்ஙனேயறிந்து பல சிஷ்யர்களின் முன்னே இப்படியருளிச் செய்யும்படியான பாக்கியம் பெற்றோமே! என்று பெருமகிழ்ச்சியடைந்து நம்பிகளின் திருவுள்ளப்படியே பிரதக்ஷிணத்திற்குப் பின்சென்றார். "பலரடியார் முன்பருளிய" என்ற விடத்திற்கு இது மிகவும் பொருத்தமான இதிகாசமன்றோ.

மலைநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றான திருவாறன்விளைப்பதியை அனுபவிக்கத் தொடங்கி (திருவாய்மொழி 7-10) இன்பம் பயக்க வெனும் பதிகத்தில் ஐந்து பாசுரங்கள் அநுபவித்தோம். இப்போது ஆறும் பாட்டுத் தொடங்கி அனுபவிப்போமாக.

## 6. ஒன்றுமில்லா கெடும் முற்றவும் தீவினை

திருவாறன்விளைப்பதிப் பெருமான் பக்கலில் ஆர்வமுடையாரை விளித்து உங்களுடைய துயரங்களெல்லாம் தொலையவேண்டில் அத்திருப்பதியை நெஞ்சாலே நினைமின் என்கிறார். நமக்கு நேரும் துயரங்களையும் அத்துயரங்கட்கு மூலகாரணமான தீவினைகளையும் நாமே போக்கிக்கொள்வதாக முயலுமளவில் சிறிதுகிடக்கச் சிறிது போகும்; அங்ஙனல்லாமல் அபாரசக்தி யுக்தனான அப்பெருமான்றன்னையே பற்றிப் போக்கிக்கொள்ளுமளவில் வாசனையோடும் போகக் கடவதாயிற்று. விஷ்ணு தருமமென்னும் புராணத்தில் "மேருமந்தரமாத்ரோபி ராசி: பாபஸ்ய கர்மண:, கேசவம் வைத்ய மாஸாத்ய துர்வ்யாதிரிவி நச்யதி" என்று சொல்லிற்று. எவ்வளவு கனத்த நோயாயிருந்தாலும் நிபுணனான மருத்துவனைப் பெற்றவாறே எப்படி தொலைந்தொழியுமோ, அப்படியே மலைமலையளவான தீவினைகளும் மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணனான கேசவனைப்பற்றினவாறே கணப்பொழுதில் பாறிப்பறந்தொழியுமென்றவாறு.

**அமர்வென்று உருப்பிணி நங்கையணி நெடுந்தோள் புணர்ந்த வரலாறு வருமாறு:—** விதர்ப்பநாட்டில் குண்டினமென்கிற பட்டினத்தில் பீஷ்மகரென்னு மரசனுக்கு ருக்மன் முதலிய ஐந்து பிள்ளைகளும், **ருக்மிணி** யென்கிற ஒரு பெண்ணுமிருந்தனர். அந்த ருக்மிணி [உருப்பிணி] ஸாக்ஷாத் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் அவதாரம். அவளுக்கு யுக்த வயது வந்தவுடனே கண்ணபிரான் அங்குச் சென்று இப்பெண்ணை எனக்குத் தாரை வார்த்துக் கொடுங்களென்று கேட்க, ருக்மனென்னுமுடன்பிறந்தான் அவளைச் சிசுபாலனுக்குக் கொடுக்க நினைத்துக் கண்ணனுக்குக் கொடுக்கலாகாதென்று தகைந்துவிட்டு, சில நாள் கழிந்த பின் அந்த ருக்மிணியின் கலியாணத்திற்காகச் சுயம்வரம் கோடித்துச் சகல தேசத்தரசர்களையும் வரவழைத்திட்டனன். இதனிடையில் ருக்மிணி "அன்றிப் பின்மற்

றொருவற்கென்னைப் பேசலொட்டேன் மாலி ருஞ்சோலை யெம்மாயற்கல்லால்" என்ற துணிவையுடையவளாதலால் தன்னை எவ் வகையினாலாகிலும் மணந்து செல்லும்படி கண்ணபிரானிடத்து ஓர் அந்தணனைத் தூது விட்டிருந்தாள். கண்ணபிரானும் அங்ங னமே பலராமன் முதலியோரைக் கூட்டிக் கொண்டு அப்பட்டினத்திற் கெழுந்தருளிக் கலியாணத்திற்கு முதனாள் அந்த ருக்மிணி யைத்தான் பிரகாசமாக வெடுத்துத் தேரி லேற்றிக்கொண்டு ஊர் நோக்கிப் புறப்படப் புக, சிசுபாலன் முதலிய சில அரசர்கள் கண் ணனை யெதிர்த்துப் போர் செய்ய முயல, பல ராமனும் தானுமாக அவர்களை வலியடக்கி வென்று ஓட்டிவிட, பின்பு ருக்குமன் மிக வும் வெகுண்டு ஆக்கிரகங்கொண்டு கண் ணனை முடிப்பதாக ஓங்கிவர, அவனைக் கண்ணபிரான் ருக்மிணியின் வேண்டு கோளின்படி உயிர்க்கொலை செய்யாமல் அவ னது மீசையையும் குடுமியையும் சிரைத்துப் பங்கப்படுத்தினன். இங்ஙனே விரோதி களைத் தொலைத்துப் பிறகு ருக்மிணிப் பிராட் டியைத் திருமணம் புணர்ந்தனனாயிற்று.

## 7. நீணகரமதுவே மலர்ச்சோலைகள்சூழ்

உலகத்தில் உபாயம் உபேயம் என்று இரண்டுண்டு; முடிவாக அடையப்படும் பொருளுக்கு உபேயமென்று பெயர். அது தான் பலனென்பது. அதைப் பெறுவிக்கும் பொருள் எதுவோ அது உபாயமெனப்படும். அதுதான் ஸாதனமென்பது. இவ்விரண்டும் வெவ்வேறு தனிப்பட்ட பொருள்களாக விருக்கும் உலகில். நாம் ஒரு நகரை நோக்கிச் செல்ல நினைக்கின்றோமென்று வைத்துக் கொள்வோம். நமக்கு அந்த நகர் உபேய மெனப்படும். எந்த ஸாதனத்தைக்கொண்டு அந்த நகரத்தை அடைய நினைக்கின்றோமோ அதுதான் உபாயமென்பது. ஒரு வண்டியைக் கொண்டு ஒரு நகரை அடைவோமானால் நகர் உபேயமாயும் வண்டி உபாயமாயும் தேறிற்று. நகரை அடைந்த பிறகு வண்டியை நாம் விட் டுகிறோம். ஆறு கடந்த பிறகு தெப்பத்தை விட்டிடுகிறோம். போஜனம் உண்ட பிறகு இலையை விட்டிடுகிறோம். இங்ஙனே பல பல வும் காணலாம். இவற்றால் என்ன தேறிற் றென்றால், உபேயம் கைபுகுந்த பின் உபாயம் கைவிடப்படுமென்பது தேறிற்று. எனவே, உபாயமென்பது இழிவான பொருளாயிற்று. இனி எம்பெருமானாகிற உபேயத்தைப் பெறு வதற்கு நாம் எதை உபாயமாகக் கொள்ளு கிறோமென்று பார்க்கவேணும். எதை உபாய மாகக்கொண்டாலும் அது, பிறகு விடத்தக்க பொருளாகத் தேறிவிடுமாதலால் அங்ஙனம் தேறாமைக்காக 'உபாயமும் அவனே உபேய மும் அவனே' என்று கொள்வது நூற்கொள் கையாக முடிந்தது. யானையின் மேலே ஏற நினைப்பவன் யானையின் காலையே பற்றி ஏறுவதுபோல, எம்பெருமானைப் பெற நினைப்பவர்கள் எம்பெருமான் திருவடியையே உபாயமாகப் பற்றுவர்களாயிற்று. உபேய மான வஸ்துதானே உபாயவஸ்துவுமாம் போது அது விடத்தக்கதாக ஆகமாட்டா தன்றோ. இக்கொள்கையை நெஞ்சிற் கொண்டு இப்பாட்டின் பொருளைப்புரிந்து கொள்ளவேணும். இங்கு திருவாறன்விளைப் பதியை உபேயமாகக்கொண்டு அதைப் பெறு தற்கு எம்பெருமானை உபாயமாகக் கொள்ளு கின்றாராழ்வார். உலகர்கள் எம்பெரு மானையோ பரமபதத்தையோ உபேயமாகக் கொண்டு கருமம் ஞானம் பக்தி முதலிய வற்றை உபாயமாகக் கொள்ளுவார்கள். அன் னவர்களுக்கு உபேயம் கைப்பட்டவுடனே உபாயம் கைவிடத் தக்கதாயிருக்கும். ஆழ் வார்க்கோ அங்ஙனமில்லை. இப்போது திரு வாறன்விளைப்பதியே தமக்கு உபேயமாகக் கொள்ளப்பட்டது. அதற்கு அத்தலத் துறையும் பெருமான்தானே உபாயமாகக் கொள்ளப்பட்டனன். அப்பெருமான் தனக் கும் உபேயம் இதுவான பின்பு இவ்வர்த்தத் தில் ஐயமுண்டோ வென்றாராயிற்று. எம் பெருமானை உபேயமாகக் கொண்டு அவனைப் பெறுதற்கு உபாயமாக இத்திருப்பதியைக் கொள்வர் சிலர்; அது தகுதியற்றதென்று ஆழ்வார் தம்முடைய உறுதிப்பாட்டை ஈண்டு வெளியிட்டருளினபடி.

## 8. அன்றி மற்றொன்றிலன் நின் சரணேயென்று.

முதலையின் வாயிலகப்பட்டுத் துடித்த கஜேந்திராழ்வானுடைய துயரைத் தீர்த்தரு ளின பெருமான் நம்போல்வாருடைய இட ரையும் தீர்த்தருளுகைக்காகத் திருவாறன் விளைப்பதியில் எழுந்தருளியிருக்கின்றானாத லால் அங்குச் சென்று கிட்டி நாம் வலஞ் செய்ய விதிவாய்க்குமோ? என்கிறார். கஜேந் திராழ்வானுடைய கதையை ஈண்டெடுத்

துரைத்தற்குச் சில கருத்துக்களுண்டு. அவற்றைச் சிறிது விவரிப்போம். கஜேந்திராழ்வான் பிரபத்தி செய்தானென்று சொல்லப்படுகிறது. அவன் செய்த பிரபத்தி எவ்விதமானதென்று ஆராயுமளவில் பிரபத்தியின் வேடத்தை நாம் உணர்ந்துகொள்ளப் பாங்காகும். தன்னைக் கவ்விக்கொண்ட முதலை நீருக்கிழுக்க, தான் தரைக்கிழுக்க, இப்படியாகப் பலவாண்டுகள் தன் முயற்சியாலே உய்யப்பார்த்த கஜேந்திராழ்வான் "இங்ஙனே நம்மைக் காத்துக்கொள்ள நாம் செய்யும் முயற்சியானது பகவானது இயற்கையின்னருளுக்கு இடையூறாகி நின்றது; நமது முயற்சியை நாம் விட்டுத் தொலைப்போமாகில் அப்போது எம்பெருமானது அருள் தானாகவே பெருகப்புகும்" என்று அறுதியிட்டுத் தன் முயற்சியில் நின்றும் தான் ஓய்ந்து நின்றது. இதுதான் பிரபத்தியெனப்படுவது. இதை சச்சம்பிரதாய முணர்ந்த பெரியார் "பகவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி தான் ப்ரபத்தி" என்றருளிச் செய்வார்கள். திரௌபதியினுடைய பிரபத்தியும் இத்தகைத்தேயாகுமென்றுணர்க.

**யானையின் நெஞ்சிடர் தீர்த்தபிரான்:** யானைக்கு இடராவது உயிர் தொலைகின்றதே யென்கிற இடரன்று. அதுவே யிடராகில் எம்பெருமான் திருநாட்டில் நின்றும் அரைகுலையத் தலை குலைய ஓடி வரவேண்டாவே. சங்கற்பமாத்திரத்தினாலோ, சக்கரத்தாழ்வானையிட்டோ முதலையைத் துணித்து யானையினிடரைத் தீர்த்திருக்கக் கூடுமென்றோ. பின்னை எவ்வகையான இடரென்னில்; வெகு சிரமப்பட்டுப் பறித்த செவ்விப் பூவைத் திருவடிகளிலே பணிமாறப் பெறுதொழிகிறோமோ! என்று உண்டான இடர். இவ்விடரைச் சங்கற்பத்தினாலும் மற்றொன்றாலும் தவிர்க்க முடியாமைபற்றியே பொய்கைக் கரையின்வாய்ப் புள்ளூர்ந்து தோன்றினனென்க.

## 9. தீவினையுள்ளத்தின் சார்வல்லவாகி

திருவாறன்விளையை யநுபவிக்க ப்ராப்தமாகும்போது ஸ்ரீவைகுண்டம் கிடைப்பதானாலும் தம்முடைய திருவுள்ளம் அதனைப் பொருள்படுத்தாதென்று கூறும் முகத்தால் இத்திருப்பதியில் தமக்குள்ள அவாவின் மிகுதியை வெளியிட்டருளுகின்றனராழ்வார். பாவங்களெல்லாம் தொலைந்து பரமபதத்திலேறப்பெறுகையாகிற ஒரு ஸமய விசேஷம் வந்து கிட்டினாலும் என்னெஞ்சானது அதில் ருசியற்று, பரம யோக்யமான திருவாறன்விளையையே கிட்டித் தொழ நேருமோ வென்று பாரிக்கின்றதென்றாராயிற்று.

## 10. சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை தேவபிரானறியும்

எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி "ஆழ்வீர்!, இப்போது நீர் திருவாறன்விளைப் பதியிலே அன்பு முற்றியிருந்தீராகிலும், பல காலும் பரமபதம் பரமபதமென்று வாய் வெருவிக் கிடந்தீராதலால் நான் இதையே நிர்ப்பந்தித்துக் கொடுப்பேனாகில் என் செய்வீர்?" என்று கேட்பதாகக் கொண்டு அதற்கு விடை கூறுகின்றதிப்பாட்டு. எம்பெருமான்! நீ ஸர்வஜ்ஞனன்றோ? என்னினைவை நீதான் அறியாயோ? நீதான் புருஷார்த்தமளிப்பவனென்று பிரஸித்தி பெற்றவனல்லையோ? புருஷன் கோருமதையன்றோ கொடுக்கக் கடவை. எனது சிந்தை திருவாறன்விளை தவிர மற்றொன்றையும் கணிசியாதிருக்கும் படியை நீ அறியாதவனல்லையே. அறிந்து வைத்து எங்ஙனே வேறொன்றைக் கொடுக்க நினைப்பாய்!" என்றாராயிற்று. பரமபதத்தின் பேர் சொல்லுகை தானும் அஸஹ்யமாகி 'மற்றொன்று' என்கிறாரென்பர் ஆன்றோர்.

திருவாறன்விளைப்பதியனுபவம் முற்றிற்று.

---

**வைத்தீசுவரன்கோயில் :** வைத்தியநாதசுவாமிகோயிலில் 29—1—61 முதல் 7--2--61 வரை பிரம்மோற்சவம் நடைபெற்றது.

**பரம்பக்குடி ;** சுந்தரராஜப்பெருமாள் கோயிலில் கும்பாபிஷேகம் 21—1—61ல் நடைபெற்றது.

**காமாட்சிபுரம் :** கோபிநாதசுவாமிகோயிலில் 8—1—61ல் திருவெம்பாவை—திருப்பாவை மாநாடு நடைபெற்றது. மதுரை துணை ஆணையாளர் அவர்கள் கலந்துகொண்டார்கள். சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

# திருவண்ணாமலைக் கல்வெட்டுச் செய்திகள்

[வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

இவ்வூர் அருணாசலேசுவரர் திருக் கோயிலில் பிற்காலச் சோழ மன்னர்களில் முதற் பராந்தக சோழன், கன்னரதேவன், வீர பாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி வர்மன் (இரண்டாம் ஆதித்த கரிகாலன்) முதலாம் இராசேந்திரசோழன், முதலாம் இராசாதிராசன், முதற் குலோத்துங்கன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாங் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன், இவர்கள் காலங்களி லும்; பாண்டிய மன்னர்களில் கோமாறபன்ம ரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலசேகர தேவர் காலத்திலும்; பிற்காலப் பல்லவ மன்னர் களில் சகலபுவனசக்கரவர்த்தி கோப்பெருஞ் சிங்கதேவர் காலத்திலும்; ஹொய்சாலர்களில் (Hoysalas) பிரதாபச் சக்கரவர்த்தி வீரவல் லபதேவர் காலத்திலும் (சகம் 1262 அதா வது கி. பி. 1340); விசயநகரவேந்தர் பரம் பரையினரில் (கம்பண்ண உடையார் மகன்) ஜம்மண்மண்ண உடையார்; அரியண்ண உடையார், (வீரதேவ மகாராயர் மகன்) வீர விசய பூபதிராய உடையார் வீரமல்விகார்ச் சுனராயர், கிருஷ்ணதேவ மகாராயர், வீர சதாசிவ மகாராயர், திருமலைதேவ மகாராயர் இவர்கள் காலங்களிலும், நஞ்சை நாயக்கர் களில் சேவப்பர், சேவப்ப அச்சுதர், இவர்கள் காலங்களிலும் செதுக்கப் பெற்ற கல்வெட் டுக்கள் இருக்கின்றன.

இறைவர் இறைவியார் இவர்களின் திருப் பெயர்கள்:—இக்கல்வெட்டுக்களில் இறைவர், திருவண்ணாமலை மகாதேவர், திருவண்ணாமலை ஆள்வார், திருவண்ணாத்து மகாதேவர், திரு வண்ணாமலை உடையார், திருவண்ணாமலை உடையநாயனார் என்னும் திருப்பெயர்களா லும், இறைவியார் திருக்காமக்கோட்ட முடைய தம்பிராட்டியார், உண்ணாமுலை நாச்சியார், என்னும் திருப்பெயர்களாலும் குறிக்கப் பெற்றுள்ளனர். இவற்றுள் உண்ணாமுலை நாச்சியார் என்னும் பெயர் கோப்பெருஞ்சிங்கதேவரின் 26-ஆம் ஆண் டுக் கல்வெட்டிலும், கிருஷ்ணதேவராயர் காலத்துக் கல்வெட்டிலும் காணப்படு கின்றது.

எழுந்தருளுவிக்கப் பெற்ற திருமேனியும் அளிக்கப்பெற்ற நிவந்தமும் :—இக் கோயிலில் பிச்சதேவரை எழுந்தருளுவித்து அவர்க்கு மூன்று சந்திகளிலும் திருவமுது செய்தருளச் சிறுகாலைக்குத் திருவமுது அரிசி இருநாழியும் உச்சியம்போதைக்குத் திருவமுது அரிசி நானாழியும், இரவைக்குத் திருவமுது அரிசி இருநாழியும் ஆக நாள் ஒன்றினுக்குத் திரு வமுது அரிசி குறுணியும், சிறுகாலைச் சந் திக்கு இரண்டு, உச்சியம்போதைக்கு இரண்டு, இரவுக்கு நான்கு ஆக எட்டு விளக்குகளுக்கும், திருவாராதனை செய்வா னுக்கும், ஆகத் திருவண்ணாமலை என்னும் மரக்காலால் நாள் ஒன்றினுக்கு ஐங்குறுணி இருநாழி மூவுழக்காக, ஓராண்டிற்கு நெல் நூற்று அறுபதின்கலனே முக்குறுணி அறு நாழிக்கு, திருவண்ணாமலை உடையார் தேவ தானம் கீழண்ணாத்து நால்டிக் கிணறு உள் பட கீழைப்பட்டியும், நடுவிற்பட்டியும் மேலைப்பட்டியும், ஆலயேத்தப்பட்டியும் ஆகப்பட்டி நான்கிலும் நிலத்தை வாங்கி அளித்தவன் சோழ மண்டலத்து அருமொழி தேவ வளநாட்டு, ஆர்வலக் கூற்றத்து இராச ராச நல்லூர் உடையானும் முதலாம் இரா சேந்திர சோழதேவரின் பணிமகனும் (A humble servant) ஆவன். இது நிகழ்ந்த காலம் முதலாம் இராசேந்திரசோழதேவரின் 19ஆம் இராச்சிய ஆண்டாகும். எனவே பிச்சதேவரை எழுந்தருளுவிக்கப் பெற்ற காலம் இற்றைக்கு 925 ஆண்டுகளுக்கு முன் னாகும்.

திருக்கோயிலைப் பொன்வேய்ந்து நிவந்தம் அளித்தவன் :—ஆற்களுருடையான் (அற்களு ருடையான் என்றும் படிக்கலாம்) இராச ராசதேவன் பொன் பரப்பினானை வாண கோவரையன், திருவண்ணாமலையுடைய நாய

---

*See the Annual reports on South Indian Epigraphy for the Years
1902 Numbers 469—574
1929 ,, 419—428
South Indian Inscriptions Volume VIII Numbers 57—165.

ணுரை வந்து கும்பிட்டு, திருக்கோயிலைப் பொன்வேய்ந்து, இறைவர்க்குத் திருமடைப் பள்ளிப்புறமாகவும், பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாகவும், பெண்ணை வடகரைச் செங்குன்ற நாட்டுமாத்தூரான இராசராச நல்லூர் வாணகப்பாடி ஆடையூர்நாட்டு, மேயூரான பொன்பரப்பினநல்லூர், சயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்ற கோட்டத்துப் பங்கள நாட்டுத் தெற்குவகை சேய்ஞலூர்; ஆக இம்மூன்று ஊர்களையும் கொடுத்துள்ளான். இது நிகழ்ந்தது மூன்றாங் குலோத்துங்க சோழதேவரின் முப்பத்தைந்தாவது இராச்சிய ஆண்டு அதாவது கி.பி. 1213 ஆகும்.

### நங்கையாழ்வார் ஈச்சரம்

**இருக்குமிடம் :** இக்கோயில் திருக்காமக் கோட்டமுடைய தம்பிராட்டியார் கோயிலுக்குத் தெற்கு, திருமலையார் கூடத்துக்கு வடக்கு, வீரராகவன் திருமதிலுக்குக்கிழக்கு, வாணுதிராயன் திருமதிலில் வடமேலை மூலைக்கு மேற்கு ஆக இந்நான்கு எல்லைக்கு உட்பட்ட இடத்தில் உள்ளது ஆகும்.

**இதைக் கட்டியவர் :**—அவனி ஆளப் பிறந்தார் நீலகங்கரையர், தம் தேவியார் நங்கையாழ்வார் நாயனாரின் பெயரால் கட்டியுள்ளார்.

**இது கட்டப் பெற்ற காலம்:**—சகலபுவனச் சக்கரவர்த்திகள் காடவன் அழகிய சீயன் அவனி ஆளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்க தேவரின் இருபத்தேழாவது இராச்சிய ஆண்டாகும்.

### திருவிழாக்கள்

திருவண்ணுமலை உடையார் கோயிலில் கார்த்திகைத் திருவிழா, பங்குனித் திருவிழா இவைகள் மிகச் சிறப்புடன் நடைபெற்று வந்தன. கார்த்திகைத் திருநாளில் திருவண்ணுமலை உடையார் திருவேட்டை எழுந்தருளியிருந்து பெருந்திருவமுது செய்தருளுவது உண்டு. (பெருந்திருவமுது — வடை, பாயசம் இவைகளுடன் கூடிய உணவு) இதன்பொருட்டு முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் சோழமண்டலத்து அருமொழி தேவ வளநாட்டு ஆர்வலக் கூற்றத்து இராசராசநல்லூருடையான் பாண்டி உதைய திவாகரன் ஐங்கழஞ்சு பொன் கொடுத்திருந்தான்.

கார்த்திகை விழாவில் இக்கோயில் ஆடவல்லார் (நடராசர்) எழுந்தருளுதலும் உண்டு. இத்தேவர் எழுந்தருளுமன்று சாந்தாடலுக்குச் சாத்தி அருளவும், எழுந்தருளும்போது தூவவும், சாந்துக்குத் திருவுண்ணுழிகைச் சபையாரிடம், க்ஷத்திரியசிகாமணி வளநாட்டு, திருநறையூர் நாட்டு, எட்டி, சிறுவேளூர்கிழவன் அங்கன் அரவணையனை வளவதிவாகரமூவேந்தவேளான் பொன் கொடுத்திருந்தான். இச்செய்தி முதலாம் இராசராசதேவரின் 32-ஆவது ஆண்டின் கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது.

மேற்குறித்த விழாக்களில் திருவண்ணுமலை உடையாரைச் சேவிக்கவந்த சிவயோகிகள் உள்ளிட்ட அடியார்களுக்கும் புறத்து அடியார்களுக்கும் உணவு அளிக்கும் பொருட்டு நிவந்தங்கள் அளிக்கப்பெற்றிருந்தன. இவைகளை உணர்த்த வந்த கல்வெட்டுப் பகுதிகளில், "சிவயோகிகள் உள்ளிட்ட அடியாரை ஊட்டுகவென்றும்" "அடியார்க்குச் சட்டிச்சோறு பிரசாதஞ் செய்தருளவும்" "புறத்தடியார்க்குக் கொற்று அட்டுகவென்றும்" என்னும் தொடர்கள் காணப்படுகின்றன. அடியார்களுக்கு அக்காலத்தில் இலைகளுக்குப் பதில் புதிய சட்டிகளில் சோறு இடும் வழக்கம் உண்டென்று தெரிகின்றது (கொற்று—உணவு; எட்டி—வணிகர்களுக்குக் கொடுக்கப்பெற்ற பட்டம்).

**விசேட பூசைகள் :**— திருவண்ணுமலை உடையார்க்கு உத்தரமயன சங்கிரமத்திலும், தக்ஷிண மயனசங்கிரமத்திலும் சகஸ்ர கலம் ஆடி அருளுதலும், பெருந்திருவமுது செய்தருளுதலும் உண்டு. இவைகளின் பொருட்டு சோழமண்டலத்து, உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டு அரிந்தவன் நல்லூர் உடையார், அதிகாரிகள் நீலன் வெண்காடரான இராசராச மூவேந்தவேளார், நிலம் அளித்திருந்தனர்.

**திருவெடுத்துக் கட்டியைப் பழுதுபார்த்தவன் :**—இத் திருவண்ணுமலை உடையார் கோயிலிலுள்ள திருவெடுத்துக் கட்டியைப் பழுதுபார்த்தவன் மணஞ்சேரிக் குடைச்சியார் தேவான்ருள் மகன் திருப்படிச் செயபாலன் தொண்டன் ஆவன். இது நிகழ்ந்தது திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவரின் 18-ஆம் இராச்சிய ஆண்டாகும். இதன் பொருட்டு இவன் செலவழித்த காசு ஆயிரம்.

**திருவோலக்கக்கூடம்** :—இது திருவண்ணாமலை உடையார் கோயிலினுள் இருந்தது. இச்செய்தி "பெண்ணை வடகரைத் திருவண்ணாமலை உடையார் கோயிலினுள்ளால் ஓலக்கக்கூடத்தின் முன்பிருந்து கணக்குக்கேட்டு" என்னும் முதலாம் இராசேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது.

**ஸ்நபன மண்டபம்** :—இறைவர் திருமஞ்சனம் ஆடி அருளும் மண்டபம் ஸ்நபனமண்டபம் ஆகும். இச்செய்தியை "உடையார் திருமுன்பு ஸ்நபன மண்டபத்தில் வைத்த குத்துவிளக்கு இரண்டுக்கும்," என்னும் சகலபுவன சக்கரவர்த்தி கோப்பெருஞ் சிங்க தேவரின் இரண்டாமாண்டில் செதுக்கப்பட்ட கல்வெட்டுப் பகுதியால் அறியலாம்.

**வல்லாளன் கோபுரம்** :—இக் கோபுரத்துத் திருவாசலின் பெயர் வீரராகவன் திருவாசல் என்பதாகும். மகாமண்டல புருஷர் வீரசிங்க தேவர் மகன் பெற்றபெருமாளுக்குக் கல்வெட்டிக் கொடுத்தபடி, "வீரவல்லாளன் திருவாசல், திருமெய்காவல், பெற்றபெருமாளுக்கு நாள் ஒன்றுக்குத் தூணிப்பதக்கும், கோயில் பெறும்சோறு நானாழியும், ஆண்டு ஒன்றுக்குப் புடைவை முதலுக்குக்காசு அறுநூறும், இம்முதல் சந்திராதித்த வரையும் பெற்றுப் போதக்கடவராகவும்" என்னும் ஸ்ரீ அரியண்ண உடையார் காலத்துக் கல்வெட்டுப் பகுதியால், இச்செய்தியை அறியலாம்.

## ஸ்ரீ இராசேந்திரசோழன் சாலை

இது திருவண்ணாமலை உடையாரின் திருமுற்றத்தில் இருந்தது. இச் சாலையில் சோறு இடுவதன்பொருட்டு மதுராந்தக வளநாட்டு ஆடையூர் நாட்டு ஆடையூராரும், இவ்வளநாட்டு ஆடையூர் நாட்டுச் சோறியான இராசேந்திர சோழ நல்லூர் ஊராரும் இந்நாட்டு மைசாற்றூராரும், இந்நாட்டு மாத்தூரான எறிபத்தகண்ட நல்லூராரும், இந்நாட்டுப் பெண்ணைவடகரை குளக்குடி ஊராரும் நிலம் விட்டிருந்தனர். இச்சாலை, முதலாம் இராசேந்திரன் பெயரால் அவன் காலத்தே அமைக்கப்பெற்றதாகும்.

## திருமடங்கள்

**சத்தியவாசக தன்மவாணியர் மடம்** :—இப்பெயருள்ள மடம் இவ்வூரில், திருவண்ணாமலை உடையார், திருவீதியில் இருந்தது. இதில் மாகேஸ்வரர்களுக்கு மூன்று திருநாட்களில் சோறிடும் பொருட்டு, சத்தியவாசகரான தன்மவாணியர் ஆயிரங் குழிநிலத்தை மடப்புறமாக அளித்திருந்தனர். இச்செய்தி திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கசோழ தேவரின் இருபதாம் இராச்சிய ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

**வடக்கில் மடம்** ;—இவ்வூரில் இப்பெயருள்ள மடம் ஒன்று இருந்தது. இச்செய்தி "திருவண்ணாமலையில் வடக்கில் மடத்தில் இருக்கும் இராவளர் கயிலாய தேவர்" என்னும் சிதம்பரம் கல்வெட்டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது.

## விளக்கு வகைகள்

இக்கோயிலில் நெய் இட்டு ஏற்றிவைக்கப்பெற்று வந்த விளக்குகள் நொந்தா விளக்குகள், சந்திவிளக்குகள், அணுக்க விளக்குகள், குத்துவிளக்குகள் என்னும் பெயர்களைப் பெற்றிருந்தன. இவைகளுள் நொந்தா விளக்கு என்பதைத் தூண்டா விளக்கு என்றும் கூறுவர். இத்தொடர் நந்தாவிளக்கு என்றிருக்கவேண்டும். "நந்தா விளக்கனைய நாயகமே" என்பது கம்பராமாயணப் பாடல் பகுதி. இத்தகைய வீளக்கை ஆங்கிலத்தில் (Perpetual lamp) என்பர். (Perpetual—never ceasing; இடைவிடாத) சந்தி விளக்கு என்பது, சந்திகாலங்களில் ஏற்றி வைக்கப்பெறும் விளக்காகும். "சிறுகாலை சந்திவிளக்கு இரண்டு" என்னும் இக் கோயில் கல்வெட்டுப் பகுதியே இதனை உணர்த்தும். அணுக்க விளக்கு என்பது இறைவர் எழுந்தருளியிருக்கும் இடத்தைச் சுற்றி ஏற்றி வைக்கப்பெறும் விளக்காகும் இச் செய்தியை "ஸ்ரீ விமானத்தைச் சூழ இராவை சந்திக்கு அணுக்க விளக்காக எரிய வைத்த விளக்கு ஒன்றுக்கு எண்ணெய் இருசெவிடு அரையாகச்சந்தி விளக்குப் பதினலுக்கு விட்ட சாவாமூவாப் பேராடு முந்நூற்று முப்பத்தாறு" என்னும் கல்வெட்டுப் பகுதி உணர்த்தும். குத்துவிளக்கு என்பது வெளிப்படை. "திருவண்ணாமலை உடைய நாயனார்க்கும் திருக்காமக் கோட்டமுடைய தம்பிராட்டியார் உண்ணாமுலை நாச்சியார்க்கும் திருவிளக்குக்கு இட்ட ஐந்துநிலை குத்துவிளக்கு ஒன்றும்" என்னும் கல்வெட்டுப் பகுதியால் இவ்விளக்குக்குச் சில நிலைகள்

உண்டெனத் தோன்றுகின்றன. இக்கோயி வில் விளக்கு எரிப்பதற்கு நெய்யின் பொருட்டு ஆடுகளும், பசுக்களுமே விடப் பட்டு வந்தன. விடப்பட்ட ஆடுகள் சாவா மூவாப் பேராடுகள் எனக் குறிக்கப்பெற் றுள்ளன. இனம் பெருகிக்கொண்டிருக்கும் ஆடுகள் என்பதுதான் அத்தொடர்க்குப் பொருளாகும். பசுக்களை விட்டவர்கள் அவை களுக்கு தக்கவாறு ரிஷபம் (அ) பொலி எருதுகளையும் விட்டு வந்தனர். நந்தாவிளக் கின் பொருட்டு நாடோறும் உழக்குநெய் கொடுப்பதற்கு ஆடாயின் தொண்ணூற்று றும் பசுவாயின் முப்பத்திரண்டும், சந்தி விளக்கு ஒன்றின் பொருட்டு, நாடோறும் இருசெவிடு அரை நெய் எரிப்பதற்கு இரு பத்து நான்கு ஆடுகளும் விடப்பட்டுவந்த செய்திகள் இக்கோயில் கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றன.

## அணிகல வகைகள்

ஏகாவல்லிவடம், பதக்க மாலை என்பன. பதக்கமாலை-இவ்வணிகலன் இக்காலத்திலும் உண்டு. ஆனல் இம்மாலையில் உள்ள சில பகுதிகளின் பெயர்கள் கீழ்க்கண்ட கல்வெட் டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றன. அப் பகுதி,

"அழகியசீயன் அவனி ஆளப்பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன் உடையார் திருவண்ணு மலை உடைய நாயனுர் சாத்தி அருள இட்ட பதக்கமாலை ஒன்றினல் நாயகக் கண்டம் ஒன்று, அருகுகண்டம் ஆறு, கடைத், தொழில் இரண்டு, படுகண் ஒன்று, கொக்கு வாய் ஒன்று, இவையிற்றில் ஆவேசித்துக் கட்டின கோமளம் இருபத்தெட்டு, வயிரம் 1106, பருமுத்து 790, சிறுமுத்து 360, திரள் பவழம் 291, மாங்தோட்டுப் பொத்தி 30, சிலந்திக விதரம் 99, தடவல்பளிங்கு 1-ம் ஆக இவையும் பொன்னும் அரக்கும் நூலும் உள்பட பண்டாரக் கல்லால் எடை 302" என்பதாகும்.

"திருவண்ணுமலை உடைய நாயனுர்க் குச் சாத்தி அருளக்கூடல் அரச நாராயணன் ஆளப் பிறந்தானுன வீரசேகரக் காடவ ராயன் இட்ட ஏகாவல்லிவடம் ஒன்றினல் நெல்லிக்காய் முத்து நூறும், கடைத்தொழில் இரண்டும் இவைகோத்த நூலும் உள்பட அலகு நிலைப்படி எடை 130 கழஞ்சு."

மேற்குறித்த கல்வெட்டுப் பகுதிகளால் இக்கோயில் அணிகலன்கள் பண்டாரக் கல் லால் நிறுக்கப்பட்டுவந்த செய்தியும், அணி கலன்களை எவரும் மாற்றிவிடாமல் இருத் தற் பொருட்டு எடையும் குறிக்கப்பட்ட செய்தியும் கண்டு மகிழ்தற்கு உரியனவாகும்.

# இறைபணியாளர்கள் மாற்றம்

**திரு. R சிவதேவ் :** திருவிடக்கழி—சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கும், தரங்கம் பாடி மாசில நாதர் கோயிலுக்கும் மாற்றப்பட்டிருக்கிருர்.

**திரு. K. மாணிக்கம் :** முசிறிவட்டம் தொட்டியம்—மதுரகாளியம்மன், வரதராஜப் பெருமாள் கோயில்களுக்கு மாற்றப்பட்டிருக்கிருர்.

**திரு. S. விவேகானந்தம் :** கும்பகோணம்— திருக்கோட்டிக்காவல் திருக்கோட்டிசு வரர் கோயிலுக்கு மாற்றப்பட்டிருக்கிருர்:

**திரு. I. S. சுவாமிநாதன் :** தீபாம்பாள்புரம்—வால்மீகநாதசுவாமி கோயிலுக்கு மாற் றப்பட்டிருக்கிருர்.

**திரு. K. சஞ்சீவி :** செம்பனுர்கோயில்—சுவர்ணபுரீசுவரர் கோயிலுக்கும், விளநகர் வரதராஜப்பெருமாள் கோயிலுக்கும் மாற்றப்பட்டிருக்கிருர்.

**திரு. S. வேணுகோபால்:** அந்தணப்பேட்டை—அண்ணுமலைநாதசாமிகோயிலுக்கும் தெற்கு பொய்யூர்—சுவர்ணபுரீசுவரர் கோயிலுக்கும் மாற்றப்பட்டிருக்கிருர்.

**திரு. N முருகன் :** சிவகிரி, R. K. நாச்சியார் அறக்கட்டளைக்ளுக்கு மாற்றப்பட் டிருக்கிருர்.

**திரு. E. சுவாமி :** தூத்துக்குடி, சங்கரராமேசுவரர் கோயிலுக்கு மாற்றப்பட்டிருக் கிருர்.

# பருவத்தில் வந்து பயனுற்ற பண்பன்

[திரு. ரா, சண்முகசுந்தரம் செட்டியார், திருவதிகை]

இவ்வுலக வாழ்க்கைக்குச் சைவத் திருமுறைகள் உறுதுணையாக அமைத்துக் கொள்ளுதல் பொதுவாக யாவர்க்குங் கடமையாயினும் அது சைவருக்குச் சிறப்புக் கடமையாகும். அத்திருமுறைகள் சித்தாந்தத்தின் நுண்பொருள்களைக் கொண்டு மிளிர்வன. இறைவனுண்மை, அவனது அத்துவிதநிலை, நல்லியல்புகள், அவன் எளிவரும் அருணிலை, உயிரவைநிலை, உலகப்பற்றுக்கள் அறுநிலை, உயிர்கள் முத்திபெறுநிலை, பெற்றபின் ஒழுகும்நிலை, இன்னவாகிய பிறவும் விளக்கப்படுகின்றன. இத் திருமுறைப் பாடல்கள் யாவும் இறைவன்மீது புகழ்மாலைகளாக அமைந்ததாயினும் ஆங்காங்கு விளங்கும் அருந்தொடர்கள் இறைநிலையை நன்கு புலப்படுத்துவன. ஈண்டுக் குறித்த தலைப்பு ஆளுடையபிள்ளையாராகிய திருஞானசம்பந்தரது ஓர் அருண்மொழியாகும். அது,

பருவத் தில்வந்து பயனுற்ற பண்பன்
அயனைப் படைத்த பரமன்
அரவத் தொடங்க மவைகட்டி யெங்கும்
அரவிக்க நின்ற அரனூர்
உருவத் தின்மிக்க வொளிர்சங் கொடிப்பி
யவையோத மோத வெருவித்
தெருவத் தில்வந்து செழுமுத் தலைக்கொள்
திருமுல்லை வாயி லிதுவே

(தென் திருமுல்லைவாயில்-பண்-பியந்தைக் காந்தாரம்-2)

எனவருந் திருப்பாட்டின் அமைந்த முதற்றொடர். இத் திருப்பாசுரம், "வடிவத்தில் பெரியதாயும், ஒளிவிடுவதாயுமுள்ள சங்குகளுடன் இப்பிகளும் கடல் அலைகளால் மோதப்பட்டு அஞ்சித் தெருவுகளில் புகுந்து தூயவெண்ணிறம் வாய்ந்த முத்துக்களை அலைகள்போல உருண்டு செல்லுமாறு ஈன்ற பெருமையுடைய திருமுல்லைவாயில் என்னும் ஊர் உயிர்கள் பக்குவம் அடைந்த காலத்தே வெளிப்பட்டு அவைகட்குரிய பயன்களைக் கூட்டுவிக்கும் நற்குணமுடையவனும், பிரமனைப் படைத்த பரமபதியாவனும், பாம்புகளுடன் எலும்பணிகளையும் தன்மேனி எங்கும் அணிந்து அவை ஒலி செய்துகொண்டிருக்கத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருப்பவனுமாகிய சிவபெருமானது பதியாகும்" எனும் திரண்டபொருளுடையது. பருவத்தில் வந்து பயனுற்ற பண்பன் எனும் அருந்தொடர் இறைவனது அருள்நிலையை விளக்க எழுந்தது.

இனி, பருவம் என்றது உயிர்களின் பக்குவநிலையைக் குறித்தது. வந்து என்பது இறைவன் உருவங்கொண்டு வெளிப்படும் நிலையை அறிவித்தது. பயனுவது இறைவனால் உயிர்கட்குக் கூட்டப்பெறும் சிவப்பேறு. இறுதியான பண்பன் என்னும்மொழி இறைவனது அருளுதவும் குணத்தை விளக்கியது. உயிர்கள் சிவப்பேறுபெறுதற்குரிய பக்குவநிலை அடைந்தவுடன் உருவமில்லாதவனுகிய இறைவன் அருட்டிருவடிவங்கொண்டு வெளிப்பட்டு அவைகட்கு உரிய முறையால் பேரின்ப வீட்டினை யருளுகின்ற நற்குணமுடையான் என்று இறைவனது அருளியல்பு இத்தொடரால் அறியப்படுவதாம்.

உயிர்கள் மருளினுல் பிறவியைப் பெறுகின்றன. மருளினும் மாணுப் பிறப்பென்பர் பொய்யாமொழியார். பிறவியாவது அவரவர் வினைப்பயன்களை நுகர்தற்கு உயிர்கள் ஓர் உடல்கொண்டு உலகின்கண் ஒரு தாய் வயிற்றினின்றும் வெளிப்படுதலாகும். அங்ஙனம் பிறந்த உயிர்களுள் பெரும்பாலன உலகில் போகமயக்கத்தால் தாம் முன்னர் அடைந்த மயக்கத்தைப் போக்குதலின்றி அதனையே பெருக்கிக் கொள்வன. அவற்றுள் சிலவே 'வந்தவாறெங்ஙனே போமாறு ஏதோ' என்று ஆராயத்தொடங்கி முதல்வனுகிய இறைவனை அறியமுயல்வன. இம்முயற்சி அறிவாலும் செயலாலும் நிகழ்வது. அறி

வால் தமது சிற்றறிவுடைமையையும், அதனுல் விளைவதாகிய இருவினையுண்மையினையும், அவ்வினைகளுக்கேற்ப இன்ப துன்பங்கள் விளையுந் திறத்தையும், அவ்வின்பதுன்பங்கள் தாமே சார்தலின்றி ஒரு பேராற்றலுள்ள பொருளின் அருளால் சேர்க்கப்படுமாற்றினையும், அப்பொருள் ஒப்புயர்வற்ற ஈசனுவதும் தெளிவன. அங்ஙனம் தெளிந்ததும் அவ்வுயிர்கள் ஈசனுவான் சிவபரம்பொருளே என்றுணரும். அவனைப் பற்றுதற்கு உலகப் பற்றுக்களை நீக்க முயல்வன. அம்முயற்சியின் பயனுய் விருப்பு வெறுப்பின்றிய நிலை இயற்கையாய் அமையுமாறு ஒழுக்கமுடையனவாகும். இவ்வாருெழுகும் முதற் பக்குவ நிலையை இருவினை யொப்பு என்று சித்தாந்த சாத்திரங்கள் பேசுவன. இப்பக்குவநிலையை உயிர்கள் எய்தியதும் அவைகளிடத்து பிரிவற நின்ற மலத்தை அறுத்தற்குரிய துணைக் காரணங்கள் யாவும் சேர்வனவாம். அவ்வாறு மலபரிபாகம் அடைகின்றபோழ்து இறைவனது அருட்சத்தி அவைகளினிடத்தே பதிந்து விளங்கும். இதனைச் சத்திநிபாதம் என்ப. இங்ஙனமாக இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதமாகிய பக்குவநிலைகள் உயிர்கள் அடைந்ததும் இறைவனது கடமை எழுச்சியுறும்.

இனி, அக்கடமையைச் செய்வான் இறைவன் தன் உண்மை நிலைநீங்கி வெளிப்படல் இன்றியமையாததாகின்றது. அவனது உண்மைநிலை உயிர்களது அறிவுக்கறிவாகி அவ்வறிவுக்கும் எட்டாநிலைமைத்தது. அவ்வாறு உயிர்கட்கு அறியவும் காணவும் இயலாத உண்மை நிலையினின்றும் நீங்கி எவ்வெவ்வுயிர்களுக்கு எவ்வெவ்வடிவம் வேண்டுமோ அவ்வவ் வுருவங்களைக்கொண்டு அவரவர்முன் வெளிப்படுவது இறைவனது திருவிளையாடலாகும். பொதுவாகச் சித்தாந்த சாத்திரங்கள் மூவகை உயிர்களைக் குறிப்பன. அவை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப்பெயர் பெறுபவை. விஞ்ஞானகலர் ஆணவமென்னும் ஒரு மலமுடையார். அவர்கட்கு இறைவன் உள்நின்று உணர்த்தி இன்பம் உதவுவன். ஆணவம், கன்மம் என்னும் இருமலத்தார் பிரளயாகலராவர். அவர்கட்குத் திருக்கண்மூன்றுங், தாழ்சடையும், மழுவும் மானுமுடன் விடைமேல் உமையோடு காட்சியளித்து அருள்செய்வன். ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலமுடையர் சகலர். அவர்கட்கு மெய்ஞ்ஞானிகள்பால் பொருந்தி நின்று அவர்களால் மெய்ஞ்ஞானத்தை உணர்த்துவன். இங்ஙனம் வருகின்ற கோலம்யாவும் குருபரனுக வெளிப்படுகின்ற கோலமேயாகும். இவ்வாறின்றி இறைவன் உயிர்களை ஆட்கொள்ள மேற்கொள்ளும் வேடமும் பலதிறத்தனவாம். ஆளுடைய பிள்ளையாருக்கு உமையம்மையாரோடு விடையின்மேல் இவர்ந்து பிறைசூடியும், பொடிபூசியும் இறைவன் காட்சி தந்து ஞானப்பாலூட்டி அவர்தம் உள்ளங்கவர் கள்வனுயினுன். திருநாவுக்கரசருக்குச் சூலை நோய்தந்து அவரைத் திருவதிகை வீரட்டானத்தே வரச்செய்து, திலகவதியாரால் திருநீறு அளித்து அணியச்செய்து, தமது அருட்குறியாகிய சிவலிங்கத்தைக் காணும்படிச்செய்து மெய்ஞ்ஞானத் தெளிவுபெறச் செய்தனன். ஆரூரருக்கு ஆண்டானடிமைத் திறத்தை முதிய அந்தணராக வெளிப்பட்டு வழக்கிட்டுத் தெளியவைத்தனன். மணிவாசகருக்கு ஞானுசிரியராக வெளிப்பட்டு விளங்கிச் சிவஞானத்தை ஐயமற அருளித் தன்னைப்பற்றியே நிற்குமாறு உணர்த்தினுன். சிறுத்தொண்டருக்கு உத்திராபதியாய்ப்போந்து அவரது பற்றற்ற அன்பினிலையை உலகறிய வைத்தனன். இங்ஙனமாக இறைவன் கொண்டகோலங்களை விரிப்பின் பெருகும். அவையாவும் அடியவராயினுர்க்கு முத்திப்பயனைக் கூட்டுவதற்கே மேற்கொள்ளப்பட்டன.

இனிப் பயனுவது உயிர்கள்முன் இறைவன் உருவங்கொண்டு வெளிப்பட்டு அவற்றின் மும்மலங்களைத் துடைத்துப் பேரின்பத்தைக் கூட்டுவதேயாகும். பேரின்பம் எனும் முத்தியே இறுதிப் பயனுய் விளங்குவது. உயிர்களுக்குப் பெத்தநிலையில் வினைப்பயன்களை அவைகள் அறியாமே இறைவன் சேர்ப்பிப்பன். தம் சிறுமையுணர்ந்து இறைநிலை அடைய தவம் மேற்கொண்டு சோபான முறைப்படிச் செல்வோருக்கும் இறைவன் அவரவர் தகுதிக்கேற்ப பயனளிப்பன். சரியையாளர்க்குச் சாலோகப் பதவியும், கிரியையாளருக்குச் சாமீபமும், யோகிகளுக்குச் சாரூபமும், ஞானிகளுக்குச் சாயுச்சிய முத்தியுமாகப் பயன்கள் விரித்துரைக்கப்படுகின்றன. மற்றும், நால்வகைச் சத்திநிபாத

மாகிய மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதர முடையார்க்கும் பயன்கள் வேறுபடுவன. மந்ததரத்தாற் சாதகநிலையும், மந்தத்தாற் சீவன்முத்திநிலையும், தீவிரத்தால் அபரமுத்தி நிலையும், தீவிரதரத்தாற் பரமுத்திநிலையும் பயக்கும் என்றறிவிப்பது சிவஞானபோத மாப்பேருரை. இத்துணை வகைப்படும் பத முத்தி, பரமுத்திப் பயன்களை உயிர்களுக்கு அவர்தம் பக்குவநிலை யுணர்ந்தே இறைவன் கூட்டுவன் என்பது தெளிவு.

இனி, இப்பயன்களை இறைவன் அறக் கருணையாலும் மறக்கருணையாலும். உயிர் களுக்குக் கூட்டுவன். மறச்செயலும் செய் வானுயின் இறைவனது குணம் எத்தகையது என்றறிய விருப்பம் எழுவதாகும். அவனது குணம் அறிவிக்கவே; பண்பன் என்று குறிக் கப்பட்டது. பண்பன் என்பது உயிர்களின் பக்குவநிலை கண்டு அவர்தமக்கு ஏற்றவாறு அருளுந்திறமுடையான் என்றுரைத்தற் றகும். ஆயினும் இது இறைவன் அல்லவிலும் அருளே புரிபவன் என்றுணர்த்துவதாயிற்று. இம்முறைமையை யுணரச் சுந்தரர் வரலாற் றினைச் சிறிது கருதுவாம்.

சுந்தரர்பெருமான் 'திருவொற்றியூரை விட்டு அகலேன்' என்று சங்கிலியாருக்கு மகிழின்கீழ் உறுதிமொழி தந்தார். சங்கிலி யாரை மணந்தார். பின்னர்த் திருவாரூர்த் தியாகேசர் வசந்தவிழாவை அவர்மனம் நினை வுற்றது. அவ்விழாவின் காட்சி அவரை ஈர்த் தது. திருவாரூர் செல்லத் துணிவுகொண் டார்; புறப்பட்டார். ஒற்றியூர் எல்லையில் அவர்கண் படலம் மறைந்தது; பதைத்தார்; அழுதார்; உருகினுர். ஒற்றியூர்ப்பெருமானை நினைந்து தன் பிழையைப் பொறுக்குமாறு கசிந்து உருக்கமாகப் பாடினுர். ஆயினும் திருவொற்றியூருக்குத் திரும்பாது திருவா ரூருக்கே வழிகொண்டு ஏகினுர். கண் தரு மாறுவேண்டிச் செல்லுவார். கண்பெற்று ரில்லை. ஊன்றுகோல் ஒன்ருகிலும் தந்தருளு மாறு விண்ணப்பித்தார். அதுவும் பெற்று ரில்லை. என்செய்வார்! தம்பிரான் தோழ ராதலால் இறைவனைக் கோபித்து நிந்தை பாடலாம். அங்ஙனம் செய்தாரில்லை. வழி யிலே வடதிருமுல்லை வாயிலில் பாசுபதா பரஞ்சுடரை வழிபட நேர்ந்தது. ஆங்கு ஒரு பதிகம் அருளினுர். தனது துன்பம்மீதூர்ந்த வகையால் அதனை நீக்கி யருளுமாறு வேண்டு பவர் இறைநிலையின் உண்மையை உணர்த்து கின்ருர்.

விண்பணிந் தேத்தும் வேதியர் மாதர்
வெருவிட வேழமன் றுரித்தாய்
சண்பகச் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் தேவர்தம் மரசே
தண்பொழி லொற்றி மாநக ருடையாய்
சங்கிலிக்கா வென்கண் கொண்ட
பண்ப! நின்னடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே

(வடதிருமுல்லைவாயில் -பண்-தக்கேசி-௩)

என்பது சுந்தரர் வடதிருமுல்லைவாயிலில் பாடிய திருப்பாடல்களு ளொன்று. ஈண்டுத் தன் துன்பம் சங்கிலியின் பொருட்டு வந் துற்றதென்று உணருகின்ருர். அத் துன் பத்தை ஆக்குவித்த கொடுமையாளனே என்று இறைவனைக் குறியாது "சங்கிலிக்கா என் கண்கொண்ட பண்ப" என்று உணர்த்து கின்ருர். இறைநிலை என்றும் உண்மை நிலையினின்றும் பிறழாமையாயது. உறுதி சொல்லி அவ்வுறுதியினின்றும் பிறழ்ந்தார் யாவராயினும் அவர் தமக்குத் துன்பம் விளை வித்து நன்மையயத்தல் இறை நியதியாகும். அத்தகைய நற்குணமுடைமையைப் பண்பன் என்னும் அருஞ்சொல் குறிப்பதாயிற்று. இறைவன் அருளினும் வெகுளினும் கருணையேயாம் என்பது சிவஞானிகளின் கருத்தாகும். எனவே கருணை இருவகையாய் அறக்கருணை, மறக்கருணை என்று பெயர் பெறும். ஒரு தாய் தான்பெற்ற மக்கட்கு உணவளிப்பதில் அவரவர் வயதிற்கேற்ப உணவு தருதல் அவளுடைய கருணையாகும், அம்மக்கள் யாவருக்கும் ஒருவகையான உண வளிப்பது அவர் பக்குவம் அறியாப்பேதை என்றே அத்தாயைச் சொல்லவேண்டிவரும். அறிவில்லாப் பேதையாயினும் ஒரு தாயும் அங்ஙனம் நிகழ்த்துவதில்லை. தாயினும் பரிந்து ஒழுகுபவன் இறைவன். உயிர்கள் பக்குவநிலையை யறிந்தே அருளுவது இறை யியல்பு. மருத்துவனும் பிணியுடையோருக்கு இனிய மருந்து கொடுத்து நோயைப் போக்கு தல் அறக்கருணையை ஒக்கும். சிற்சிலர் நோயைப் படைகொண்டு கீறியறுத்து மருந் திட்டுப் போக்குதல் மறக்கருணையை ஒக்கும். இவ்விருவித கருணையினுல் உயிர்கட்கு

இறைவனால் அளிக்கப்பெறுவது அழியா இன்பம். இக்கருத்து,

இறைவன் இங்கேற்ப தென்னை
இதம் அகிதங்கள் என்னின்
நிறைபரன் உயிர்க்கு வைத்த
நேசத்தின் நிலைமை யாகும்
அறமலி இதஞ் செய்வோருக்கு
அநுக்கிர கத்தைச் செய்வன்
மறமலி அகிதஞ் செய்யின்
நிக்கிர கத்தை வைப்பன்
—சூத்திரம்-2-14.

நிக்கிர கங்கள் தானும்
நேசத்தால் ஈசன் செய்வது
அக்கிர மத்தாற் குற்றம்
அடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
இக்கிர மத்தி னாலே
ஈண்டறம் இயற்றிடு என்பன்
எக்கிர மத்தி னாலும்
இறை செயல் அருளே—15
என்றும்,

தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தஞ்சொல் ஆற்றின்
வந்திடா விடின்உ றுக்கி
வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம்
பார்த்திடில் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ
ஈசனார் முனிவும்—16
என்றும்,

மண்ணுளே சிலவி யாதி
மருத்துவன் அருத்தி யோடும்
திண்ணமாய் அறுத்துக் கீறித்
தீர்த்திடுஞ் சிலநோ யெல்லாம்
கண்ணிய கட்டி பாலும்
கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்
அண்ணலும் இன்பத் துன்பம்
அருத்தியே வினைஅ றுப்பன்—35

எனவரும் சிவஞானசித்தித் திருவிருத்தங்களுள் நன்கு விளக்கப்படுகின்றது.

இங்ஙனமாகும் பரனது அருள்நிலையைக் குமரகுருபர அடிகளும்,

—நால்வகையாம்
21. சத்திநி பாதந்தருதற் கிருவினையும்
ஒத்துவருங் காலமுளவாகிப்—பெத்த
22. மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி—உலவா
23. தறிவுக் கறிவாகி யவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்
24. கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு—
திருநோக்கால்
25. ஊழ்வினையைப் போக்கி யுடலறுபத்
தெட்டுநிலம்
ஏழுமத்து வாக்க ளிருமூன்றும்—பாழாக
26. ஆணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்-பூணும்
27. அடிஞானத் தாற்பொருளு மான்மாவுங்
காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது
28. தேக்குபர மானந்தத் தெள்ளமுத
மாகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்
29. வரவு நினைப்பு மறப்பும் பகலும்
இரவுங் கடந்துலவா வின்பம்—மருவித்துக்
30. கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந்
தாழ்சடையும்
வன்மழுவு மானுமுடன் மால்விடைமேல்
மின்னிடத்துப்
31. பூத்த பவளப் பொருப்பொன்று
வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த
32. கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய்
துண்ணின்று
ஒருமலத்தார்க் கின்ப முதவிப்—பெருகியெழு
33. மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருடனே
யிருத்தி
ஆன்றபர முத்தி யடைவித்து

எனவரும் கந்தர் கலிவெண்பாவில் விளக்கிய வாறும் உணரத்தக்கது.

---

**வைத்தீசுவரன் கோயில்:** செல்லமுத்துக் குமாரசுவாமி கோயில் தைச்செவ்வாய் உற்சவம் 29—1—61 முதல் 7—2—61 முடிய நடைபெற்றன. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

பழமலை: பழமலைநாதப்பெருமானுக்கு மாசிமகத் திருவிழா 20—2—61 முதல 3—3—61 வரை நடைபெறும். சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெறும்.


# சென்னை கந்தகோட்டம்

அருள்வா ரிதியின் முழுக்காட்டி
அகிலத் தினரோ(டு) அலமரும்என்
இருள்வா தனைதீர்த் தளிப்பதனுக்(கு)
இந்நாள் இரங்க ஒண்ணுதோ ?
சுருள்வார் குழல்பார்ப் பதிமதலாய் !
துணர்ப்பூங் கடப்பந் தொடையானே !
தெருள்வார் மலியும் தமிழ்ச் சென்னைத்
திருக்கோ யிலில்வாழ் செவ்வேளே
—தண்டபாணி சுவாமிகள்

பழந்தமிழ் நூல்களில் கோயிலை "நகர்" என்றும், "கோட்டம்" என்றும் குறிக்கப் பெற்றிருக்கிறது. கோயில் அல்லது நகர் இதைச்சுற்றி எழுந்த ஊர்களே நகரங்களாக ஆயின. அந்த நகர் என்ற சொல்லிலிருந்தே நாகரிகம் என்ற சொல்லும் உண்டாயிற்று. கோட்டம் என்ற பெயருடன் இரண்டு கோயில்கள் திகழ்கின்றன. காஞ்சிபுரத்திலுள்ள குமரகோட்டம், சென்னையிலுள்ள கந்தகோட்டம் அவையாகும். இவை யிரண்டும் முருகப்பெருமானுடைய தனிப்பெருங் கோயில்கள்.

சென்னையில் தேவாரப் பாடல் பெற்ற திருமயிலைக் கபாலிச்சரமும், ஆழ்வார்களால் மங்களசாசனம் செய்யப் பெற்ற திருவல்லிக் கேணியும் சிறந்து விளங்குகின்றன. கந்தசாமி கோயில் என்று வழங்கும் கந்தகோட்டமும் பெருமையுடன் பொலிந்து நிற்கின்றது. இந்த கோயில் சென்னைக்கு நடுநாயகமாய் மிளிர்கின்றது.

இந்த கோயில் ஏற்பட்ட அதியற்புதமான வரலாற்றை அறிந்துகொள்வது அவசியம். இன்றைக்குச் சற்றேக்குறைய 350 ஆண்டுகள்முன் அதாவது கி.பி. 1595-ல் நடந்தது. சென்னை பெத்துநாயக்கன்பேட்டையில் கந்தப்பாசாரியார் என்ற ஒருவர் சர்வ சித்தி விநாயகர் கோயிலைக்கட்டி, கணபதியை வழிபட்டு வந்தார். அவரை மக்கள் கந்தபண்டாரம் என்றே அழைக்கலாயினர். இந்த கணபதித் தொண்டருக்கு முருகன் அடியார் ஒருவர் நெருங்கிய நண்பர். அவர் பெயர் வேளூர் மாரி செட்டியார். இருவரும் ஒவ்வொரு



கந்தகோட்டம் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்

மாதக்கிருத்திகைக்கும் திருப்போரூர் சென்று முருகக்கடவுளை வழிபட்டு வருவதை நியதியாகக் கொண்டிருந்தனர். கி.பி. 1595 ஆண்டு, பிரமாதி மார்கழிக் கிருத்திகைக்கு வழக்கம்போல் திருப்போரூருக்கு நடந்து சென்றனர். திருப்போரூரை அடைந்தனர். வழி நடந்த களைப்புத்தீர ஒரு வேப்பமரத்தடியில் இளைப்பாறினர்; கண் அயர்ந்தனர். இருவர் கனவிலும் கந்தன் காட்சி யளித்தான். தான் புற்றின்கீழ் மறைந்து கிடப்பதாகவும், தன்னைச் சென்னைக்கு எடுத்துச் செல்லும்படியும் பணித்தான். விழித்தெழுந்த இருவரும் புற்றைக் கிண்டி பார்த்தனர். முருகன் திருவுருவச் சிலை தென்பட்டது. அப்புற்றை இலைகளால் மூடி வைத்துவிட்டு போரூர் முருகப் பெருமான் கோயிலுக்குச் சென்று வழிபாடாற்றினர்கள். அன்று நள்ளிரவில் வேம்படிப்புற்றிடம் வந்து மண்ணைத் தோண்டி கந்தனை யெடுத்தார்கள். மாரிச் செட்டியார் சுமக்க, கந்தப்பாசாரியார் தொடர இரவு முழுதும் நடந்து திருவான்மியூர், திருமயிலை, திருவல்லிக்கேணி இவைகளைக்கடந்து பெத்துநாயக்கன்பேட்டையை அடைந்தனர். பொழுது விடிந்தது. பகலவன் குணதிசை எழுந்தனன், சர்வசித்தி விநாயகர் கோயிலில்

யாவரும் காண அத்திருவுருவச் சிலையை வைத்தனர். சென்னை முழுவதும் செய்தி பரவியது.

வேளூர் மாரி செட்டியார் முருகனுக்குக் கோயில் எழுப்ப வேண்டுமென்று பேரி செட்டிமார் உதவியை நாடினர். தம்பு செட்டியார், இலிங்கச் செட்டியார் இவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் திருப்பணி தொடங்குவதென முடிவு செய்தனர். முத்து நாயகர் என்பவர் தனக்குச் சொந்தமான நந்தவனத்தைக் கோயில் கட்டுவதற்காகத் தான சாசனம் செய்து கொடுத்தார். அந்த இடத்தில்தான் இப்போதுள்ள கந்தகோட்டம் அமைக்கப்பெற்றது. விரைவாகத் தொடங்க இருந்த திருப்பணி பொருள்முட்டுப் பாட்டினால் தடைபெற்றது. மாரிசெட்டியார் மனம் கவன்றிருந்தார். அவருடைய மனைவியார் ஆதிலட்சுமியம்மையார் அதை யறிந்து தன் தாலியைத் தவிர எல்லா அணிகலன்களையும் கொடுத்து ஆலயத் திருப்பணி நடத்துமாறு வேண்டினர். மனமகிழ்ந்த மாரி செட்டியார், தன் நண்பர்களான கந்தப்பா சாரியார், முத்து நாயகர் இவர்களின் துணை கொண்டு நல்ல வேளையில் திருப்பணி கால் கோள்விழாச் செய்தனர். பின்னர் வணிகப் பெருமக்கள் பொருள் உதவி செய்ய இப்போதுள்ள கருங்கற்கோயில் கட்டிமுடிக்கப் பெற்றது.

கோயிலின் வாயிலை, கண்கவர் வனப்புடைய வண்ண உருவங்கள் நிறைந்த கோபுரம் மின்விளக்குகளுடன் அழகு செய்கிறது. ஐந்து மாடங்களுடன் வானளாவி வடதிசை நோக்கி நிற்கின்றது. மூலஸ்தானத்தில் கந்தசுவாமியென வழங்கும் முத்துக்குமாரசுவாமி காட்சி யளிக்கிறார். அவர்க்கு இடதுபுறத்தில் மீனாட்சி, சுந்தரேசர் சந்நிதிகள் உள்ளன. வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகப் பெருமான் (உற்சவர்) அதன்பக்கத்தில் எழுந்தருளியுள்ளார். மற்றும் தட்சிணாமூர்த்தி, சிவகாமியார் சமேத சபாநாயகர், சுமித்ரேசர் (மாத்ருச் சண்டர்), துர்க்கை, சித்திக்கணபதி, அகோர வீரபத்திரர், சூரியன், வீரவாகுதேவர், வயிரவர், நாயன்மார்களில் சிலர், இடும்பன் முதலியோர் சந்நிதிகளும் இக்கோயிலில் இருக்கின்றன. அருணகிரிநாதர், இராமலிங்க சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் இவர்களுடைய திருவுருவங்களும் உள்ளன. 'திருக்கோயில் கட்ட முதற் காரணமாயிருந்த வேளூர் மாரி செட்டியாரின் உருவத்தையும் ஒரு மண்டபத் தூணில் காணலாம். கோயிலுக்குள் சரவணப் பொய்கை யென்ற அழகிய திருக்குளத் தீர்த்தம் இருக்கிறது.

இந்தக்கோயிலில் எல்லா மாதங்களிலும் உற்சவங்கள் நடைபெறுகின்றன. பிரம்மோற்சவம் தை மாதத்தில் மிகச் சிறப்பாக நிகழ்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி வழிபடுவர்.

கந்தகோட்டத்துப் பெருமானைப் பல பெரியோர்கள் நூல்கள் வாயிலாகப் பாடிப் பரவி யிருக்கின்றனர். வடலூர் இராமலிங்க அடிகளார், 'தெய்வமணிமாலை'யில் மனமுருகிப் பாடிய பாடல்களை எல்லா மக்களும் நன்கு அறிவர். 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்" என்று தொடங்கும் பாடலை அறியாதவர்கள் இல்லை. மனிதவாழ்க்கையில் ஒருவனுக்கு எவை வேண்டும், எவை வேண்டாம் என்பதை அப்பாடலில் கூறியுள்ளார். 'தானமிகு சென்னை', 'தருமமிகு சென்னை', 'தலைவர் புகழ் சென்னை', 'தனவீடு சென்னை' என்றெல்லாம் போற்றிப் புகழ்கின்றார். மற்றொரு பாடலில், "ஈ என்று ஒருவரை இரவாத இயல்பும், இடு என்று கேட்டவர்க்கு இல்லையென்னாமல் இடுகின்ற திறமும், நீ என்னை விடாத நிலையும், நான் உன்னை என்றும் நினைவிடா நெறியும், பிறர் தம்மைத் தீங்கு சொல்லாத தெளிவும், வாய்மையும் தூய்மையும் தந்து திருவடிக்காளாக்குவாய்" என்று கந்தகோட்டத்துள் வளர்தலமோங்கு கந்தவேளைச் சிந்தித்து வந்தித்துப் பாடுகிறார்.

திருநெல்வேலிச் சீமையில் அவதரித்த முருகன் தொண்டர்களில் ஒருவர் வண்ணச் சரபம் தண்டபாணிசுவாமிகள் என்பார். பல நூல்களைப் பல்லாயிரக் கணக்கான பாடல்களால் இயற்றி யிருக்கின்றனர். அன்னார், கந்தகோட்டத் திருப்புகழ், கந்தகோட்டப் பதிற்றுப் பத்தந்தாதி, மயில்மிசை கண்ட பதிகம், தேர்மிசை கண்டபதிகம், சிவகுரு தரிசனப்பதிகம், சண்முகதரிசனப்பதிகம், விமானதரிசனப்பதிகம், கந்தசுவாமிக் கலம்பகம், கந்தசாமி பிள்ளைத் தமிழ், கந்தசாமி பதிகம், கந்தர்தனி வெண்பா முதலியவைகளை யாத்திருக்கின்றனர்.

பொன்னைப் பொருளெனவே
போற்றுநர்பால் போகாமல்
உன்னைப் பொருளென்
றுணரேனே—சென்னைநகர்
கந்தனே வேற்கைக்
கடவுளே கன்னிபெற்ற
மைந்தனே நீமயில்
மேல் வா

என்பது அந்த சுவாமிகளுடைய பாடல்களி லொன்று.

இராமேசுவரத்திற்கருகிலுள்ள "பரம்ப னெனும் பதிமுனைத்த பவளக்குன்றென" குமரகுருதாச சுவாமிகளும் கந்தசுவாமியைச் சந்தப் பாக்களால் வந்தித்திருக்கின்றனர். அவர் இயற்றியவை, கந்தசாமிப்பா, கந்தர் இரட்டை மணிமாலை, கந்தர் ஒருபா ஒரு பஃது, கந்தர் திருவாரம், கந்தர் நான்மணி மாலை, கந்தவேள் வேட்கை, சென்னைச்சேய், சென்னை முத்துக்குமாரசுவாமி முதலிய நூல்கள்.

எந்தா யெளியே னிகலா மிடரால்
நொந்தேன் மிகமே னுதிசே ரருடான்
தந்தா ணெடுவாழ் வுடையந் தரியின்
மைந்தா குமரா வடிவே லவனே

என்பது அவருடைய கந்தர் திருவாரப் பாட லில் ஒன்று.

ஏறக்குறைய நூறுண்டுகளுக்கு முன் னிருந்த குளத்தூர்-வரகவி கிருஷ்ணப்ப செட்டி யார் என்பவர் செல்வக்கந்தர் தலபுராணம், வேதாந்த விருத்தம், கந்தர் திருப்புகழ், கந்தர் கீர்த்தனை முதலியவைகளை இயற்றி யிருக்கின்றார். தலபுராணச் செய்யுள் நூலைத் தழுவி, திருக்கழுக்குன்றம்-நமச்சிவாய யோகி கள் என்பார் தலவரலாற்றை உரைநடையில் எழுதி யிருக்கின்றார். சைவ புராணிகர்-குகஸ்ரீ ரசபதி அவர்கள், 'கந்தகோட்டத்தல வரலாறு' என்ற அரிய நூலை இனிய எளிய நடையில் இயற்றி யிருக்கின்றார்கள். அது கந்தசாமி கோயில் தேவஸ்தானத்தாரால் வெளியிடப் பெற்றிருக்கிறது.

அந்தரரும் போற்றும் அணிசென்னை மாநகர்வாழ்
கந்தனது பிள்ளைக் கவிமுற்றும்—சிந்தனையிற்
கொண்டால் வினைப்பிணிபோம் கோடானுகோடி [நலம்
உண்டாகும் நெஞ்சே உணர்.

—தண்டபாணிசுவாமிகள்

---

**திருவாலங்காட்டுப் பழையனூர்**: சாட்சிநாதேசிவரர் கோயில், சொல்காக்கத் தீப் பாய்ந்த எழுபது வேளாளர் மண்டபத் திருப்பணிக்குக் கால்கோள் விழாவை டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம், எம். டி. எம்.ஆர் சி.பி., அவர்கள் 4—1—61 ல் ஆரம்பித் துக் கொடுத்தார்கள். விழாவிற்கு சென்னை மாகாண பிரதம மாஜிஸ்டிரேட் திரு ஆர். சதாசிவம், பி.ஏ., எம்.எல், அவர்கள் தலைமை வகித்தார்கள்.

**திருநாவலூர்**: சுந்தரமூர்த்தி மடாலயம் கால்கோள் விழா 5—2—61 ல் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு அ. உத்தண்டராமன், ஐ ஏ.எஸ்., அவர்களால் செய்து வைக்கப்பெற்றது. அவ்விழாவிற்கு உளுந்தூர்ப்பேட்டை திரு. கந்தசாமிப் படையாச்சி, எம்.எல்.ஏ., அவர்கள் தலைமை வகித்தார்கள். ஆணையர் அவர்கள் கரணையை ஏலம்கூறி யதில் ரூ. 555-க்கு திருச்சி மாவட்டம் கோவத்தகுடி நிலக்கிழார் திரு. தாண்டவராய பிள்ளை யவர்கள் எடுத்தார்கள். சேலம் மாவட்டம் வேலூர் திரு, ஈஸ்வர குருக்கள் அவர்கள் திருப் பணிக்கு ரூ. 1001 நன்கொடை வழங்கினார்கள்.

**அம்பாசமுத்திரம்**: காசிநாதசுவாமி, கிருஷ்ணசுவாமி கோயில்களின் சார்பில் கிருஷ்ணசுவாமி கோயிலில் திருப்பாவை—திருவெம்பாவை மகாநாடு 7—1—61, 8—1—61 —தேதிகளில் நடைபெற்றது. முதல்நாள் திரு. பாஸ்கரத்தொண்டமான், ஐ.ஏ,எஸ் (மாஜி கலெக்டர்) அவர்களும், மறுநாள் சென்னை கோவிந்தராஜுலு நாயுடு அவர்களும் தலைமை வகித்தார்கள். சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. திருவெம்பாவை—திருப் பாவைப் போட்டியில் வெற்றிபெற்ற சிறுவர் சிறுமிகளுக்குப் பரிசுகளும் வழங்கப் பெற்றன.

# அறநிலையச் சட்டம்

# MADRAS ACT.

"The translation has not been authorised or accepted as authentic by the Government." Translation by Sri A. S. GNANASAMBANDAM, Translation Dept.

—:O:—

(முன்தொடர்ச்சி)

(6) இப் பிரிவின்படி ஓர் ஏற்பாட்டை நிச்சயித்திருப்பதற்காக அல்லது மாற்றியமைப்பதற்காக அல்லது ரத்து செய்வதற்காக துணை ஆணையர் பிறப்பிக்கும் ஒவ்வொரு உத்தரவையும் நிர்ணயிக்கப்பட்ட விதமாகப் பிரசித்தம் செய்யவேண்டும்; அப்படி வெளியிடுவதன்பேரில், 69-வது, 70 வது பிரிவுகளின் ஷரத்துக்களுக்குட்பட்டு ஷை தர்மகர்த்தரையும் ஷை நிர்வாக அலுவலகரையும் பற்றுள்ள எல்லா நபர்களையும் அது கட்டுப்படுத்தும்

65. **திட்டங்களை நிச்சயிக்க ஆணையருக்குள்ள அதிகாரம்:** (1) ஒரு மடம் அல்லது ஷை மடத்துடன் சேர்க்கப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட கட்டளையின் சிறந்த பரிபாலனத்தின் நலனுக்காக. ஷை மடத்திற்காக, அல்லது அதனுடன் சேர்க்கப்பட்ட கட்டளைக்காகத் திட்டம் ஒன்று நிச்சயிக்கப்பட வேண்டுமென ஆணையருக்கு நம்பக் காரணமிருந்தால், அல்லது, ஷை மடம் அல்லது மடத்துடன் சேர்க்கப்பட்டுள்ள கட்டளையின் சிறந்த பரிபாலனத்திற்காக, நலத்துக்காக திட்டம் ஒன்று நிச்சயிக்கப்படவேண்டும் என்று கூறி ஐவருக்குக் குறையாத அக்கரையுள்ளவர்கள் எழுதிய விண்ணப்பம் செய்து கொண்டால், ஆணையர் தர்மகர்த்தரையும் அக்கரையுள்ளவர்களையும் நிர்ணயித்தவிதமாகக் கலந்தாலோசிக்க வேண்டும்; அத்தகைய ஆலோசனைக்குப் பிறகு, மேற்படி மடம் அல்லது மடத்துடன் சேர்க்கப்பட்ட கட்டளைக்கு திட்டம் ஒன்று நிச்சயிப்பது அவசியமானது அல்லது விரும்பத்தக்கது என அவருக்குச் சந்தேகமறத் தெரியவந்தால் அவர் மேற்படி திட்டம் ஒன்றை, உத்தரவு மூலமாக நிச்சயிக்கலாம்.

(2) ஒரு மடத்தின் அல்லது ஒரு மடத்தோடு சேர்க்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளையின் பரிபாலனத்திற்காக இப்பிரிவின்படி நிச்சயிக்கப்பட்ட ஒரு திட்டத்தில் அடியிற்கண்டவற்றிற்காக ஏற்பாடு அடங்கியிருக்கலாம்.

(a) ஷை மடத்தின் அல்லது குறிப்பிட்ட கட்டளையின் பரிபாலனத்தில் முழுவதும் அல்லது யாதொரு பகுதியில் பங்கெடுக்கும் அல்லது உதவி செய்யும் காரியத்துக்காக ஒரு தனி சபையை அமைப்பது;

ஆனால், மேற்படி சபையின் அங்கத்தினர்கள், மேற்படி மடம் அல்லது கட்டளையில் அக்கறை கொண்டுள்ள நபர்களிலிருந்து தெரிந்தெடுக்கவேண்டும்;

(b) தர்மகர்த்தரின் அதிகாரங்களையும், கடமைகளையும் வரையறுப்பது.

(3) ஆணையர் மேற்படி மடத்தின் அல்லது மடத்துடன் சேர்க்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளையின் சொத்துக்கள் எவையென நிச்சயித்து, திட்டத்தின் அட்டவணையில் மேற்படி சொத்துக்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை இணைக்கலாம்.

4. (a) ஆணையர், எப்போதாகிலும் ஒரு மடம் அல்லது மடத்துடன் சேர்க்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளை சம்பந்தமாக, (1) உட்பிரிவின்படி நிச்சயிக்கப்பட்டு அமுலில் உள்ள யாதொரு திட்டத்தை, அல்லது 1926-ம் ஆண்டு சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின்படி (சென்னை 1927-ம் ஆண்டு 2 வது சட்டம்) சபையாரால் நிச்சயிக்கப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட அல்லது அச் சட்டத்தின்படி நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்பட்டு

அமுலிலுள்ள யாதொரு திட்டத்தை, அல்லது இச் சட்டத்தின்படி ஆணையரால் நிச்சயிக்கப்பட்டு அல்லது மாற்றியமைக்கப்பட்டு அமுலிலுள்ள யாதொரு திட்டத்தை அல்லது 70-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் படிக்கான ஒரு வழக்கின் அல்லது மேற்படி பிரிவின் (2) உட்பிரிவின்படிக்கான ஒரு அப்பீலின்பேரில் கோர்ட்டாரால் நிச்சயிக்கப்பட்டு அல்லது மாற்றியமைக்கப்பட்டு அமுலிலுள்ள யாதொரு திட்டத்தை அல்லது 118-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (a) பகுதியின்படிக் கோர்ட்டாரால் நிச்சயிக்கப்பட்டதாக அல்லது மாற்றியமைக்கப்பட்டதாகக் கருதப்பட்டு அமுலிலுள்ள யாதொரு திட்டத்தை மாற்றியமைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம்.

ஆனல், 70-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படிக்கான ஒரு வழக்கின் அல்லது மேற்படி பிரிவின் (2) உட்பிரிவின் படிக்கான ஒரு அப்பீலின்பேரில் கோர்ட்டாரால் அல்லது மாற்றியமைக்கப்பட்ட அமுலிலுள்ள ஒரு திட்டத்தை அல்லது 118-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (a) பகுதியின்படிக் கோர்ட்டாரால் நிச்சயிக்கப்பட்டதாக அல்லது மாற்றியமைக்கப்பட்டதாகக் கருதப்பட்டு அமுலிலுள்ள யாதொரு திட்டத்தை ரத்து செய்வது அல்லது மாற்றியமைப்பது, நிர்ணயிக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு செய்யப்படவேண்டும்.

(b). (a) பகுதியில் குறிப்பிட்ட யாதொரு திட்டம் இச் சட்டத்திற்கும் அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளுக்கும் பொருத்தமற்றது என ஆணையர் சந்தேகமறத் தெரிந்து கொண்டால் அவர் எப்பொழுதாகிலும் அந்தத் திட்டத்தை, ஷெ சட்டத்தின், அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளின் ஷரத்துகளை அனுசரித்து இருக்கும்படி அவசியமான விதத்தில் மாற்றியமைக்கலாம்.

(5) ஒரு திட்டத்தை நிச்சயித்து, மாற்றியமைத்து, அல்லது ரத்துசெய்து இப்பிரிவின் படி ஆணையர் பிறப்பிக்கும் ஒவ்வொரு உத்தரவும் நிர்ணயிக்கக்கூடிய விதமாக வெளியிடப்படவேண்டும்; அது அவ்வாறு வெளியிடப்படுவதன்பேரில் 69, 70-வது பிரிவுகளின் ஷரத்துகளுக்குட்பட்டு தர்மகர்த்தரையும், நிர்வாக அலுவலரையும், அக்கறையுள்ள அனைவரையும் கட்டுப்படுத்தும்,

66. **கட்டளைகளை உபயோகிப்பது:**—(1) யாதொரு அற நிலையத்தின் காரியமானது ஆதியிலிருந்தே நிறைவேற்ற முடியாததாய் இருக்கிறதென்ருவது பிற்பாடு நிறைவேற்ற முடியாததாய் விட்டதென்ருவது சந்தேகமறத் தெரிந்து கொள்வதன்பேரில் துணை ஆணையர் உத்தரவு பிறப்பித்து, அதன்மூலம், அந்த நிலையத்தின் கட்டளைகளை அடியிற் கண்ட காரியங்கள் எல்லாவற்றிற்குமாவது அவைகளில் யாதொன்றிற்காவது உபயோகிக்க வேண்டுமெனக் கட்டளையிடலாம்; அக் காரியங்களாவன :—

(a) வறுமை நிலையிலிருக்கிற அல்லது உதவி தேவையாயிருக்கிற மத சம்பந்தமான இதர ஸ்தாபனங்களுக்கு உதவியளிப்பது;

(b) இந்துமதத்தோடு தொடர்புள்ள யாதொரு மதக் காரியத்திற்காக உதவி அளிப்பது;

(c) அந்த நிலையத்தின் மதக்கோட்பாடுகளைப் பிரச்சாரம் செய்வது;

(d) திவ்ய பிரபந்தம், தேவாரம், இவை போன்றவற்றையும் பாடுவது;

(e) அர்ச்சகர்கள், அத்யாபகர்கள் வேதபாராயணிகள், ஓதுவார்கள் இவர்களுடைய பயிற்சிக்காகவும் (இந்திய மொழிகள் உள்பட), திவ்யபிரபந்தம், தேவாரம் அது போன்ற மற்றவைகளையும் கற்பதற்காகவும் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவதும், அவற்றை வைத்து வருவதும்;

(f) இந்துமதம், இந்துமத தத்துவம் அல்லது இந்துமத சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்வதற்காக விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அல்லது இந்து கோயில், சிற்பக்கலையில் போதனை செய்வதற்காக ஒரு பல்கலைக் கழகத்தையேனும், கல்லூரியையேனும், இதர நிலையத்தையேனும் ஏற்படுத்தி பராமரித்து வருவது;

(g) இந்து மாணவர்களுக்கு இந்துமதத்திலும் போதனையளிக்கிற கல்வி, ஸ்தாபனங்களை ஏற்படுத்திப் பராமரித்து வருவது;

(h) இந்த தேசத்துக் கலைகளையும், சிற்பத் தொழிலையும் வளர்ப்பதற்கு ஆதரவு கொடுப்பது;

(i) இந்து குழந்தைகளுக்காகவென்று அனாதை இல்லங்களை ஏற்படுத்திப் பராமரித்து வருவது;

(j) குட்டத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிற இந்துக்களுக்காக சம்ரட்சண சாலைகளை ஏற்படுத்திப் பராமரித்து வருவது;

(k) ஏழைகள், ஆதரவற்றவர்கள், தேக திடமற்ற நபர்கள் ஆகியவர்களுக்காக ஏழை விடுதிகளை ஏற்படுத்துவதும் வைத்து வருவதும்;

(l) யாத்ரீகர்களின் பிரயோசனத்திற்காகவென்று ஆஸ்பத்திரிகளையும் மருந்து கொடுக்கும் சாலைகளையும் ஏற்படுத்திப் பராமரித்து வருவது;

ஆனால், யாதொரு மத சமூகத்தாரால் அல்லது அவர்களில் ஒரு பிரிவினரால் ஏற்படுத்திப் பராமரித்து வரப்படும் ஓர் அறநிலையத்தின் விஷயத்திலே, ஷை கட்டளைகளை மேலேகண்ட காரியங்களினிமித்தம் சம்பந்தப்பட்ட அந்த சமூகத்தாரின் அல்லது பிரிவினரின் நன்மைக்காகக் கூடுமான மட்டில் உபயோகிக்கவேண்டும்.

(2). (1) உட்பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட எந்த உத்தரவையும் துணை ஆணையர் எப்போதேனும் மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம்.

(3) இப் பிரிவின்படி துணை ஆணையர் பிறப்பிக்கும் உத்தரவை நிர்ணயிக்கப்பட்ட விதமாக வெளியிடவேண்டும்; அப்படி வெளியிடப்படுவதன்பேரில், 69-வது பிரிவின் ஷரத்துக்களுக்குட்பட்டுத் தர்மகர்த்தரையும் நிர்வாக அலுவலரையும் மற்றுள்ள எல்லா நபர்களையும் அது கட்டுப்படுத்தும்.

67. செயலற்றுப்போன அறநிலையங்களின் சொத்துக்களையும், நிதிகளையும் நிச்சயிப்பதும் அவற்றை உபயோகிப்பதும்:—(1) துணை ஆணையர் இச் சட்டம் செலாவணியாகத் தொடங்கிய தேதிக்கு முன்போ பிறகோ ஒரு அறநிலையம் செயலற்றுப்போய் விட்டதென்று சந்தேகமறத் தெரிந்துகொள்வதன்பேரில், அதனுடைய சொத்துக்களையும், நிதிகளையும் நிச்சயித்தறிந்து கொள்ளும்பொருட்டு நிர்ணயிக்கப்பட்ட விதமாக ஒரு விசாரணை நடத்தலாம் அப்படிச் செய்த பிறகு ஓர் உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாக—

(a) அந்த நிலையத்தின் சொத்துக்களையும் நிதிகளையும் குறிப்பிடவேண்டும்;

(b) அதற்காகவென்று தர்மகர்த்தர் ஒருவரை நியமிக்கவேண்டும்;

(c) அச் சொத்துக்களையாவது நிதிகளையாவது எவராகிலும் தமது சுவாதீனத்தில் வைத்திருந்தால், அவரிடமிருந்து அவற்றை வசூலிக்கும்படிக் கட்டளையிடவேண்டும்: மேலும்,

(d) அவ்வாறு குறிப்பிட்ட சொத்துக்களையும் நிதிகளையும் அந்த நிலையத்தைப் புதுப்பிப்பதற்காகப் பயன்படுத்த வேண்டுமென்றாவது அவ்வாறு புதுப்பிப்பது சாத்தியமாயிராவிட்டால்...66-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் குறிப்பிட்டிருக்கிற காரியங்களில் ஒன்றின் பொருட்டு அல்லது பலவற்றின்பொருட்டு பயன்படுத்த வேண்டுமென்றாவது திட்டம் வகுக்கவேண்டும்.

(2) துணை ஆணையர், நிர்ணயிக்கப்பட்ட விதமாக ஒரு விசாரணை நடத்திய பிறகு, மத வழிபாட்டுக்காக அல்லது போதனைக்காக உபயோகிக்கப்பட்டு வந்த யாதொரு கட்டிடம் அல்லது வேறு இடம் இச் சட்டம் செலாவணியாகத் தொடங்கிய தேதிக்கு முன்போ, பிறகோ அக்காரியத்துக்காக உபயோகப்படாமற் போய்விட்டிருக்கிறதென்று சந்தேகமறத் தெரிந்து கொள்வதன் பேரில் உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாக-

(a) அந்தக் கட்டிடம் அல்லது இடத்தைச் சுவாதீனத்தில் வைத்திருக்கக்கூடிய ஒருவரிடமிருந்து அதை மீண்டும் பெற வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(b) முன்போலவே மத வழிபாட்டுக்காக அல்லது போதனைக்காக அது உபயோகிக்கப் படவேண்டுமென்றோ, 66-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் குறிப்பிட்டிருக்கிற காரியங்களில் யாதொன்றுக்காக அல்லது பலவற்றிற்காக அது, பயன்படுத்தப்பட வேண்டுமென்றோ திட்டம் வகுக்கலாம்.

(3) கால வரையறைச் சட்டம் பிரயோகப்படுவதானால், 1951-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்குமுன் யாதொரு நபரிடம் நிலைபெற்றிருந்த யாதொரு, சொத்து அல்லது எவையேனும் நிதிகள் விஷயமாக ஓர் உத்தரவு பிறப்பிக்க (1) உட்பிரிவிலா

வது, (2) உட்பிரிவிலாவது கண்டதெதுவும் துணை ஆணையருக்கு அதிகாரம் கொடுப்ப தாகக் கருதப்படமாட்டாது.

(4). (1) உட்பிரிவின்படியாவது (2) உட்பிரிவின்படியாவது துணை ஆணையர் பிறப் பித்த உத்தரவு ஒவ்வொன்றும் நிர்ணயிக்கப் பட்ட விதமாகப் பிரசித்தம் செய்யப்பட வேண்டும்.

68. துணை ஆணையர் பிரதிகளை அனுப்ப வேண்டுமென்பது :—துணை ஆணையர் இந்த அத்தியாயத்தின் முன் சொன்ன பிரிவுகளில் யாதொன்றின்படித் தம்மால் பிறப்பிக்கப் பட்ட உத்தரவின் தேதியிலிருந்து ஒரு வாரத் திற்குள் அந்த உத்தரவின் பிரதியொன்றை ஆணையருக்கு அனுப்பவேண்டும்.

69. ஆணையருக்கு அப்பீல் செய்துகொள் வது :—(1) இந்த அத்தியாயத்தின் முந்திய ஷரத்துக்களில் யாதொன்றின்படி துணை ஆணையர் பிறப்பித்த ஓர் உத்தரவினல் துன்பமடைந்த ஒருவர், சந்தர்ப்பத்துக்கேற்ப வெளியான தேதியிலிருந்து அல்லது சம்பந்தப் பட்ட கட்சிக்காரர் அதைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் ஆணையருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; அதன் பேரில் ஆணையர் தகுதியெனக் கருது கிற படிக்கான உத்தரவைப் பிறப்பிக்கலாம்.

(2) துணை ஆணையரால் பிறப்பிக்கப் பட்ட எந்த உத்தரவு விஷயமாய் (1) உட் பிரிவில் குறிப்பிட்டுள்ள காலத்துக்குள்ள எந்த அப்பீலும் கொடுத்துக் கொள்ளப்பட வில்லையோ அத்தகைய யாதொரு உத்தரவை ஆணையர் தாமாகவே மாற்றியமைக்கலாம். ஆணையர் அத்தகைய நடவடிக்கை ஒழுங் கானதுதானு என்று சந்தேகமறத் தெரிந்து கொள்ளவும், துணை ஆணையரால் பிறப்பிக்கப் பட்ட உத்தரவு அல்லது தீர்மானம் சரியா னதுதானு, சட்ட சம்மதமானதுதானு, நேர்மையானதுதானு என்று சந்தேகமறத் தெரிந்து கொள்ளவும் ரெக்கார்டுகளைத் தரு வித்துப் பரிசீலனை செய்யலாம். துணை ஆணையரால் செய்யப்பட்ட ஓர் உத்தரவின் வின் விஷயமாக ஆணையரால் பிறப்பிக்கப் பட்ட அத்தகைய யாதொரு உத்தரவு (1) உட்பிரிவின் கீழ் ஆணையருக்குக் கொடுத்துக் கொள்ளப்பட்ட ஓர் அப்பீலின்மேல் அவ ரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவாகக் கருதப் படவேண்டும்.

(3) ஷை அப்பீலின்பேரில் ஆணையர் பிறப்பித்த எந்த ஆணையின்பேரில் அடுத்து பின்வரும் பிரிவின்படி நீதிமன்றத்தில் வழக் குத் தொடரலாகாதோ அல்லது அப்படிப் பட்ட எந்த உத்தரவின்பேரில் 70-வது பிரி வைச் சேர்ந்த (1) உட்பிரிவில் குறிப்பிட் டுள்ள கால அளவுக்குள் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கவில்லையோ அப் படிப்பட்ட யாதொரு உத்தரவு ஓர் அறநிலை யத்தின் பரிபாலனத்துக்கான ஏற்பாட்டை நிச்சயித்திருந்தாலும் அல்லது மாற்றியமைத் திருந்தாலும் அல்லது 66-வது பிரிவில் குறிப் பிட்டிருக்கும் எந்த விஷயங்களுக்காவது சம்பந்தப்பட்டிருந்தாலும், அதை ஆணையர் மாற்றியமைக்கலாம் அல்லது ரத்து செய்ய லாம்.

70. வழக்குகளும் அப்பீல்களும் :—(1). (i) 69-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் படியும் அல்லது (2) உட்பிரிவின்படியும், 63-வது பிரிவிலாவது, 64-வது பிரிவிலாவது, 67-வது பிரிவிலாவது குறிப்பிட்டிருக்கிற விஷயங்களில் யாதொன்று சம்பந்தமாகவும், அல்லது

(ii) 63-வது பிரிவையேனும், 64-வது பிரிவையேனும், 67-வது பிரிவையேனும் 22-வது பிரிவைச் சேர்ந்த (1) (a), (2) அல் லது (4) (a) உட்பிரிவுகளுடன் சேர்த்து வாசித்து அந்தப் பிரிவின்படியாகிலும் அல் லது 65-வது பிரிவின்படியாகிலும் ஆணையர் பிறப்பித்த யாதொரு உத்தரவினல் துன்ப மடைந்திருக்கிற ஒரு கட்சிக்காரர் தம்மிடம் அவ்வுத்தரவு வந்து சேர்ந்த தேதியிலிருந்து தொண்ணூறு தினங்களுக்குள் அவ்வுத்தர வின்பேரில் நீதிமன்றத்திலே ஒரு வழக்குத் தொடரலாம்; அந்த நீதிமன்றத்தார் ஷை உத்தரவை மாற்றலாம் அல்லது ரத்து செய்ய லாம்; ஆனல் அந்த வழக்கு பைசலாகாம லிருக்கிறவரையில் ஆணையருடைய உத்த ரவை அமுலுக்குக் கொண்டுவராமல் நிறுத்தி வைக்க அந்த நீதிமன்றத்தாருக்கு அதிகார மில்லை.

(2). (1) உட்பிரிவின்படி இந்த நீதிமன் றத்தார் அளித்த ஒரு தீர்ப்பினல் துன்ப மடைந்த ஒரு கட்சிக்காரர், அந்தத் தீர்ப்பின்

தேதியிலிருந்து தொண்ணூறு தினங்களுக்குள் உயர் நீதிமன்றத்தாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

## அத்தியாயம் VI.

### அறிக்கையிடப்பட்ட அறநிலையங்கள்.

*71.* **நிலயத்தை ஏன் அறிக்கையிடக் கூடாதென்று காரணங் காட்டும்படி நோட்டீஸ் கொடுப்பது:**—*(1)* இச் சட்டத்தின்படி நிச்சயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிற யாதொரு ஏற்பாட்டுக்கு ஒரு அறநிலையம் உட்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஷை நிலயம் சரிவர நிர்வாகிக்கப்படவில்லையென்று நம்ப ஆணையருக்கு நியாயமிருந்தாலும் ஷை நிலயத்தின் பரிபாலன நன்மையை உத்தேசித்து இந்த அத்தியாயத்தின்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமென்று அவர் சந்தேகமறத் தெரிந்துகொண்டாலும், ஆணையர் நிர்ணயிக்கப்பட்ட விதமாய் பிரசித்தம் செய்யப்படும் நோட்டீஸ் மூலமாக, அந்த ஸ்தாபனம் இந்த அத்தியாயத்தின் ஷரத்துக்களுக்குட்பட்டிருக்க வேண்டுமென்று ஏன் அறிக்கையிடப்படக் கூடாதென்பதற்குக் காரணங்காட்டும்படி பிரஸ்தாப தர்மகர்த்தரையும் பற்றுள்ள மற்லெல்லா நபர்களையும் கேட்கலாம்.

*(2)* அந்த நோட்டிஸிலே உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைக்கான நியாயங்கள் கண்டிருக்க வேண்டியதுமல்லாமல் மேலே கண்டபடி காரணங் காட்டுவதற்காக, ஷை நோட்டிஸ் பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குக் குறையாமல், நியாயமான காலஅளவு குறிப்பிட்டிருக்க வேண்டும்.

*(3)* அதன்பேரில் ஷை தர்மகர்த்தராவது பற்றுள்ள யாதொரு நபராவது உத்தேசித்துள்ளபடி ஓர் அறிக்கை வெளியிடுவது சம்பந்தமாகத் தாம் செய்துகொள்ள விரும்பக் கூடிய யாதொரு ஆட்சேபணையைச் செய்து கொள்ளலாம்.

*(4)* ஷை ஆட்சேபணை எழுத்து மூலமாயிருக்க வேண்டும்; மேலும் அது, மேற்சொன்ன நோட்டிஸில் குறிப்பிடப்படும் காலம் கழிந்து போவதற்கு முன்பாவது அதற்கு மேற்பட்டு ஆணையரால் கொடுக்கப்படக்கூடிய காலத்துக்குள்ளாவது ஆணையரிடம் வந்து சேர வேண்டும்,

*72.* **ஆட்சேபணைகள் எவையேனுமிருந்தால் அவைகளைப்பற்றி ஆலோசனை செய்வதும், நிலயத்தைப்பற்றி அறிக்கையிடுவது.**—*(1)* மேலே கண்டபடி குறிப்பிட்ட அல்லது கொடுக்கப்பட்ட காலத்துக்குள் அப்படிப்பட்ட எந்த ஆட்சேபணையும் வந்து சேராவிட்டால், அரசாங்கத்தார் அந்தப்படிக் கண்டு ஆணையரிடமிருந்து ரிபோர்ட் வரப் பெற்றுக்கொள்வதன்பேரில், விளம்பரம் வெளியிட்டு அதன் மூலமாய், ஷை அறநிலையம் இந்த அத்தியாயத்தின் ஷரத்துகளுக்கு உட்பட்டிருக்க வேண்டுமென்று அறிவிக்கலாம்.

*(2)* மேலே கண்டபடி குறிப்பிடப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட காலத்துக்குள் அத்தகைய ஆட்சேபணைகள் எவையேனும் வந்து சேர்ந்திருந்தால் ஆணையரானவர் ஷை ஆட்சேபணைகளைக் குறித்து நிர்ணயிக்கப்பட்ட விதமாக ஒரு விசாரணை நடத்தி, ஷை நிலயம் இந்த அத்தியாயத்தின் ஷரத்துகளுக்கு உட்பட்டிருக்குமென்று அறிக்கையிடவேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

*(3)* மேற்சொன்ன விதமான அந்த ஸ்தாபனம் அறிக்கையிடப்பட வேண்டுமென்று ஆணையர் தீர்மானித்தால், அவர் அந்தப்படிக் கண்டுள்ள ரிபோர்ட் ஒன்றை அரசாங்கத்தாருக்கு அனுப்ப வேண்டும். அதன்பேரில் அவர்கள் விளம்பரம் மூலமாக, ஷை அறநிலையம் இந்த அத்தியாயத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டிருக்க வேண்டுமென்று அறிவிக்கலாம்.

*(4).* *(1)* உட்பிரிவின்படி அல்லது *(3)* உட்பிரிவின்படி வெளியிட விளம்பரத்தினல் பாதிக்கப்பட்ட யாதொரு தர்மகர்த்தர் அல்லது யாதொரு அக்கரையுள்ள நபர் ஷை பிரசுரத்தின் வெளியீட்டுத் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் ஷை விளம்பரத்தை ரத்து செய்வதற்காக வழக்குத் தொடரலாம். கோர்ட்டார் ஷை விளம்பரத்தை ரத்துசெய்ய வேண்டுமெனக் கட்டளையிட்டால் அரசாங்கத்தார் அவ்வாறே செய்யவேண்டும்.

ஆனல் வழக்கு பைசலாகாமலிருக்கும் வரையில் ஷை விளம்பரத்தின் பிரயோகத்தை

நிறுத்திவைக்க நீதிமன்றத்தாருக்கு அதிகாரம் இல்லை.

(5) கோர்ட்டாரின் (4) உட்பிரிவின் படிக்கான டிக்ரி ஒன்றினால் துன்பமடைந்த யாதொரு கட்சிக்காரர் டிகிரியின் தேதியிலிருந்து தொண்ணூறு தினங்களுக்குள் உயர்நீதி மன்றத்தாருக்கு அப்பீல் செய்துகொள்ளவேண்டும்.

(6). (4), (5) உட்பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, (1) உட்பிரிவு அல்லது (3) உட்பிரிவின் படிக்கான ஒரு விளம்பரத்தைப் பிரசுரித்த பிறகு எப்போதாகிலும் அரசாங்கத்தார் ஷை அறநிலையத்தின் நிர்வாகம் தீய முறையில் நடைபெறவில்லை எனச் சந்தேகமறத் தெரிந்துகொண்டால், அவர்கள் ஷை சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்பாகவே மேற்கண்ட விளம்பரத்தை ரத்துசெய்யலாம்.

(7). இச்சட்டத்தின் தொடக்கத்துக்கு முன்பு 1951-ம் ஆண்டு சென்னை இந்து அறநிலைப் பாதுகாப்புச் சட்டத்தின் (சென்னை 1951-ம் ஆண்டு 19-வது சட்டம்) 64-வது பிரிவின் (1) உட்பிரிவின்படி அல்லது (3) உட்பிரிவின்படி வெளியிடப்பட்ட விளம்பரமானது, ஷை சட்டத்தின்படிப் பிரிசுரிக்கப்பட்டதைப் போலவே செல்லுபடியுள்ளதாகும்.

ஆனால், இச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று, 1951-ம் ஆண்டு சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் (சென்னை 1951-ம் ஆண்டு 19-வது சட்டம்) 64—வது பிரிவின்படிக்கு விளம்பரம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினக் காலஅளவு கழிந்துவிட்டிருந்தால் இப் பிரிவின் (4) உட்பிரிவின்படி எந்த வழக்கும் தொடரப்படலாகாது.

மேலும், இச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று ஷை சட்டத்தின் 64-வது பிரிவின் படிக்கான விளம்பரம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து, முப்பது தினக்கால அளவு கழியாமலிருந்தால், இப் பிரிவின் (4) உட்பிரிவின் காரியங்களுக்காக ஷை விளம்பரம் வெளியிடப்பட்ட தேதி, ஷை சட்டத்தின்படி மேற்கூறிய விளம்பரம் வெளியிடப்பட்ட தேதியாக இருக்கவேண்டும்.

**73. அறிக்கையிடப்படுவதன் பேரில் திட்டம் செலாவணியற்றுப்போகும் என்பது:**—ஷை விளம்பரம் பிரிசுரிக்கப்படுவதன் பேரில், பிரஸ்தாப அறநிலையத்துக்காக இச் சட்டம் செலாவணியாகத் தொடங்கிய தேதிக்கு முன்போ பிறகோ பரிபாலன ஏற்பாடு ஏதேனும் நிச்சயிக்கப்பட்டிருந்தால் அந்த ஏற்பாடும் அந்த ஏற்பாட்டின்படி செய்யப்பட்ட விதிகள் எவையேனுமிருந்தால் அப்படிப் பட்ட சகல விதிகளும் ஷை நிலையத்துக்குப் பிரயோகப்படாமல் நின்றுபோவதோடு பிரயோகமற்றுப்போகும். மேலும், 72-வது பிரிவின் (6) உட்பிரிவின்படி விளம்பரம் ரத்து செய்யப்படுவது காரணமாக அந்த ஏற்பாடும் விதிகளும் உயிர்ப்பித்திருப்பனவாகக் கருதப்பட மாட்டா.

**74. சம்பளம் பெறும் நிர்வாக அலுவலரை நியமிப்பது:**— இந்த அத்தியாயத்தின்படி அறிக்கையிடப்பட்ட ஒவ்வொரு ஸ்தாபனத்துக்காகவும், ஆணையர் சம்பளம் பெறும் நிர்வாக அலுவலர் ஒருவரைக் கூடிய சீக்கிரத்தில் நியமிக்கவேண்டும். அவ்வலுவலர் இந்து மதத்தைச் சேர்ந்தவராயிருக்கவேண்டும்.

**75. 64-வது பிரிவு அறிக்கையிடப்பட்ட ஸ்தாபனங்களுக்குப் பயன்படாதென்பது:**—(1) இந்த அத்தியாயத்தின்படியாவது 1951-ம் ஆண்டு இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தில் (சென்னை 1951-ம் ஆண்டு 19-வது சட்டம்) கண்ட VI-ம் அத்தியாயத்தின்படியாவது அல்லது இந்து மதக் கட்டளைகளை குறித்த 1926-ம் ஆண்டு சென்னபட்டணத்துச் சட்டத்தில் (சென்னை 1927-ம் ஆண்டு 2-வது சட்டம்) கண்ட VI-A அத்தியாயத்தின் படியாவது அறிக்கையிடப்பட்ட யாதொரு அறநிலையத்துக்கு ஷை அறிக்கை அமுலிலிருக்கிறவரையில் 64-வது பிரிவு பயன்படாது; மேலும், அந்த அறநிலைய விஷயமாக எந்தப் பிராந்தியக் குழுவும் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் கூடாது.

(2) (1) உட்பிரிவில் கண்டுள்ளதெதுவும், ஒரு விளம்பரம் அமுலிலிருக்கும்போதே அந்தத் திட்டத்தை நிச்சயித்து அது 64-வது பிரிவின்கீழ் ஷை விளம்பரம் அமுலிலிருப்பது அற்றுப்போவதற்கு அடுத்துப் பின்னர் அமுலுக்கு வருவதைத் தடுப்பதாக அர்த்தம் செய்துகொள்ளப்படக் கூடாது.

76. விலக்கு:—இந்த அத்தியாயத்தில் கண்டுள்ளதெதுவும், மடங்கள் அல்லது இதர அறநிலையங்களின் வருமானத்தில் பிரயோசனகரமான பாத்தியதையுள்ள பரம்பரையான தர்மகர்த்தாக்களைக் கொண்டுள்ள மடங்களுக்கு அல்லது இதர அறநிலையங்களுக்குப் பயன்படமாட்டாது.

## அத்தியாயம் VII.

### ஆக்கிரமிப்புகள்.

77. சில பிரத்தியேக விஷயங்களில் தவிர அறநிலையங்களைச் சேர்ந்த அல்லது அறநிலையங்களை அடுத்துள்ள நிலங்களை மாற்றுவது தடை செய்யப்பட்டது என்பது:—34-வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே அறநிலையம் ஒன்றின் எந்தத் தர்மகர்த்தரும்—

(a) அறநிலையத்துக்குச் சொந்தமானதும், ஷெ அறநிலையத்தைச் சேர்ந்திருப்பதும் அதை அடுத்துள்ளதுமான யாதொரு நிலம் அல்லது ஷெ அறநிலையத்தைச் சேர்ந்திருக்கிற யாதொரு புனிதமான குளம், கிணறு, ஊற்று அல்லது தண்ணீர் வழி—இவைகள் ஷெ வளவுகளுக்குள் இருந்தாலும் சரி, வெளியேயிருந்தாலும் சரி, அல்லது,

(b) அறநிலையத்தைச் சேர்ந்த பிராகாரங்கள், மண்டபங்கள், கூடங்கள் அல்லது தாழ்வாரங்கள் இவைகளுக்குள்ளோ, வெளியிலோ இருக்கிற யாதொரு வெற்றிடம் இவைகளின் உடைமையைக் குத்தகைக்கு விடுவதோ அல்லது கொதுவை வைப்பதோ அல்லது இவைகளை அனுபோகத்தில் வைத்துக்கொள்வதற்கு லைசென்ஸ் ஒன்றைக் கொடுப்பதோ கூடாது :

ஆனால், பிரிவில் கண்டுள்ளதெதுவும் அறநிலையத்துடன் சம்பந்தப்பட்ட திருவிழாக்களின்போது, யாத்ரீகர்களுக்கு வசதிகள் செய்துகொடுக்கும் காரியத்துக்காக அல்லது வழிபாட்டுக்காக உபயோகப்படுத்தப்படுகிற மலர்கள் அல்லது இதர பொருள்களை விற்பதற்காக அல்லது குறிப்பிட்ட காலங்களில் சந்தைகளை அல்லது பொருட்காட்சி சாலைகளை நடத்துவதற்காக அத்தகைய யாதொரு நிலத்தை அல்லது இடத்தைக் குத்தகைக்கு விடுவதற்கு அல்லது லைசென்ஸ் கொடுப்பதற்கு பயன்படமாட்டாது.

(2) (1) உட்பிரிவின் ஷரத்துக்களுக்கு விரோதமாகச் செய்யப்படும் ஷெ உடைமையின் குத்தகை, குதுவை, அதை அனுபோகத்தில், வைத்துக்கொள்வதற்கு லைசென்ஸ் கொடுப்பது ஆகியவைகள் செல்லுபடியாகாது.

(3) (1) அல்லது (2) உட்பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, (1) உட்பிரிவில் கூறப்பட்டுள்ளவையும், ஒரு அறநிலையத்தின் வளவுகளுக்கு வெளியேயுள்ளவையுமான யாதொரு நிலம் அல்லது திறந்த வெளி ஆகியவற்றின் உடைமையை (1) உட்பிரிவின் விலக்கு நிபந்தனையில் கூறப்பட்டுள்ள காரியமல்லாத மற்ற யாதொரு காரியத்துக்காக, குத்தகைக்கு விடவும், கொதுவை வைக்கவும் அல்லது அவைகளை அனுபோகத்தில் வைத்துக்கொள்வதற்கு லைசென்ஸ் ஒன்றைக் கொடுக்கவும் ஆணையர் அனுமதியளிக்கலாம்.

78. அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களை அல்லது கட்டிடங்களை ஆக்கிரமிப்பது: (1) யாதொரு நபர் அறநிலையத்துக்குச் சொந்தமானதும், மேற்படி அறநிலையத்தைச் சேர்ந்ததும் அல்லது அடுத்துள்ளதுமான யாதொரு நிலத்தை அல்லது கட்டிடத்தை அல்லது அந்த அறநிலையத்தைச் சேர்ந்த புனிதமான குளம், கிணறு, ஊற்று அல்லது நீர்வழி—இவைகள் ஷெ வளவுகளுக்குள் இருந்தாலும் சரி, வெளியேயிருந்தாலும் சரி, அல்லது அறநிலையத்தைச் சேர்ந்த பிராகாரங்கள், மண்டபங்கள், கூடங்கள் அல்லது தாழ்வாரங்களுக்கு உள்ளே அல்லது வெளியேயுள்ள யாதொரு வெற்றிடம் இவைகளை (இதில் பின்னால் இச்சட்டத்தில் ஆக்கிரமிப்பாளர் எனக் குறிப்பிடப்படுகிற) யாதொரு நபர் ஆக்கிரமித்துள்ளாரென்று அந்த அறநிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின்மீது விசாரணை அதிகாரமுள்ள உதவி ஆணையர் நம்பக் காரணமிருந்தால், உதவி ஆணையர் ஷெ விஷயத்தை அவசியமான விவரங்களுடன் ஷெ அறநிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின் விசாரணை அதிகார

முள்ள துணை ஆணையருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(2) துணை ஆணையர், மேல்சொன்னபடி ஒரு ஆக்கிரமிப்பு நடந்திருக்கிறது என்று சந்தேகமறத் தெரிந்துகொள்வதன்பேரில், ஷெ ஆக்கிரமிப்பின் விவரங்களைக் குறித்துள்ள நோட்டீஸ் ஒன்றை ஆக்கிரமிப்பாளருக்கு அனுப்பிவைப்பதுமல்லாமல் அந்த நோட்டிஸில் குறிப்பிட்டுள்ள ஒரு தேதிக்கு முன் அவர் தனது ஆக்கிரமிப்பை அகற்றிக் கொள்ளவேண்டும் என்று அவரைக் கோருகின்ற ஓர் உத்தரவு ஏன் பிறப்பிக்கக்கூடாது எனக் காரணம் காட்டுமாறு அவரைக் கேட்கவும் செய்யலாம். ஷெ நோட்டிஸின் நகல் ஒன்று சம்பந்தப்பட்ட அறநிலையத்தின் தர்மகர்த்தருக்கும் கூட அனுப்பப்பட வேண்டும்.

(3). (2) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள நோட்டிஸானது நிர்ணயிக்கப்படக்கூடிய விதப்படி சார்வை செய்யப்பட வேண்டும்.

(4) துணை ஆணையர், (2) உட்பிரிவில் சொல்லப்பட்டுள்ள நோட்டிஸில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்குள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும், தர்மகர்த்தரிடமிருந்தும் வந்து சேருகின்ற எவையேனும் ஆட்சேபணைகளை ஆலோசனைக் கெடுத்துக்கொண்ட பிறகு, அவர் ஆக்கிரமிப்பு நடந்திருக்கிறது என நிச்சயிப்பாரானால் அவர் ஒரு உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாக அந்த உத்தரவில் குறிப்பிட்டுள்ள ஒரு தேதிக்கு முன்பு தனது ஆக்கிரமிப்பை அகற்றவேண்டும். ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தின் அல்லது கட்டிடத்தின் உடைமையை தர்மகர்த்தரிடம் கொடுத்துவிடுமாறு கோரலாம்.

(5) துணை ஆணையரின் உத்தரவானது, எழுத்து மூலமாக இருப்பதோடு செய்யப்பட வேண்டும். மேலும் அதில், ஆக்கிரமிப்பு நடந்திருக்கிறது. அவர் உத்தரவு பிறப்பித்ததற்கான காரணங்களும் கண்டிருக்கவேண்டும்.

79. **78-வது பிரிவின்கீழ் துணை ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளுக்கெதிராக அப்பீல்கள்:**—(1) 78-வது பிரிவின்கீழ் துணை ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவினால் துன்பமடைந்த யாதொரு நபர், அவருக்கு அத்தகைய உத்தரவு கிடைத்த தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள், ஆணையருக்கு எழுத்து மூலமாக அப்பீல் ஒன்றைக் கொடுத்துக்கொள்ளலாம்.

(2) அப்படிப்பட்ட அப்பீல் கொடுத்துக் கொள்ளப்படுவதன்பேரில் ஆணையர், அந்த அப்பீல் முடிவு செய்யப்படும் வரையில் ஷெ விஷயம் சம்பந்தமாக மேற்கொண்டும் நடவடிக்கைகள் எடுப்பதை நிறுத்திவைத்து உத்தரவு செய்யலாம்.

(3) ஆணையர் துணை ஆணையரிடமிருந்து ஷெ விஷயம் சம்பந்தமான சகல ரெகார்டுகளையும் வரவழைக்க வேண்டும்; மேலும் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதப்படி, அப்பீல் வாதிக்கும், அறநிலையத்தின் தர்மகர்த்தருக்கும் நோட்டிஸ் கொடுத்த பிறகும் அவசியமானால், அவர் தகுதியென்று கருதி மேற்கொண்டு விசாரணையைச்செய்த பிறகும் ஷெ அப்பீலை முடிவு செய்யலாம்.

(4) ஆணையரது முடிவும், அத்தகைய முடிவுக்குட்பட்டு துணை ஆணையரின் உத்தரவும் அறுதியானதாகும்; மேலும் அவை ஆக்கிரமிப்பு சம்பந்தமான முடிவான சாட்சியமாகும்.

ஆனால், இந்தப் பிரிவில், கண்டுள்ளதெதுவும் ஆக்கிரமிப்பாளர் விசாரணை அதிகாரமுள்ள ஒரு சிவில் நீதிமன்றத்தில் ஷெ அந்த அறநிலைய நிலத்தில் அல்லது கட்டிடத்தில் யாதொரு பாத்தியதையும் கிடையாது என்று வழக்குத் தொடருவதை தடுப்பதாகாது.

(5) (1) உட்பிரிவின்கீழ் துணை ஆணையரது உத்தரவுக்கெதிராக அப்பீல் எதுவும் கொடுத்துக்கொள்ளப்படாத விஷயத்தில் அல்லது அப்பீல் என்று கொடுத்துக்கொள்ளப்பட்டிருந்து அது தள்ளிவிடப்பட்டிருக்கும் விஷயத்தில் உதவி ஆணையர் ஆக்கிரமிப்பை அகற்றுவதுமல்லாமல் அவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தின அல்லது கட்டிடத்தின் உடைமையைப் பெற்றுக் கொள்ளலாம். இது காரியத்துக்காக, யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தரின் உதவி கோரப்பட்டால், அவர் உதவி ஆணையருக்கு அவசியமான உதவியைச் செய்யக் கடமைப்பட்டவராவார்.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

### மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த

## திருப்பள்ளியெழுச்சி

புவனியில் போய்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே,

[அமுதமே ! இந்தப் பூவுலகம் சிவபெருமான் உயிர்களை ஆட்கொண்டருளுகின்ற முறைமை யுடையது என்று பார்த்து, வாழ்நாளை வீணாக்குகின்றோமே யென்று, திருமாலும் நான்முகனும் விருப்ப மடையவும், நீயும் நினது திருவருட்சத்தியும், இந்தபூமியின் கண்ணே போந்தருளி எங்களை அடிமை கொள்ளவல்லவனே ! திருப்பெருந்துறை யுறைவானே ! திருப்பள்ளிவிட்டெழுந்தருள்க.]

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

### ஆண்டாள் அருளிச்செய்த

## திருப்பாவை

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கட் டிருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றையணி புதுவைப்
பைங்கமலத் தண்டெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பா ரீரிரண்டு மால்வரைத்தோள்
செங்கட் டிருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்.

[திருப்பாற்கடலைக்கடைந்த ஸ்ரீயப்பதியான கண்ணனை சந்திரன் போன்ற முகத்தையுடைய வரும் அழகிய அணிகலன்களுடையவருமான ஆய்ச்சியர் சென்று வணங்கிப் பலன்வரலாற்றை ஸ்ரீவில்லி புத்தூர் பெரியாழ்வாருடைய திருமகளான ஆண்டாள் அருளிச்செய்த முப்பது பாடல்களையும் தப்பாமல் ஓதுகின்றவர்கள், நான்கு திருத்தோள்களும் சிவந்த திருக்கண்களுடைய எம்பெருமானால் எல்லாவிடத் தும் திருவருள் பெற்றுப் பேரானந்தமடைவர்.]

## அடியவர் திருநட்சத்திரங்கள்


சார்வரி—பங்குனி

**சைவம்**

*9உ—நேச நாயனார்*
*11உ—கணநாத நாயனார்*
*13உ—முனையடுவார் நாயனார்*

**வைணவம்**

*21உ—காரைக்கால் அம்மையார்*
*29உ—தண்டியடிகள் நாயனார்*



சென்னை கந்தசாமி கோயில்

Edited and Published by the Commissioner, Hindu Religious and
Charitable Endowments (Administration) Department, Madras-6.
Printed at Paari Achakam, 127, Broadway Madras-1.